வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2021

2021 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை

செலவினத் தலைப்பு இல. - 402

கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	2 - 31
விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்	32 - 52
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகம்	53 - 71
இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவகம்	72 - 110
சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபை	111 - 138

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரக் குறிப்பு / செயற்படுத்தல் பொழிப்பு

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

அத்தியாயம் 03 - ஆண்டின் மொத்தச் செயலாற்றுகை

அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள்

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்துகொள்வதற்கான செயலாற்றுகை

அத்தியாயம் 06 - மனித வளங்கள் பற்றிய விபரம்

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை



கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2021

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரக் குறிப்பு / செயற்படுத்தல் பொழிப்பு

1.1 அறிமுகம்

வெறுமனே மனித செயற்பாட்டினைத் தாண்டிச் சென்று வெற்றி பெறுவதற்கும், சிறந்த உடல் மற்றும் எள ஆரோக்கியத்தை கட்டியெழுப்புவதற்கும் மனிதனுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் விளையாட்டு மனித நாகரீகத்தின் ஆரம்ப காலம் வரையான நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. அவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த விளையாட்டுத்துறை இந்த நாட்டின் நிருவாகத்தின் சிறப்பு விடயப் பரப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டு 1966 ஆம் ஆண்டில் முதல் முறையாக விளையாட்டுத்துறை அமைச்சு தாபிக்கப்பட்டது.

இலங்கையில் விளையாட்டுத்துறையில் கிராமம் மற்றும் நகரம் என்பவற்றுக்கிடையில் நிலவும் சமத்துவமின்மை சம்பந்தமாக அநேகமாக விவாதத்திற்குட்பட்டுள்ள இந்தப் பினன்னியில் 2020 ஆம் ஆண்டில் ஆட்சியமைத்த அரசாங்கத்தினால் 2020.08.09 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2187/27ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானிக்கமைய கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டது.

இந்த நாட்டில் சர்வதேச ரீதியில் விளையாட்டுத்துறை சார்ந்த வெற்றிகளைப் பெற்றுக்கொண்டுள்ள அநேகமான விளையாட்டு வீர வீராங்கனைகள் பற்றி நோக்கும்போது அவர்கள் உருவாகிய பின்னணி கிராமிய அல்லது பாடசாலை விளையாட்டு மைதானம் என்ற விடயத்தைக் கண்டுகொள்ள முடியுமாக இருக்கின்றது. எனவே எதிர்காலத்தில் அவ்வாறு உருவாகும் திறமைமிக்க விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு தமது விளையாட்டுத் திறமைகளை வளர்த்துக்கொள்வதற்கான வசதிகளை வழங்குவதே கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் எதிர்பார்ப்பாகும்.

1.2 நிறுவனத்தின் தூர நோக்கு, செயற் பணி, நோக்கங்கள்

தூர நோக்கு

"பலம் பொருந்திய சமூகமொன்றை தோற்றுவித்தல்"

செயற்பணி

"கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், முழுமையான விளையாட்டுத்துறைக் கல்வி மற்றும் விளையாட்டுத்துறை மருத்துவத்தை விருத்தி செய்வதனூடாக பலம் பொருந்திய சந்ததியொன்றை தோற்றுவிப்பதற்கு பங்களிப்புச் செலுத்தல்"

நோக்கங்கள்

1. சிறுவர் மற்றும் இளம் வீர / வீராங்கனைகளின் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன் விருத்திக்குத் தேவையான வாய்ப்புக்களை விரிவுபடுத்தல்.
2. பாடசாலை மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகள், ஆளுமை, ஒழுக்கம் மற்றும் பலம் ஆகியவற்றை மேம்படுத்தல்.
3. ஆரோக்கியமான பரம்பரையொன்றை உருவாக்குவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு வினைத்திறன்மிக்க வகையில் பங்களிப்பைபெற்றுக்கொள்ளல்.
4. சுய ஒழுக்கம் மற்றும் ஆன்மீகப் பண்புகளைக்கொண்ட சந்ததியொன்றை உருவாக்குதல்.
5. விளையாட்டின் மூலம் இலங்கையை சர்வதேச மட்டத்திற்கு கொண்டுசெல்ல முடியுமான இளைஞர் சந்ததியொன்றை உருவாக்குதல்.

1.3 பிரதான அலுவல்கள்

- இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் அடிப்படையில் ''பலம்மிக்க சந்ததியொன்றை உருவாக்குதல்''எனும் நோக்கில் ஏற்புடைய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கமைய கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு விடயத்துடன் தொடர்புடைய கொள்கை உருவாக்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல்,
- தேசிய வரவு செலவுத் திட்டம், அரச முதலீடுகள், தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் காணப்படும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- அமைச்சின் கீழ் நிலவும் நியதிச் சட்ட நிறுவனங்களின் விடயப் பரப்புக்கள் மற்றும் அலுவல்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல், பின்னூட்டலை மேற்கொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

சிறப்பு முன்னுரிமைகள் மற்றும் இனங்காணப்பட்ட செயற்பாடுகள்

கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இனங்கண்டுகொள்ளப்பட்டுள்ள சிறப்பு முன்னுரிமைகள் மற்றும் செயற்பாடுகளை 02 பிரதான அபிவிருத்தி இலக்குகளாகப் பிரிக்க முடியும்.

அபிவிருத்தி இலக்குகள்

01. விளையாட்டில் ஆர்வமுடைய பலம்மிக்க சந்ததியொன்றை உருவாக்குதல்.

நோக்கங்கள்

- தேசிய அபிவிருத்திக்குத் தேவையான ஆரோக்கியமான மக்களை உருவாக்குதல்
- விளையாட்டின் மீது மக்களின் ஈர்ப்பை பெற்றுக்கொள்ளல்.
- சமூக விரோத செயற்பாடுகளைக் குறைத்தல்.

அபிவிருத்தி மூலோபாயங்கள்

(1) இளைஞர்களின் பலத்தை சமூக விரோத நடவடிக்கைகளிலிருந்து தடுத்து பாடசாலைக் கல்வியிலிருந்து இணைப்பாட விதான செயற்பாடுகளாகவும், இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஊடாகவும் விளையாட்டுத்துறையை இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்.

(2) கல்வி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக உடற்கல்வி மற்றும் விளையாட்டுக்களுக்கு பாடசாலைப் பிள்ளைகளை கவரச் செய்வதன் ஊடாக ஆரோக்கியம்மிக்க சிறுவர் சந்ததியொன்றைத் தோற்றுவிப்பதற்கான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

(3) நாடு பூராவும் வியாபித்திருக்கும் கிராமியப் பாடசாலைகளில் விளையாட்டுத்துறையில் திறமை காட்டும் பிள்ளைகளை சிறு வயதிலேயே இனங்கண்டு அவர்களது திறமைகளை சர்வதேச மட்டம் வரை கொண்டுசெல்வதற்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் பயிற்சி உட்பட்ட வசதிகளை வழங்கும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

(4) விளையாட்டு ஆலோசகர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் உடற் பயிற்சி பயிற்றுவிப்பாளர்கள் (பிஷியோதெரபிஸ்ட்) போன்ற விளையாட்டுத்துறையின் அபிவிருத்திக்குத் தேவையான வளவாளர்களை உருவாக்குவதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்

02. விளையாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான பௌதிக மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி


நோக்கங்கள்

- சர்வதேச மட்டத்திலான அறிவைக்கொண்ட விளையாட்டுத்துறை வளவாளர்களை உருவாக்குதல்.
- சர்வதேச தரங்களைக் கொண்ட விளையாட்டுத்துறை பௌதிக வளங்கள் அபிவிருத்தி

அபிவிருத்தி மூலோபாயங்கள்

(1) நாடு பூராவும் அமைந்துள்ள விளையாட்டரங்குகள் மற்றும் விளையாட்டு மைதானங்களை தரப்படுத்தலுக்குட்படுத்தி அவற்றை பொருத்தமான பிரகாரம் அபிவிருத்தி செய்தல்.
(2) உள்நாட்டு பாரம்பரிய விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத் திட்டமொன்றை தயாரித்தல்
(3) சர்வதேச தரங்களுக்கமைய விளையாட்டுத்துறைக் கல்வியை விரிவுபடுத்தல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் / திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் / மாவட்ட செயலகங்களின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

ஏற்புடையதாகாது

1.6 அமைச்சு / திணைக்களம் /மாகாண சபைகளின் கீழுள்ள நிறுவனங்கள்

அமைச்சின் கீழ் நிலவும் செயற்படும் நிறுவனங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்
- தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகம்
- இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவகம்
- சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபை

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் (இருப்பின்)

ஏற்புடையதாகாது

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 விசேட வெற்றிகள்

2020.08.09 ஆம் திகதி தாபிக்கப்பட்ட இந்த அமைச்சின் பணிகள் உத்தியோகபூர்வமாக அன்றைய தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டாலும் அந்த ஆண்டில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படாமையின் காரணமாக அமைச்சின் செயல் திட்டத்திற்கமைய பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் 2021 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. எனவே 2021 ஆம் ஆண்டு இந்த அமைச்சுக்கு முக்கியமானதொரு ஆண்டாகும்.

2021 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டுக்கள் உட்டகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக இந்த அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்ப்பட்ட 3000 மில்லியன் ரூபா நிதியைப் பயன்படுத்தி கீழ் குறிப்பிடப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமைச்சினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

2021 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

1) விளையாட்டுப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்
2) கிராமிய விளையாட்டு மைதானங்களை புனரமைக்கும் நிகழ்ச்சித் திட்டம்
3) பாடசாலைகளில் விளையாட்டுக்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்
4) பொது விளையாட்டு மைதானங்களை தரப்படுத்தல் அடிப்படையில் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்
5) ‘‘கிராமத்துடனான கலந்துரையாடல் ‘‘நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அமைச்சினூடாக மிகக் கஷ்டப் பிரதேசங்களில் இனங்கண்டுகொள்ளப்பட்ட விளையாட்டு வசதிகள் அபிவிருத்தி மற்றும் ஏனையவை.
6) பாரம்பரிய விளையாட்டுக்களை ஊக்குவித்தல் நிகழ்ச்சித் திட்டம்
7) விளையாட்டு உபகரணங்கள் / உபகரணங்கள் மற்றும் ஏனைய விளையாட்டு வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்
8) விளையாட்டுக்கள் தொடர்பான பிரச்சார நிகழ்ச்சித் திட்டம்
9) டிஜிட்டல் தரவுத் தொகுதியொன்றைத் தாபித்தல்
10) தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தை விளையாட்டுத்துறைப் பல்கலைக்கழகமொன்றாகத் தரமுயர்த்தல்.
11) கிராமிய மற்றும் பிரதேச மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளை ஏற்பாடு செய்தல்.

1. விளையாட்டுப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்

சர்வதேச வெற்றிக்காகச் செல்லும் விளையாட்டு வீர வீராங்களை உருவாக்குவதற்காக சிறு வயதிலிருந்தே திறமை காட்டும் பிள்ளைகளை இனங்கண்டு அவர்களுக்கு உரிய ஊட்டச்சத்து மற்றும் பயிற்சியை வழங்கிப் பாதுகாத்தல் வேண்டும். இந்த நோக்கத்தை முன்னிறுத்தி 1989 ஆம் ஆண்டில் முதல் முறையாக இந்த நாட்டில் விளையாட்டுப் பாடசாலைகளாக இனங்கண்டு கொள்ளப்பட்ட 25 சிறப்புப் பாடசாலைகள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப் பாடசாலைகளில் 8 ஆம் தரத்திற்கொன தனியான வகுப்பொன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன், அண்டிய பாடசாலைகளில் விளையாட்டுக்களில் திறமை காட்டும் பிள்ளைகளை அந்த வகுப்புக்கு அனுமதித்து கல்வி நடவடிக்கைகளுடன் இணையான வகையில் விளையாட்டு நடவடிக்கைகளையும் வளர்த்துக்கொள்ளுதல் இதன் அடிப்படை நோக்கமாகும்.

அண்மைக் காலமாக இந்த நாட்டு விளையாட்டுத்துறையில் ஏற்பட்டுள்ள பின்னடைவுக்குத் தீர்வாக விளையாட்டுப் பாடசாலைகளினூடாக உருவாக்கப்படும் திறமைகளைக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மீது தற்போதைய அரசாங்கத்தின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய கல்வி அமைச்சினால் மேலும் 05 பாடசாலைகளை விளையாட்டுப் பாடசாலைகளாகப் பெயரிட்டு இந்த நாட்டின் விளையாட்டுப் பாடசாலைகளின் எண்ணிக்கையை 30 வரை அதிகரிக்கப்பட்டது. இவ்வாறு பெயரிடப்பட்ட பாடசாலைகளில் 2021 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு

செய்யப்பட்ட நிதியூடாக அபிவிருத்தி செய்ய வேண்டிய 16 பாடசாலைகள் கல்வி அமைச்சினதும் ஒத்துழைப்புடன் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுப் பாடசாலைகளுக்காக 2021 ஆம் ஆண்டில் அமைச்சினால் 213.1 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன், அந்தப் பாடசாலை விடுதிகளின் அத்தியாவசிய புனரமைப்பு நடவடிக்கைகளைப் போன்றே விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஏனைய அத்தியாவசிய அபிவிருத்தி நடவடிக்கைகள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தினூடாக மேற்கொள்ளப்பட்டது.

2021 ஆம் ஆண் ஆண்டில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட விளையாட்டுப் பாடசாலைகள் பற்றிய விபரம்

பாடசாலையின் பெயர்
01. அக்குரம்பொட மத்திய கல்லூரி, மாத்தளை
02. வெலிமடை மத்திய கல்லூரி, பதுளை
03. வலல ஏ.ரத்னாயக்க மத்திய கல்லூரி, கண்டி
04. பொரமடுல்ல மத்திய கல்லூரி, நுவரெலியா
05. சிலாபம் ஆனமடுவ மத்திய கல்லூரி, புத்தளம்
06. ஹங்வெல்ல ராஜசிங்க மத்திய கல்லூரி,கொழும்பு
07. ஹேனேகம மத்திய கல்லூரி, கம்பஹா
08. அனுராதபுரம் மத்திய கல்லூரி, அனுராதபுரம்
09. ரோயல் மத்திய கல்லூரி, பொலன்னறுவை
10. டீ.எஸ்.சேனாநாயக்க மத்திய கல்லூரி, அம்பாறை
11. புனித ஜோசப் கல்லூரி, திருகோணமலை
12. இரத்மலானை இந்துக் கல்லூரி, கொழும்பு
13. சங்கமித்தா மகளிர் கல்லூரி, காலி
14. திக்வெல்ல வழஜித்த கல்லூரி, மாத்தறை
15. முருங்கன் மகா வித்தியாலயம், மன்னார்
16. யாழ்ப்பாண மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்

2. கிராமிய விளையாட்டு மைதானங்களை புனரமைக்கும் நிகழ்ச்சித் திட்டம்

அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் விளையாட்டு மைதானமொன்றை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பிரதேச அபிவிருத்திக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கிராமிய விளையாட்டு மைதானமொன்றில் தேவைப்பாட்டிற்கமைய கரப்பந்து, வலைப்பந்து போன்ற விளையாட்டுக்களுக்குப் பொருத்தமான வகையில் அமைத்தல், வலைகளை வழங்குதல், மின்சார வசதிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக ஒதுக்கப்பட்ட 500.0 மில்லியன் ரூபா நிதியை மாவட்ட செயலாளர்களுக்கு விடுவிக்கும் அலுவலை இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சும் பொருத்தமான கருத்திட்டங்களைத் தெரிவு செய்தல், அங்கீகரித்தல், முன்னேற்றத்தை கண்காணித்தல் மற்றும் பின்னூட்டல் அலுவல்கள் இந்த அமைச்சினாலும் மேற்கொள்ளப்பட்டன.

நாடு பூராவும் 334 கிராமிய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி நடவடிக்கை 2021 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆண்டிறுதியில் 329 விளையாட்டு மைதானங்களின் புனரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டது.

3. பாடசாலைகளில் விளையாட்டுக்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

நாட்டின் அனைத்துக் கல்வி வலயங்களுக்கும் ஒரு பாடசாலை மைதானம் வீதம் அபிவிருத்தி செய்யும் நோக்கில் விளையாட்டுக்களுக்குப் பொருத்தமான விதத்தில் மைதானத்தை தயாரித்தல், மலசலகூட வசதிகள் உள்ளிட்ட உடல் ஆரோக்கிய வசதிகள் மற்றும் ஆடைகளை மாற்றும் அறைகளுடனான (Changing Rooms) விளையாட்டு அறைகளை (Sports Rooms) நிர்மாணித்தல் அல்லது காணப்படும் வசதிகளை மேம்படுத்தல், மைதானத்திற்கு புல்லுடனான மண் கட்டிகளைப் பதித்தல் போன்ற செயற்பாடுகள் தேவைப்பாட்டிற்கமைய மேற்கொள்ளப்பட்டன. மாகாண சபை பாடசாலை மைதானங்கள் மாகாண பிரதம செயலாளர்களின் கீழும், தேசிய பாடசாலை மைதானங்கள் மாவட்ட செயலாளர்களின் கீழும் அபிவிருத்தி செய்யப்பட்டன.

இதற்காக 2021 ஆம் ஆண்டில் 304.68 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், அதில் 252.8 மில்லியன் ரூபா மாகாணப் பாடசாலைகளுக்கும் 51.88 மில்லியன் ரூபா தேசிய பாடசாலைகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அபிவிருத்தி செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட 95 பாடசாலைகளில் 63 பாடசாலை மைதானங்களின் புனரமைப்புப் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டன.

4. பொது விளையாட்டு மைதானங்களை தரப்படுத்தல் அடிப்படையில் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்

விளையாட்டுக்களுக்காக பொது மக்களின் ஈடுபாட்டை (பிரவேசத்தை) ஏற்படுத்தும் நோக்கில் பொது விளையாட்டு மைதானங்களை தரப்படுத்தல் அடிப்படையில் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. விளையாடுவதற்குப் பொருத்தமான வகையில் மைதானங்களை மேம்படுத்தல், பொது உடல் ஆரோக்கிய வசதிகளை மேம்படுத்தல், புல்லுடனான மண் கட்டிகளைப் பதித்தல் அல்லது புல் வளர்த்தல், நீர் விசிறும் கட்டமைப்புக்களை பொருத்துதல், பல விளையாட்டுக்களுக்குப் பயன்படுத்த முடியுமான வகையில் மைதானங்களை தயார் செய்தல், விளையாட்டு மைதானங்களுடன் தொடர்பான ஏனைய வசதிகளை (உடல் ஆரோக்கியம், மண்ணரிப்பைத் தடுப்பதற்கான நிர்மாணங்கள், ஆடைகளை மாற்றும் அறைகள்) வழங்குதல் போன்ற செயற்பாடுகள் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு 762.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் தொடர்புடைய உள்ளூராட்சி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

நாடு பூராவும் 155 விளையாட்டு மைதானங்களை தரப்படுத்தல் அடிப்படையில் அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டிறுதியில் 41 மைதானங்களின் அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

5. "கிராமத்துடனான கலந்துரையாடல்" நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அமைச்சினூடாக மிகக் கஷ்டப் பிரதேசங்களில் இனங்கண்டுகொள்ளப்பட்ட விளையாட்டு வசதிகள் அபிவிருத்தி மற்றும் ஏனையவை.

அதிமேதகு ஜனாதிபதியவர்களின் எண்ணக்கருவின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் " கிராமத்துடனான கலந்துரையாடல்" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பொருளாதார மற்றும் சமூக ரீதியில் கடும் கஷ்டத்தை அனுபவிக்கும் அரச பொறிமுறையின் நெருங்கிய மேற்பார்வை நடவடிக்கைகளிலிருந்து தூரத்தில் அமைந்திருக்கும் பிரதேசங்களில் வாழும் மக்களினால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளைக் கவனத்திற்கொண்டு விளையாட்டுக்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தும் பணிகள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டன. முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் இலங்கை இராணுவத்தின் ஊழியப் பங்களிப்புடன் மாவட்ட செயலாளர்களூடாக நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன் கீழ் அமைச்சுக்கு முன்வைக்கப்பட்ட 85 கருத்திட்ட முனமொழிவுகளுக்காக 147.38 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கஷ்டப் பிரதேசங்களில் காணப்படும் பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. 2021 ஆம் ஆண்டிறுதியில் 74 விளையாட்டு மைதானங்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு பொது மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

6. பாரம்பரிய விளையாட்டுக்களை ஊக்குவித்தல் நிகழ்ச்சித் திட்டம்

பாரம்பரிய விளையாட்டுக்களை ஊக்குவித்தலை ஒரு விடயமாக இந்த அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளமையினால் 'அங்கம்பொர' சண்டைக் கலை உள்ளிட்ட ஏனைய தேசிய

பாரம்பரிய விளையாட்டுக்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் 2021 ஆம் ஆண்டில் 'அங்கம்பொர' சண்டைக் கலையை ஊக்குவிப்பதற்காக 02 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன், ஆங்கிலேய காலனித்துவ ஆட்சியாளர்களால் 'அங்கம்பொர' சண்டைக் கலைக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.

7. விளையாட்டு உபகரணங்கள் / உபகரணங்கள் மற்றும் ஏனைய விளையாட்டு வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்

இந்த நாட்டில் இயங்கும் விளையாட்டுக் கழகங்களைப் போன்றே விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும் இளைஞர் கழகங்களின் அங்கத்தவர்களுக்கு மற்றும் பாடசாலைகளுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று திட்டமிடப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டில் பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை, அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களின் வளையாட்டுப் பாடசாலைகள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் சிலவற்றிற்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கும் பணிகள் அமைச்சு மற்றம் பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. இதற்காக 2.32 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.

8. விளையாட்டுக்கள் தொடர்பான பிரச்சார நிகழ்ச்சித் திட்டம்

- **"be active" விளையாட்டுக் கல்வி சஞ்சிகை**

  விளையாட்டுத்துறையுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்புக்களினதும் விளையாட்டுத்துறைக் கல்விக்கு வழிகாட்டும் வகையில் நிதமும் பயன்படுத்திக்கொள்ள முடியுமான சஞ்சிகையொன்றை தயாரித்து சுமார் 2500 பிரதிகள் அச்சிடப்பட்டு நாடு பூராவுமுள்ள பாடசாலைகளின் விளையாட்டு ஆசிரியர்கள், விளையாட்டு ஆலோசகர்கள், விளையாட்டுத்துறையுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய வாசகர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்காக 1.5 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டது. இதற்காக விளையாட்டுத்துறையின் சிறந்த அறிஞர்களைக் கொண்ட பதிப்பாசிரியர் குழுவொன்றின் அறிவு பயன்படுத்திக்கொள்ளப்பட்டது.

- **விளையாட்டு பிரச்சார வீதி நாடகத்தை நடித்தல்**

  விளையாட்டு சம்பந்தமாக மக்களின் கவனத்தை ஈர்க்கச் செய்யும் நோக்கில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வீதி நாடகக் குழுவினால் நடாத்தப்பட்ட வீதி நாடக காட்சிப்படுத்தல் தொடருக்காக 0.7 மில்லியன் ரூபா நிதி முதலீடு செய்யப்பட்டது.

- **மகளிர் தின நிகழ்ச்சித் திட்டம்**
  பெண்களின் உடற் தகுதியை மேம்படுத்தும் நோக்கில் சர்வதேச மகளிர் தினத்தை அடிப்படையாகக்கொண்டு உடற்பயிற்சி நிகழ்ச்சியொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக 0.45 மில்லியன் ரூபா நிதி முதலீடு செய்யப்பட்டது.

- **ஊவா மாகாண விளையாட்டு தொடர்பான அறிவுப் போட்டி**

  ஊவா மாகாணத்தின் 25 பிரதேச செயலகப் பிரிவுகளில் விளையாட்டுக் கழக அங்கத்தவர்களிடையே விளையாட்டுடன் தொடர்பான அறிவை விருத்தி செய்யும் நோக்கில் நடாத்தப்பட்ட விளையாட்டு தொடர்பான அறிவுப் போட்டித் தொடருக்காக 0.5 மில்லியன் ரூபா நிதி முதலீடு செய்யப்பட்டது.

- **கொவிட் தடுப்பூசித் திட்டம்**

  விளையாட்டுக்களில் ஈடுபட்டுள்ள வீரர்கள் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுதல் ஏனைய இளைஞர்களுக்கும் முன்மாதிரியாக இருக்குமென்பதனால் அதற்காக விளையாட்டு வீர வீராங்கனைகளை ஊக்குவிப்பதற்காக பொருத்தமான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் காலத்தின் தேவையாக இனங்கண்டுகொள்ளப்பட்டுள்ளதுடன், இந்த ஊக்குவிப்பை ஏற்படுத்துவதற்காகவெகுசன ஊடகங்களைப் பயன்படுத்தி கவர்ச்சிகரமான விளம்பரங்களை தயாரித்து பிரசாரம் செய்தல் துரிதமானதும் பயன்மிக்கதுமானதாக முறையாக இருப்பதன் காரணமாக அதற்குப் பொருத்தமான விதத்திலான கவர்ச்சிகரமான காணொளிகளைக்

(வீடியோ) கொண்டுள்ள விளம்பரங்களை தயாரிப்பதற்காக 6.9 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் வெகுசன ஊடக அமைச்சினால் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

9. டிஜிட்டல் தரவுத் தொகுதியொன்றைத் தாபித்தல்

முறையான தரவுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டமிடலில் ஈடுபடுதலை நோக்கமாகக்கொண்டு பூகோள ரீதியிலான தரவுத் தொகுதியொன்றை தயாரிக்கும் பணி 2021 ஆம் ஆண்டில் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டது. அதனூடாக முழு நாடும் உள்ளடக்கப்படும் வகையில் விளையாட்டுக்கான பௌதிக உட்கட்டமைப்பு வசதிகள், மனித வளங்கள் மற்றும் விளையாட்டுத்துறையுடன் தொடர்பான ஏனைய அனைத்துத் தரவுகள் மற்றும் தகவல்களை சேகரித்து பூகோள ரீதியிலான தரவுத் தொகுதியொன்றை (GIS) தயாரிப்பதற்கும், நாடு பூராவும் இருக்கும் விளையாட்டு களப் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியை வழங்கி அந்தத் தரவுத் தொகுதியை இற்றைப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

10. தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தை விளையாட்டுத்துறைப் பல்கலைக்கழகமொன்றாகத் தரமுயர்த்தல்.

இந்த நாட்டின் விளையாட்டுக் கல்வித் துறையின் அடிப்படைப் பிரச்சினையான விளையாட்டு வீர வீராங்கனைகளுக்குப் போன்றே விளையாட்டுத் துறையில் ஈடுபட்டுள்ள தொழில் வல்லுனர்களுக்கு தொழில்சார் உயர் கல்வியை வழங்கும் நிறுவனமொன்று இல்லையென்ற விடயம் இனங்கண்டுகொள்ளப்பட்டதுடன், தற்போது காணப்படும் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களுக்கு கல்வித் தகைமைகளின் அடிப்படையில் மாத்திரமே மாணவர்கள் அனுமதித்துக்கொள்ளப்படுவதனால் திறமைகளைக் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்காதிருப்பதனை அவதானிக்க முடியுமாக இருக்கின்றது.

இந்த நிலைமைக்குத் தீர்வாக விளையாட்டுத் திறமைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளும், முறையான தொழில் மற்றும் ஏனைய உயர் கல்வித் துறைக்கு வழிகாட்டும் தேசிய விளையாட்டுத்துறைப் பல்கலைக்கழகமொன்றை தாபிப்பதற்காக விளையாட்டுக் கல்வித் துறையின் அறிஞர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களைக் உள்ளடக்கிய குழுவொன்றின் ஊடாக பொருத்தமான மாதிரியொன்றை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

11. கிராமிய மற்றும் பிரதேச மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளை ஏற்பாடு செய்தல்.

கிராமியப் பிரதேசங்களில் வாழும் இளைஞர் யுவதிகளுக்கு விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்காக கிராமிய மற்றும் பிரதேச மட்டத்திலான விளையாட்டப் போட்டிகள், மரதன் மற்றும் சைக்கிளோட்டப் போட்டிகளை மாவட்ட மட்டத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தாலும் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நோய் நிலைமையின் கீழ் 02 போட்டிகளை மாத்திரமே நடாத்த முடியுமாகியத. அந்தப் போட்டிகள் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நடாத்தப்பட்டதுடன் அதற்காக 0.34 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டது.

2.2 சவால்கள்

- அமைச்சுக்கான நிதி ஏற்பாடுகள் கிடைப்பதற்கு 2021 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் முதல் மாதம் வரை தாமதமாகியமை.
- 2020 ஆம் ஆண்டில் ஆரம்பித்து இது வரையிலும் உலகிற்கு மிகவும் சவாலாக அமைந்துள்ள Covid-19 தொற்று நோய் கடந்த ஆண்டில் இந்த அமைச்சின் அலுவல்கள் மீதும் தாக்கம் செலுத்திய பிரதான சவாலாக இருந்தது. அந்த சவால் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் பிரஜைகள் ஒன்றுகூடும் வகையிலான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் சவாலாக இருந்தாலும் அதற்கு மாற்று வழியாக தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி கூட்டங்களை ஏற்பாடு செய்தல், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினூடாக பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதனூடாக சாதகமான வகையில் இந்த சவால்களை வெற்றிகொள்வதற்கு அமைச்சினால் முடியுமாகியது.

- நிர்மாணத் துறையில் மூலப் பொருட்களின் விலைகளில் துரித அதிகரிப்பு காரணமாக நிதமும் மதிப்பீடுகளில் திருத்தம் மேற்கொள்ள வேண்டியேற்பட்டமையும், அதனூடாக நிர்மாணப் பணிகளில் சில தாமதங்கள் ஏற்பட்டமையும் ஏனைய சவாலாக இருந்ததுடன், சில மூலப் பொருட்கள் சந்தையில் பற்றாக்குறையாக இருத்தலும் பிரதான தடையாக இனங்கண்டுகொள்ளப்பட்டது.

- விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்யும்போது அநேகமான உபகரணங்களை இறக்குமதி செய்ய வேண்டியேற்பட்டதுடன், அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்தமையின் காரணமாக பொருட்களின் விலைகள் அதிகரித்தமையும், இறக்குமதிகளை வரையறை செய்தமையினாலும், கடனுக்கான கடிதங்களை (Letters of credit) வெளியிடுவதில் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் உள்நாட்டுச் சந்தையில் மூலப் பொருட்களுக்கான பற்றாக்குறை நிலவியமையினால் உள்நாட்டு விளையாட்டுப் பொருட்கள் உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதில் சிக்கல்கள் ஏற்பட்டமை.

- ஆண்டின் நடுப் பகுதியில் நாடு பூராவும் நடைமுறைப்படுத்தப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் காரணமாகவும் நிர்மாணத் துறையில் ஊழியத்திற்கான பற்றாக்குறை ஏற்பட்டமையினால் நிர்மாண நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டமைக்கு காரணமாகியமை.

- அரச செலவுகளை முகாமைப்படுத்தும் நோக்கில் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் எதிர்வரும் ஆண்டுகளுக்காக தாமதப்படுத்த முடியுமான நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டின் ஒரு தொகையை மீண்டும் திறைசேரிக்கு அனுப்ப வேண்டியேற்பட்டமையினாலும் இனங்காணப்பட்ட கருத்திட்டங்களை நிறைவு செய்ய முடியவில்லை.

- பௌதிக அபிவிருத்தியைப் போன்றே மனப்பாங்கு ரீதியான அபிவிருத்தியும் இந்த விடயப் பரப்பில் இணையான வகையில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தாலும் விளையாட்டு மீதான பொது மக்களிடம் நிலவும் மனப்பாங்கை மாற்றியமைப்பதற்கு பாரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டியேற்பட்டமை.

2.3 எதிர்கால இலக்குகள்

- விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி ஊடாக வேலைப்பளுமிக்க வாழ்க்கைக்குப் பழக்கப்பட்ட மக்களின் உள அமைதிக்காக விளையாட்டை பயன்படுத்திக்கொள்ளல் மற்றும் உடல் ஆரோக்கியம்மிக்க சந்ததியொன்றை உருவாக்குதல்.

- விளையாட்டுப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதனூடாக மாணவர்களின் விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்துவதனூடாக அவர்களை சர்வதேச மட்டத்திற்கு கொண்டுசெல்லல்.

- கிராமிய மற்றும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளுடன் தொடர்புடைய வகையில் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி ஊடாக திறமைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு வாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்தல் மற்றும் பாடசாலையை விட்டுச்செல்லும் பிள்ளைகள் தவறான வழியில் செல்வதனைக் குறைத்தல்.

- திறமைமிக்க பிள்ளைகளின் விளையாட்டுக்கான தேவைப்பாடுகளை இனங்கண்டு அவர்களுக்கான வசதிகளை வழங்குவதனூடாக அவர்களுடைய விளையாட்டுடனான வாழ்க்கையை சிறப்பாக்கி சர்வதேச விளையாட்டுலகை வெற்றிகொள்வதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குதல்.

- டொரின்டன், ரீட் அவனியு, மகியங்கனை பொது விளையாட்டு மைதானம் ம்றறும் மாத்தளை ஹொகீ மைதானம் என்பவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

- இலங்கை விளையாட்டு வீர வீராங்கனைகளின் எதிர்கால உயர்கல்விக்கான பாரிய குறைபாடாக நிலவும் விளையாட்டுத்துறைப் பல்கலைக்கழகத்தை தாபித்து சாதாரண செயல்முறைக்குப் புறம்பாக விளையாட்டுத் திறமைகளை கொண்ட பிள்ளைகளுக்கு பல்கலைக்கழகத்தில் பிரவேசித்து உயர்கல்வியைக் கற்று தொழில் தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பை பெற்றுக்கொள்ளல்.

- விளையாட்டுக்களின் பல்வேறு பிரிவுகள் தொடர்பாக விரிவான ஆய்வொன்றை மேற்கொண்டு அது சம்பந்தமாக ஆராய்ச்சி வெளியீடுகளை வெளியிடல் மற்றும் ஆராய்ச்சி பற்றிய கலந்துரையாடல்களை நடாத்துவதனூடாக விளையாட்டு சார்ந்த அறிவை விரிவுபடுத்தல்.
- விளையாட்டின் மூலமாக சமூகத்தில் நேர்மறை மனப்பாங்கு ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முடியுமாக இருப்பதனால் அதற்காக பொது மக்களை ஈர்த்துக்கொள்வதற்காக விரிவான வகையிலான பிரச்சார வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.
- பாரம்பரியமாக நிலவிவரும் பாரம்பரிய விளையாட்டுக்களை இனங்கண்டு அந்த விளையாட்டுக்களை மீண்டும் சமூகமயப்படுத்துவதனூடாக சுற்றுலாத்துறை மீதான ஈர்ப்பை ஏற்படுத்தி விளையாட்டு சார்ந்த பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்புதல்.

.....

நிறுவனத் தலைவர்
பெயர் :
பதவி :
திகதி

அத்தியாயம் 03 - 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ-எப்

2021 டிசம்பர் 31 திகதியுடன் முடிவுற்ற காலத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

பாதீடு 2021		குறிப்பு	உண்மையான	மீள சீர்படுத்தப்பட்ட	
			2021	2020	
ரூ.			ரூ.	ரூ.	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமானவரி	1	-	-	ஏசீஏ -1
-	உள்ளூர் பொருட்கள், சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரி	3	-	-	
-	வரியல்லாத வருமானம் மற்றும் ஏனையவை	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகை (அ)**		-	-	
-	**வருமானமல்லாத பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணி முற்பணம்		396,807,000	102,628,000	ஏசீஏ - 3
-	வைப்புக்கள்		1,831,408	12,592,898	ஏசீஏ - 4
-	முற்பணக் கணக்கு ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கு பெறுகைகள்		6,918,492	46,428,823	ஏசீஏ - 5
	மொத்த வருமானமல்லாத பெறுகைகள்(ஆ)		-	-	
-			**405,556,901**	**161,649,721**	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ = (அ)+(ஆ)**		**405,556,901**	**161,649,721**	
	திறைசேரிக்கு மாற்றல் (ஈ)		-	129,431	
	தேறிய வருமானப் பெறுகைகள் மற்றும் வருமானம் அல்லாத பெறுகைகள் உ = (இ)-(ஈ)		**405,556,901**	**161,520,290**	
	கழிக்க: செலவினம்				
-	**மீண்டெழும் செலவினங்கள்**		-	-	
137,279,000.00	வேதனாதிகள், சம்பளங்கள் மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	121,427,125	63,488,334	
186,725,000.00	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் உதவு தொகை	6	133,007,458	47,908,766	ஏசீஏ - 2(II)
501,014,000.00	உதவு தொகை மானியங்கள் மற்றும் மாற்றல்கள்	7	277,944,380	289,531,000	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	

237,000.00	ஏனைய மீண்டெழும் செலவினங்கள	9	235,073	-	
825,255,000.00	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**532,614,036**	**400,928,099**	
	மூலதனச் செலவினம்				
498,150,000.00	மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாடு	10	322,272,466	1,698,779	ஏசீஏ - 2(II)
912,764,000.00	மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்தல்	11	83,200,799	177,030,360	
944,000,000.00	மூலதன மாற்றல்கள்	12	37,766,000	282,300,000	
-	நிதிச் சொத்துக்களை கையகப்படுத்தல்	13	-	-	
86,636,000.00	திறன் விருத்தி	14	29,339,678	19,886,033	
103,000,000.00	பிற மூலதனச் செலவுகள்	15	11,171,426	73,884,097	
2,544,550,000.00	**மொத்த மூலதனச் செலவினம் (எ)**		**483,750,369**	**554,799,270**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		11,783,275	360,606	ஏசீஏ - 4
	முற்பணக் கொடுப்பனவுகள்		6,431,231	67,547,408	ஏசீஏ - 5
	ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கு கொடுப்பனவுகள்		-	-	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**18,214,506**	**67,908,014**	
	மொத்த செலவினம் ஐ = (ஊ + எ + ஏ)		**1,034,578,910**	**1,023,635,383**	
-	**திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஒ = (உ - ஐ)**		(629,022,009)	(862,115,093)	
	பணி முற்பண இணக்கக் கூற்றுக்கமைய மீதி		(629,022,009)	(862,115,093)	ஏசீஏ - 7
	திசெம்பர் 31 திகதியன்று பணிமுற்பண மீதி		-		ஏசீஏ - 3
			(629,022,009)	(862,115,093)	

3.3 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ - பீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூ.	2020 ரூ.
நிதி அல்லாத சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ -6	711,491,113	34,630,877
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ -5/5(அ)	20,631,323	21,118,584
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ -3	-	-
மொத்த சொத்துக்கள்		**732,122,436**	**55,749,461**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		18,316,098	8,851,493
சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்		711,491,113	34,630,877
வாடகை, பணி முற்பண ஒதுக்கு	ஏசீஏ -5(ஆ)		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்கு	ஏசீஏ -4	2,315,225	12,267,091
பணி முற்பண மீதி	ஏசீஏ -3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**713,122,436**	**55,749,461**

பக்க இலக்கம் 07 முதல் 64 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்கு பற்றிய தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 65 முதல் 74 வரை உள்ளடங்கியுள்ள கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலே இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளதெனவும், அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிர்வாகத்திற்கான சிறப்பான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிக்கைப்படுத்தப்படும் நிறுவனத்தில் காணப்படுவதாகவும், நிதி நிர்வாகத்திற்காக உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் செயல்திறனை கண்காணிப்பதற்கும் அதற்கிணங்க அந்த முறைமைகளை பயன்மிக்க வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான பிரகாரம் மாற்றங்களை மேற்கொள்வதற்காக இடைக்கிடை மீளாய்வுகளை மேற்கொள்வதாகவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு அலுவலர்	கணக்கீட்டு அலுவலர்	பிரதான நிதி அலுவலர்/ பிரதான கணக்காளர்/
பெயர்:	பெயர் :	பணிப்பாளர் (நிதி)/ ஆணையாளர் (நிதி)
பதவி:	பதவி :	பதவி :
திகதி:	திகதி :	திகதி :

3.4 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ - சீ

2021 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை நிலை	மீள சீர் செய்யப்பட்ட
	2021	2020
	ரூ.	ரூ.
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		-
மொத்த வரிப் பெறுவனவுகள்	-	-
கட்டணம், மிகைக் கட்டணம், தண்டப்பணம் மற்றும் உரிமைப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானமல்லாத பெறுவனவுகள்	-	-
ஏனைய தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	21,159,297	2,716,902
பணி முற்பண பெறுவனவுகள்	396,807,000	102,628,000
முற்பணங்கள் அறவீடு	6,284,936	39,927,528
வைப்புக்கள் கிடைப்பனவு	1,633,680	12,592,898
தொழிற்பாட்டு செயற்பாடுகளிருந்தான மொத்தக் காசுப் பாய்ச்சல்கள் (அ)	**425,884,914**	**157,865,328**
கழிக்க : செலவினங்கள்		
ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுச் செலவினம்	254,067,289	51,966,098
மானியம் மற்றும் மாற்றல் செலவுகள்	1,242,453	-
ஏனைய தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள்	1,066,415	48,250,059
திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	-	129,431
முற்பணம் செலுத்தல்	6,852,198	40,883,995
வைப்புக்கள் செலுத்தல்	11,473,437	360,606
தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஆ)	**274,701,791**	**141,590,189**
தொழிற்பாட்டு செயற்பாடுகளிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள் (இ) = (அ) -(ஆ)	**151,183,123**	**16,275,140**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்		
வட்டி	-	-
பங்கிலாபம்	-	-
உரிமை நீங்கல் ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்கள் விற்பனை	-	-
துணை கடன் அறவீடுகள்	-	-
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான மொத்த காசுப் பாய்ச்சல்கள் (ஈ)	**-**	**-**
கழிக்க - செலவினங்கள்:		

பௌதீகச் சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளை கையகப்படுத்தல்	151,183,123	16,620,754
முதலீட்டு செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ)	**151,183,123**	**16,620,754**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(151,183,123)**	**(16,620,754)**
தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)= (இ) + (ஊ)	**-**	**(345,614)**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்நாட்டுக் கடன் பெறுவனவுகள்	-	-
வெளிநாட்டுக் கடன் பெறுவனவுகள்	-	-
பெறப்பட்ட மானியங்கள்	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான மொத்தக் காசுப் பாய்ச்சல் (ஏ)	**-**	**-**
<u>கழிக்க - செலவினங்கள் :</u>		
உள்நாட்டுக் கடன் மீளச் செலுத்தல்	-	-
வெளிநாட்டுக் கடன் மீளச் செலுத்தல்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டமொத்தக் காசுப் பாய்ச்சல் (ஐ)	**-**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறியகாசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	**-**	**-**
காசில் தேறிய மாற்றங்கள் (ஓ)=(எ)-(ஒ)	**-**	**(345,614)**
சனவரி 01 ஆம் திகதியன்று ஆரம்ப காசு மீதி	**-**	**345,614**
டிசம்பர் 31 ஆம் திகதியன்று இறுதிக் காசு மீதி	**-**	**-**

3.5 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

3.6 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ரூ.

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	அளவு (ரூ.)	இறுதி வருமான மதிப்பீட்டின் % ஆக

3.7 ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூ.

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு		உண்மையான செலவினம்	பயன்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு, ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் % ஆக
	ஆரம்ப நிதி ஏற்பாடு	இறுதி நிதி ஏற்பாடு		
மீண்டெழும்	816,255,000	825,255,000	532,614,036	65%
மூலதனம்	1,432,150,000	2,544,550,000	483,750,369	19%

3.8 நி.ஒ. 208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதியாக இந்தத் திணைக்களத்திற்கு / மாவட்ட செயலகத்திற்கு / மாகாண சபைக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு

ரூ.

தொடர் இல.	அமைச்சு / திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு		உண்மை செலவினம்	பயன்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு,வழங்கப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் % ஆக
			ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		

3.9 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கைப்படுத்தல் செயலாற்றுகை

ரூ.

சொத்துக்கள் குறியீடு	குறியீட்டின் விபரம்	31.12.2021 ஆம் திகதியன்று பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கைக்கமைய மீதி	31.12.2021ஆம் திகதியன்று நிதி நிலைமை அறிக்கைக்கமைய மீதி (ரூ.)	எதிர்காலத்தில் கணக்கீட்டுக்குட்படுத்தப்படவுள்ளவை	முன்னேற்றம் மூ ஆக
9151	கட்டிடங்கள் மற்றும் அமைப்புக்கள்	61,921,826	61,921,826	-	100%
9152	இயந்திர சாதனங்கள்	417,397,951	417,391,951	-	100%
9160	மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்	232,171,335	232,171,335	-	100%

3.10 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை **

** பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட இறுதிக் கணக்காய்வறிக்கையை ஸ்கேன் (SCAN) செய்து இங்கு இணைக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டி (செயல் திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டுச் சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100% - 90%	**75% - 89%**	**50% - 74%**
அமைச்சினால் வழங்கப்பட வேண்டிய அறிக்கைகளை உரிய தினத்தில் பெற்றுக்கொடுத்தல் (செயல் திட்டம், வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்,பெறுகைத் திட்டம்)	√		
விளையாட்டுப் பாடசாலைகள் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவு செய்தல் சதவீதம்		√	
பாடசாலை விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவு செய்தல் சதவீதம்			√
பொது மற்றும் ஏனைய மைதானங்கள் நிர்மாணித்தலின் மொத்த சதவீதம்			√
விளையாட்டு உபகரணங்கள் வழங்கலின் மொத்த சதவீதம்			50 >
விளையாட்டுத்துறை சார்ந்த கல்விசார் மற்றும் பிரச்சார வேலைத்திட்டங்களின் மொத்த சதவீதம்	√		

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்துகொள்வதற்கான செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடுக.

இலக்கு/ குறிக்கோள்	இலக்கு	அடைவுக் குறிகாட்டிகள்	இதுவரை அடையப் பெற்றுள்ள முன்னேற்றம்		
			0% - 49%	50% - 74%	75% - 100%
03 ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிப்படுத்தி அனைத்து வயதினரின் நலனோம்புகையை விருத்தி செய்தல்	**3.1** நாட்டில் தெரிவு செய்யப்பட்ட 16 விளையாட்டுப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் ஊடாக அந்தப் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்தல்	அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவு செய்தலின் முன்னேற்றம்			√
	3.2 சகல கல்வி வலயங்களுக்கும் ஒரு பாடசாலை வீதம் தெரிவுசெய்து விளையாட்டு வசதிகளை அபிவிருத்தி செய்வதனூடாக பிள்ளைகளின் விளையாட்டுத் திறமைகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.	அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவு செய்தலின் முன்னேற்றம்		√	
	3.3 பொது மற்றும் ஏனைய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதனூடாக மக்களுக்கு விளையாட்டுக்களுக்கான பிரவேசத்தை ஏற்படுத்தல்.	அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவு செய்தலின் முன்னேற்றம்		√	

5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக.

2020.08.09 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2187/27 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தாபிக்கப்பட்ட கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் விளையாட்டுத்துறைக்கான நேரடியல்லாத ஆனாலும் மறைமுகமாக சம்பந்தப்படும் 03 ஆவது பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நோக்கங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இந்த அமைச்சினால் அடைந்துகொள்ளப்படும் வெற்றிகளினூடாக பேண்தகு அபிவிருத்தி மீதான தாக்கம் மறைமுகமானதாக இருப்பதனாலும், ஏனைய சில நிறுவனங்கள் அதற்காக நேரடியாக மற்றும் மறைமுகமாக தொடர்புபடுவதனாலும் அடைவுக் குறிகாட்டிகளைப் போன்றே வெற்றிபெறல் முன்னேற்ற சதவீதத்தை தரவுகளாக நிர்ணயித்தல் சவாலாகும்.

அத்தியாயம் 06 - மனித வளங்கள் பற்றிய விபரம்

6.1 ஆளணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ள ஆளணி	வெற்றிடம் / (மேலதிகம்) **
சிரேட்ட	18	14	04
மூன்றாம் நிலை	04	01	03
இரண்டாம் நிலை	70	36	34
ஆரம்ப நிலை	19	18	01

06.2 ** நிறுவனத்தின் செயலாற்றுகையின் நிமித்தம் மனித வளங்கள் பற்றாக்குறை அல்லது மேலதிகம் எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளதென்பதனை சுருக்கமாகக் குறிப்பிடவும்.

கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் விடயப் பரப்புக்கமைய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் முழு நாடும் உள்ளடக்கப்படும் பிரகாரம் அனைத்து விளையாட்டு வீரர்கள், விளையாட்டுப் பாடசாலைகளை மையமாகக்கொண்டு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தாலும் நிலவும் மனித வளங்கள் போதாமையினால் அந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சிரமங்கள் எழுந்துள்ளன.

6.3 மனித வளங்கள் அபிவிருத்தி

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலப் பகுதி	மொத்த முதலீடு (ரூ."000)		நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு / வெளிநாட்டு)	வெளியீடு /பெற்றுக் கொண்ட அறிவு *
			உள்நாட்டு	வெளி நாட்டு		
அரச நிதி முகாமைத்துவத்தில் பெறுகை செயற்பாடுகள் பற்றிய பயிற்சிப் பட்டறை	08	2021.01.24,25	රු. 64,000	-	உள் நாடு	அரச நிதி முகாமைத்துவம் சம்பந்தமான சட்ட வரையறை மற்றும் பெறுகை செயற்பாடுகள் தொடர்பான ஆரம்ப அறிவு
கோப்பிடல் பற்றிய பயிற்சித் திட்டம்	53	2021.03.31	இலவசம்	-	உள் நாடு	கோப்புக்களை சரியான முறையில் பேணி வரல் கோப்பிடல் முறைகள்

ஒழுக்காற்று நடவடிக்கைகள்	73	2021.04.21	இலவசம்	-	உள் நாடு	அரச சேவையின் அடிப்படை ஒழுக்காற்றுகள் பற்றிய அறிவு
அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்கு விதிகள்	05	2021.11.11,12	ரூ. 50,000	-	உள் நாடு	அலுவலகக் கடமைகளை வினைத்திறன், பயன்மிக்க மற்றும் இலகுபடுத்திக்கொள்வதற்குத் தேவையான அடிப்படை அறிவு
வருடாந்த இருப்புப் பொருட்கள் கணக்கெடுப்பு	01	2021.11.12,19,26	ரூ. 15,000	-	உள் நாடு	பொருட்கள் கணக்கெடுப்பை சரியான விதத்தில் மேற்கொள்ளுதல் பற்றிய அறிவு

*** நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் எவ்வாறு பங்களிப்புச் செலுத்துகின்றன என்பதனை சுருக்கமாக விளக்குக.**

பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக பெற்றுக்கொள்ளப்படும் அறிவு மற்றும் திறன் நிறுவனத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு முக்கியமாகும். அந்த அறிவு நிறுவனத்தின் உற்பத்தித் திறனை அதிகரித்துக்கொள்வதற்கும் உதவி புரியும்.

புதிய உத்தியோகத்தர்களின் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களை விருத்தி செய்வதனூடாக அவர்கள் அரச சேவையின் ஆரம்பம் முதல் சரியாக செயற்படுதலை பயிற்சித் திட்டத்தின் பெறுபேறாகக் குறிப்பிட முடியும்.

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதனை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கைகள்
1	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள்(வர்த்தக முற்பணக் கணக்குகள்)	-		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	-		
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	-		
1.6	ஏனையவை	-		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணல் (நி.பி. 445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267.∴2018 இற்கமைய நிலையான சொத்துக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்.	இணக்கமானது		
2.2	ஆளுக்கான வேதனாதிகள் ஆவணங்கள / தனிப்பட்ட ஊதிய அட்டடைகளை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்குப் பொழிப்புக்களை (CIGAS) தயாரித்து உரிய தினத்தில் திறைசேரிக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.7	பொருட்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.8	இருப்புக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.9	இழப்புக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.1	பொறுப்புக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.11	அடிக்கட்டை புத்தகங்கள் பதிவேட்டை (GA - N20) இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)**			
3.1	நிறுவனத்தினுள் நிதிசார் அதிகாரங்கள் பகிரப்பட்டிருத்தல்	இணக்கமானது		

3.2	நிறுவனத்தினுள் நிதிசார் அதிகாரங்கள் பகிரப்பட்டிருத்தல் சம்பந்தமாக அறிவுறுத்தப்பட்டிருத்தல்	இணக்கமானது		
3.3	அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதனிலும் அதிகளவிலான அலுவலர்கள் ஊடாக அனுமதிக்கப்படும் வகையில் ஒப்படைக்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
3.4	2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கமைய, அரசாங்க ஊதியங்கள் மென்பொருள் பெக்கேஜை பயன்படுத்தும்போது கணக்காளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்ளல்	இணக்கமானது		
4	**வருடாந்த திட்டத்தை தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்வனவு (பெறுகை) திட்டத்தை தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்து தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்றை உரிய திகதியன்று திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
5	**கணக்காய்வு ஐய வினாக்கள்**			
5.1	கணக்காய்வாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்ட திகதியன்று அனைத்துக் கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் அளித்தல்	இணக்கமானது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி.134 (2) DMA/1-2019 இற்கமைய, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்துரையாடியதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல்	இணக்கமானது		
6.2	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில் அளித்திருத்தல்	இணக்கமானது		
6.3	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவுக்கமைய, அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளை முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
6.4	நி.பி.134(3) இற்கமைய, அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		

7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	DMA 1-2019 சுற்றறிக்கைக்கமைய, குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களையாவது வருடத்தினுள் நடாத்தியிருத்தல்	03 நடாத்தப்பட்டுள்ளன.		
8	**ஆதனங்கள் முகாமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க ஆதனங்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவிற்கமைய ஆதனங்கள் கொள்வனவு மற்றும் அகற்றுதல் சம்பந்தமான தகவல்களை கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
8.2	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 13 ஆம் பிரிவிற்கமைய அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்தலை ஒருங்கிணைப்பதற்காக தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமித்து அந்த அதிகாரி சம்பந்தமான தகவல்களை கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிவித்திருத்தல்	இணக்கமானது		
8.3	05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கமைய பொருட்கள் கணக்கெடுப்பை நடாத்தி அந்த அறிக்கையை உரிய திகதியன்று கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
8.4	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகம், குறைபாடுகள் மற்றும் ஏனைய பரிந்துரைகளை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப் பகுதியினுள் மேற்கொண்டிருத்தல்	இணக்கமானது		
8.5	நி.பி. 772 இற்கமைய கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றும் அலுவல் மேற்கொள்ளப்பட்டிருத்தல்	இணக்கமானது		
9	**வாகனங்கள் முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்காக நாளாந்த இயக்க குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை தயாரித்து உரிய திகதியன்று கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் அவற்றை அகற்றுதல்	இணக்கமானது		
9.3	வாகனங்கள் பதிவுப் புத்தகங்களை இற்றைப்படுததிப் பேணிவரல்	இணக்கமானது		
9.4	நி.பி. 103, 104, 109 மற்றும் 110 இற்கமைய, அனைத்து வாகன விபத்துக்கள் சம்பந்தமாகவும் அலுவல் மேற்கொள்ளுதல்	இணக்கமானது		
9.5	2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டை மீண்டும் பரீட்சித்தல்	இணக்கமானது		

9.6	குத்தகைக் காலம் முடிவுற்றதன் பின்னர் அந்த வாகனங்களின் பதிவு சான்றிதழை உரிமை மாற்றம் செய்திருத்தல்	இணக்கமானது		
10	**வங்கிக் கணக்குகள் முகாமைத்துவம்**			
10.1	உரிய திகதியன்று வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து அத்தாட்சிப்படுத்தி அவற்றை கணக்காய்வுக்காக சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வாண்டில் அல்லது முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளைத் தீர்த்திருத்தல்	இணக்கமானது		
10.3	வங்கி இணக்கக் கூற்றுக்களினூடாக வெளிப்படுத்தப்பட்டமற்றும் சீர்படுத்தப்பட வேண்டிய நிலுவைகள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களுக்கமைய அலுவல் மேற்கொண்டு அவற்றை ஒரு மாத காலத்திற்குள் தீர்த்தல்	இணக்கமானது		
11	**நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை அவற்றின் வரையறைக்குட்பட்ட வகையில் செலவு செய்திருத்தல்	இணக்கமானது		
11.2	நி.பி. 94 (1)இன் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் ஆண்டின் இறுதியில் மீதமடையும் நிதி ஏற்பாடுகளின் வரையறைக்குட்பட்ட வகையில் பொறுப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளல்	இணக்கமானது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள்**			
12.1	வரையறைகளுடன் இயைந்திருத்தல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை சம்பந்தமாக உரிய காலத்தில் பகுப்பாய்வை மேற்கொண்டிருத்தல்	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் அதிகளவு காலமாக நிலுவையிலுள்ள கடன்களைத் தீர்த்தல்	இணக்கமானது		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்கள் சம்பந்தமாக நி.பி.571 இன் பிரகாரம் அலுவல் மேற்கொண்டிருத்தல்	இணக்கமானது		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
14	**பணி முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வாண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதி திறைசெரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல்	இணக்கமானது		
14.2	நி.பி.371 இன் படி வழங்கப்பட்ட தற்செயலான இடைக்கால கட்டுநிதி அந்த அலுவல் நிறைவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		

14.3	நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மீறாத வகையில் தற்செயலான இடைக்கால கட்டுநிதியை வழங்குதல்	இணக்கமானது		
14.4	பணி முற்பணக் கணக்கின் மீதி, மாதாந்தம் திறைசேரிப் புத்தகங்களுடன் சீர்செய்யப்பட்டிருத்தல்	இணக்கமானது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கமைய சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து மீளச் செலுத்தலை மேற்கொண்டிருத்தல்	-		
15.2	சேகரிக்கப்பட்ட வருமானத்தை வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைத்திருத்தல்	-		
15.3	நி.பி. 176 இன் படி நிலுவை வருமான அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	-		
16	**மனித வளங்கள் முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் பதவியணியை பேணிவரல்	இணக்கமானது		
16.2	பதவியணியில் அனைத்து அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியலை எழுத்து மூலமாக வழங்கியிருத்தல்	இணக்கமானது		
16.3	20.09.2017 ஆம் திகதிய MSD சுற்றறிக்கை 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
17	**பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல்**			
17.1	தகவலுக்கான உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கமைய தகவல் அதிகாரி ஒருவரை நியமித்து தகவல்களை வழங்கும் ஆவணமொன்றை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
17.2	நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் இணையத்தளத்தினூடாக வழங்கப்பட்டுள்ளதுடன், இணையத்தளத்தினூடாக அல்லது மாற்று வழிகளூடாக நிறுவனம் சம்பந்தமாக பொது மக்களின் பாராட்டு / குற்றச்சாட்டுக்களை வெளியிடுவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்திருத்தல்	இணக்கமானது		
17.3	தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 08 மற்றும் 10 பிரிவுகளுக்கமைய வருடத்தில் இரண்டு தடவைகள் அல்லது ஒரு தடவை அறிக்கைகளை சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		

18	**பிரசைகள் / சேவைபெறுநர் பட்டயத்தை செயற்படுத்தல்**			
18.1	இலக்கம் 05/2008 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்றறிக்கைகளுக்கமைய பிரசைகள்/ சேவை பெறுநர் பட்டயமொன்றை உருவாக்கி செயற்படுத்தியிருத்தல்	இணக்கமானது		
18.2	அச்சுற்றறிக்கையின் 2.3 பந்திக்கமைய, பிரசைகள்/ சேவை பெறுநர் பட்டயமொன்றை உருவாக்கி செயற்படுத்தும் அலுவலை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீட்டுக்குட்படுத்துவதற்காக நிறுவனத்தினால் முறையொன்றை தயாரித்திருத்தல்	இணக்கமானது		
19	**மனித வளங்கள் திட்டத்தை தயாரித்தல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய 02.̓.2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் இணைப்பு 02 படிவத்திற்கமைய மனித வளங்கள் திட்டமொன்றை தயாரித்திருத்தல்	இணக்கமானது		
19.2	பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் வருடத்தில் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சிக்கான வாய்ப்பை மேலுள்ள மனித வளங்கள் திட்டத்தில் உறுதிப்படுத்தியிருத்தல்	இணக்கமானது		
19.3	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கமைய மொத்தப் பதவியணிக்காக வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டிருத்தல்	இணக்கமானது		
19.4	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்திக்கமைய மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல், திறன் அபிவிருத்தி திட்டங்களை மேம்படுத்தல், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் சம்பந்தமாக பொறுப்புக்களை ஒப்படைத்து சிரேஷ்ட அதிகாரி ஒருவரை நியமித்திருத்தல்	இணக்கமானது		
20	**கணக்காய்வுப் பந்திகளுக்கு பதில் அளித்தல் (பொறுப்புக்கள்)**			
20.1	முன்னைய ஆண்டிற்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு பந்திகளின் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சீர்செய்திருத்தல்	இணக்கமானது		

முற்றும்.



விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2021

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரக் குறிப்பு / செயற்படுத்தல் பொழிப்பு

1.1 அறிமுகம்

இலங்கை விளையாட்டு வீர வீராங்கனைகளின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பேணி வருவதற்கும் அவர்களுடைய நோய்த் தடுப்புக்கும் அமைக்கப்பட்டுள்ள நிறுவகம் விளையாட்டத்துறை மருத்துவ நிறுவகமாகும். அது விளையாட்டு வீரர்களின் செயற்திறனை அதிகரிப்பதற்காக விளையாட்டுத்துறை மருத்துவ விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியுமான உச்சவு சேவையை வழங்கி அவர்களுடைய இயல்பான திறமைகளை மேம்படுத்திக்கொள்வதற்கு உச்சளவு உதவியை வழங்குவதற்கு எப்போதும் கடமைப்பட்டுள்ளது. விளையாட்டுத்துறை மருத்துவப் பிரிவாக ஆரம்பிக்கப்பட்டு 2006 ஆம் ஆண்டு முதல் விளையாட்டத்துறை மருத்துவ நிறுவகமாக தாபிக்கப்பட்டதுடன், பாடசாலை மட்டத்திலிருந்து இனங்கண்டுகொள்ளப்படும் விளையாட்டுத் திறமைகளைக் கொண்ட பிள்ளைகளை பலம்மிக்க ஆரோக்கியமான வீரர்களாக உலகிற்கு வழங்குவதற்கு இந்த நிறுவகம் அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. விளையாட்டின் உயர் திறமைகளை விருத்தி செய்துகொள்வதற்காக விஞ்ஞான ரீதியான தொழில்நுட்பத்தை மேலும் சேர்ப்பதற்காக மானிட செயற்திறன் ஆய்வுகூடம் தாபிக்கப்பட்டுள்ளதுடன், வீர வீராங்கனைகளின் உடற் தகைமையைப் சோதிப்பதனூடாக அவர்களுடைய வினைத்திறனை அதிகரிப்பதற்குத் தேவையான தரவுகளை வழங்குவதும் அந்தத் தரவுகளை பயன்படுத்தி மேற்கொள்ளும் ஆராய்ச்சிகளினூடாக சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக்கொள்வதும் உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளில் பயன்படுத்திக்கொள்ளப்படும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலங்கையின் விளையாட்டுத்துறையை புதியதொரு வழிக்குக் கொண்டு வருவதும் நிறுவகத்தின் எதிர்பார்ப்பாகும்.

1.2 நிறுவகத்தின் தூர நோக்கு, செயற் பணி, நோக்கங்கள்

தூர நோக்கு

"ஆசியாவில் விளையாட்டு மற்றும் உடற் பயிற்சி மருத்துவ அறிவியலின் சிறப்பு கேந்திர நிலையமாக திகழ்தல்"

செயற் பணி

" உயர் செயலாற்றுகை திறமைகளைக் கொண்ட மற்றும் பொழுதுபோக்கு விளையாட்டுக்களில் ஈடுபடும் வீர வீராங்கனைகள் மற்றும் அவர்களுக்கு சேவைகளை வழங்குபவர்களுக்கு நோய்த் தடுப்பு, நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் கல்விக்குத் தேவையான வளங்கள், அறிவு மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்."

நோக்கங்கள்


- அனைத்து வீர வீராங்கனைகளின் சுகாதார மற்றும் உடற் தகைமையை மேம்படுத்தல் ஊடாக அவர்களை ஆசியாவில் விளையாட்டுத்துறையில் உயர் மட்டத்திற்கு கொண்டுவரல்.
- விளையாட்டுத்துறை அறிவியல் மற்றும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வீர வீராங்கனைகளின் ஆற்றல்களை இனங்காணல் மற்றும் அவர்கள் பெற்றுக்கொண்ட ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக மானிட செயற்திறன் ஆய்வுகூடத்தை தாபித்து அதன் உச்சளவு பெறுபேறுகளை இந்த நாட்டு வீர வீராங்கனைகளுக்குப் பெற்றுக்கொடுத்தல்.
- வீர வீராங்கனைகளுக்கு பங்கேற்புக்கு முன்னரான மருத்துவப் பரிசோதனையை நடாத்துவதன் ஊடாக அவர்களுடைய பிரச்சினைகளை இனங்காணல் மற்றும் அதற்குத் தேவையான தீர்வுகளை வழங்குதல்.
- வீர வீராங்கனைகளின் உடற் தகைமை மற்றும் போசணை மட்டத்தை இடைக்கிடை அளவிடல், உடற் தகைமை பரிசோதனையை மேற்கொள்ளல் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்தல்.
- வீர வீராங்கனைகளின் உளச் சுகாதாரத்தை விருத்தி செய்து விளையாட்டுக்குப் பொருத்தமான மனோநிலையை பெற்றுக்கொடுப்பதற்காக ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்.
- வீர வீராங்கனைகளின் போசணை மட்டத்தை விளையாட்டுக்கு ஏற்ற பிரகாரம் சிறந்த மட்டத்தில் பேணி வரல்.
- விளையாட்டின்போது தேவையான முதலுதவி பயன்பாடு சம்பந்தமாக பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்களை அறிவுறுத்துவதற்காக கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- விளையாட்டு அறிவியல் துறையுடன் தொடர்புடைய ஆராய்ச்சிகளை நடாத்துதல் மற்றும் அதனூடாக பெற்றுக்கொள்ளும் அறிவினால் இந்த நாட்டு விளையாட்டை உயர் மட்டத்திற்கு கொண்டுவரல்.
- விளையாட்டு மற்றும் உடற் பயிற்சித் துறைக்கு விளையாட்டுத்துறை மருத்துவ அறிவு மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதனூடாக ஆரோக்கியமான சமூகமொன்றைத் தோற்றுவிப்பதற்கான பங்களிப்பை வழங்குதல்.

1.3 பிரதான அலுவல்கள்

- விளையாட்டின்போது ஏற்படும் காயங்களை தடுத்தல் மற்றும் முகாமைப்படுத்தல்
- நிபுணத்துவ மருத்துவ சிகிச்சையகங்களை (கிளினிக்) நடாத்துதல்
- உடற் தகைமை பரிசோதனை
- விளையாட்டுத்துறை அருத்துவம் மற்றும் முதலுதவி
- விளையாட்டுத்துறைக் கல்வி
- விளையாட்டுக்கான ஊட்டச் சத்து மற்றும் விளையாட்டு உள வள ஆலோசனை
- ஊட்டச்சத்து மட்டத்தை அளவிடுவதற்கான பரிசோதனைகள் மற்றும் மருத்துவ சோதனைகளை நடாத்துதல்.
- பொழுதுபோக்கு விளையாட்டுக்களில் ஈடுபடும் நபர்களுக்கு விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி சம்பந்தமான ஆலோசனைகள் மற்றும் மருத்துவ வசதிகளை வழங்குதல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிஞர்களுடன் விளையாட்டு மற்றும் விளையாட்டு ஊட்டச்சத்து சம்பந்தமான ஆராய்ச்சிகளுக்காக புரிந்துணர்வு உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்ளல் மற்றும் விளையாட்டின் எதிர்காலப் பயணத்திற்காக அதனை பங்களிப்புச் செய்தல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் / திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் / மாவட்ட செயலகங்களின் கீழுள்ள பிரதேச செயலகங்கள் - இல்லை

1.6 அமைச்சு / திணைக்களம் /மாகாண சபைகளின் கீழுள்ள நிறுவனங்கள் - இல்லை

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் (இருப்பின்) - இல்லை

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 விசேட வெற்றிகள்

வெளி நோயாளர் பிரிவு, புனர்வாழ்வுப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, உள வள ஆலோசனைப் பிரிவு, உயிரியல் பொறிமுறைப் பிரிவு, மருந்து வழங்கல் பிரிவு, உடற் தகைமை சோதனைப் பிரிவு, ஊட்டச்சத்துப் பிரிவு, ஆய்வுகூடப் பிரிவு மற்றும் எக்ஸ் கதிர் பிரிவு போன்ற பிரிவுகளின் ஊடாக சேவைகள் முறையாக வழங்கப்படுவதுடன், விளையாட்டு வீர வீராங்கனைகள் மற்றும் விளையாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களை அறிவூட்டி விளையாட்டுத்துறை மருத்துவ ஆலோசனை சேவைகளை வழங்குதலும் இதனூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கொவிட் - 19 நோய் நிலைமையின் கீழ் விளையாட்டு வீர வீராங்கனைகளின் பயிற்சி நடவடிக்கைகளை சிறப்பான மட்டத்தில் பேணி வருவதற்குப் போன்றே தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளை நடாத்துவதற்காக சுகாதார அமைச்சின் ஆலோசனையுடன் வழிகாட்டல்களை தயாரித்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

- 2021 ஆம் ஆண்டில் பாடசாலை மட்டத்திலிருந்து தேசிய மற்றும் சர்வதேச மட்டம் வரை 763 விளையாட்டு வீர வீராங்கனைகளுக்காக புதிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த ஆண்டில் சிகிச்சைக்காக 2205 வீர வீராங்கனைகள் மற்றும் விளையாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

- விளையாட்டின்போதான விபத்துக்களின்போது மேலதிக பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைக்காக தேசிய வைத்தியசாலை, ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை மற்றும் தேசிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் போன்ற நிறுவகங்களினூடாக சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு வீர வீராங்கனைகள் அனுப்பப்பட்டனர். கொவிட் -19 தொற்று நோய் நிலைமையின் கீழ் சில நிபுணத்துவ மருத்துவ சிகிச்சைகள் மாத்திரம் நடாத்தப்பட்டாலும் தேசிய மட்டத்திலான வீர வீராங்கனைகளின் தேவைப்பாட்டின் அடிப்படையில் அவர்கள் வெளிவாரி நிபுணத்துவ மருத்துவ சிகிச்சைகளுக்காக அனுப்பப்பட்டனர்.

- விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகத்தில் போன்றே வெளிவாரியான மருத்துவ சிகிச்சைகளின்போதும் விளையாட்டின்போதான விபத்துக்களுக்கு சிகிச்சை செய்யும்போது அவசர சிகிச்சைப் பிரிவு முக்கிய பணியொன்றை நிறைவேற்றுகின்றது. 2021 ஆம் ஆண்டில் அந்தப் பிரிவினால் சுமார் 2007 அவசர சிகிச்சை சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.

- விளையாட்டுத்துறை உள வள ஆலோசனை தேவைப்படும் வீர வீராங்கனைகள் இனங்காணப்பட்டு தேவையான சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளுக்கு அனுப்பும் பணி இந்த நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

- விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளின்போது காயங்களுக்கு ஆளாகும் வீர வீராங்கனைகளை துரிதமாக மீண்டும் விளையாட்டில் ஈடுபடச் செய்வதனை நோக்கமாகக்கொண்டு புனர்வாழ்வுப் பிரிவு நடவடிக்கை மேற்கொள்கின்றது. இதற்காக பல்வேறு உயர் தொழில்நுட்ப உபகரணங்கள் விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகத்திடம் காணப்படுகின்றது. புனர்வாழ்வுப் பிரிவு உடற் பயிற்சி சிகிச்சைப் பிரிவு மற்றும் மசாஜ் சிகிச்சைப் பிரிவு எனும் இரண்டு பிரிவுகளின் கீழ் சேவைகளை வழங்குவதுடன், 2457 வீர வீராங்கனைகள் உடற் பயிற்சி சிகிச்சைப் பிரிவிலும் 2142 வீர வீராங்கனைகள் மசாஜ் சிகிச்சைப் பிரிவிலும் சேவைகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

- வீர வீராங்கனைகளின் ஊட்டச்சத்து நிலைமையை மேம்படுத்தல் மற்றும் விளையாட்டுக்கான உடற் பலத்தைப் பேணி வருவதற்கு ஆலோசனைகளை வழங்கும் பணி ஊட்டச்சத்துப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. உயர் திறமைகளைக்கொண்ட வீரர்களின் ஊட்டச்சத்து தேவையை இனங்கண்டு அவர்களுக்கென சிறப்பு ஊட்டச்சத்து அறிவூட்டல்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், ஊட்டச்சத்து தொடர்பான குறிப்புக்களை வழங்குதல், மேலதிக ஊட்டச்சத்துக்களை பரிந்துரை செய்தல் உள்ளிட்ட பல அலுவல்களை நாம் நிறைவேற்றியுள்ளோம்.

- வீர வீராங்கனைகளின் உடற் தகைமை சம்பந்தமான பரிசோதனைகளும் இந்த நிறுவகத்தினால் நிறைவேற்றப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டில் விளையாட்டுக் குழாம்களின் 530 வீர வீராங்கனைகளின் உடற் தகைமை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பரிந்தரைகள் வழங்கப்பட்டுள்ளன.

- பாடசாலை மட்டத்திலிருந்து சர்வதேச மட்டம் வரை இந்த நாட்டில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கடந்த ஆண்டில் நடைபெற்ற சர்வதேச விளையாட்டப் போட்டிகளுக்காக விளையாட்டு வீர வீராங்கனைகளின் அனைத்து மருத்துவ சேவைகளை வழங்கல் நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன் அது எண்ணிக்கை அடிப்படையில் சுமார் 60 விளையாட்டுப் போட்டிகளாகும்.

விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படும் சிறப்பு அலுவல்கள்

1. மானிட செயற்திறன் ஆய்வுகூடத்தை தாபித்தல்

   போட்டித் தன்மை வாய்ந்த விளையாட்டு மூலமாக உலகை வெற்றிகொள்வதற்குத் தேவையான தொழில்நுட்பத்தை துரிதமாகப் பயன்படுத்தி உச்சளவு செயலாற்றுகை மட்டத்தை அடைதல், காயங்களை தவித்துக்கொள்ளல், ஆராய்ச்சிகளின் மூலமாக பெற்றுக்கொள்ளும் தரவுகளை வீர வீராங்கனைகளுக்கு மற்றும் ஊக்குவிப்புக் குழுக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக மானிட செயற்திறன் ஆய்வுகூடத்தை தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், அதனூடாக இலங்கை வீர வீராங்கனைகளின் திறமைகளை வளர்த்துக்கொள்வதற்கு பங்களிப்பை வழங்குதல்.

2. Vo_2 Max இயந்திரத்தைப் பயன்படுத்தி பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

   வீரர்களின் வெற்றிக்குத் தேவையான உடற் தகைமைகளை மேம்படுத்திக்கொள்வதற்குப் பயன்படுத்திக்கொள்ளல்.

3. உடற்பயிற்சி சிகிச்சை (பிஷியோதெரபி) பிரிவின் சேவைகளை விரிவுபடுத்தல்.

   நவீன இயந்திர சாதனங்கள் மற்றும் நவீன நுட்ப முறைகளைப் பயன்படுத்திக்கொள்ளல்.

4. சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய கொவிட் - 19 வைரஸ் தொற்றுக்கு மத்தியில் விளையாட்டுக்களை மீண்டும் ஆரம்பித்தலுடன் தொடர்பான வழிகாட்டல்களை தயாரித்தல் மற்றும் சுகாதார அமைச்சுடன் இணைந்து இடைக்கிடை திருத்தங்களைச் சேர்த்தல், அவற்றை நடைமுறைப்படுத்தல், விளையாட்டுக் கழகங்களுக்கு மீண்டும் விளையாட்டுக்களை ஆரம்பிப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்குதல் மற்றும் வழிகாட்டல்கள் ஊடாக கொவிட் - 19 தொற்று நோய்க்கு மத்தியிலும் இந்த நாட்டின் விளையாட்டுத்துறையை சிறப்பான வகையில் நடாத்துதல்.

   தேசிய மட்டத்தில் விளையாட்டு வீர வீராங்கனைகளின் மற்றும் விளையாட்டுத்துறையில் ஈடபட்டுள்ளவர்களின் கொவிட் தடுப்பூசி வேலைத்திட்டத்தில் தலையிட்டு சுமார் 501 தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் 688 கொவிட் விரைவு எதிரியாக்கி (Rapid antigen) பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் 2021 ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

   கொவிட் - 19 தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்தும்போது தொற்றுக்குள்ளான வீர வீராங்கனைகள் மற்றும் ஆளணிக்கு 02 கொவிட் சிகிச்சை நிலையங்களை நடாத்தி அவர்களுடைய நோய் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு பங்களிப்பைச் செலுத்தல்.

5. உயர் செயற்திறனுக்காக வீர வீராங்கனைகளின் ஊட்டச்சத்து நிலைமையை மேம்படுத்தல்.

   வீர வீராங்கனைகளின் உயர் செயற்திறனுக்குத் தேவையான ஊட்டச்சத்தைப் பேணி வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்காக அது தொடர்பான போதுமானளவு அறிவைக் கொண்டுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்களைக் கொண்ட குழுவொன்றை நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் பட்டப்பின் படிப்புத் தேர்வுநாடி மாணவர்களின் ஒத்துழைப்புடன் வீர வீராங்கனைகளின் ஊட்டச்சத்து நிலைமையை அளவிடல், உயர் செயற்திறன் நிலைமைகளில் காணப்படும் வீர வீராங்கனைகளுக்கான ஊட்டச்சத்து ஆலோசனைகள், ஊட்டச் சத்து தொடர்பான சிக்கல்கள்களை இனங்கண்டு அதற்கான தீர்வுகளை செயற்படுத்தல்.

2.2 சவால்கள்

- கொவிட் - 19 தொற்று நோய் நிலைமை காரணமாக எதிர்பார்த்த நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிட்ட பிரகாரம் நடாத்துவதற்கு முடியாதிருந்தமை.
- விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கும், விளையாட்டு வீர வீராங்கனைகள் பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றாமையின் காரணமாக அவர்களுடைய உடற் தகைமை சோதனைகள், ஊட்டச் சத்து தொடர்பான சிக்கல்கள் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குதல் மீது தலையீடு செய்ய முடியாதிருந்தமை.
- ஆளணி உள்ளிட்ட வீர வீராங்கனைகள் கொவிட் தொற்று நோய்க்கு ஆளாகியமையின் காரணமாக அவர்களைப் பேணிப் பராமரிப்பதற்கு தலையிட வேண்டியேற்பட்டமை மற்றும் அதன்போது மருத்துவ ஆளணிக்கு கொவிட் மற்றும் டெங்கு நோய் தொற்று ஏற்பட்டமை.
- நாட்டில் நிலவிய பொருளாதார நிலைமை மற்றும் கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக அத்தியாவசிய விளையாட்டுத்துறை மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்வதில் சிக்கல்கள் எழுந்தமை.

2.3 எதிர்கால நோக்கங்கள்

- மானிட செயற்திறன் ஆய்வுகூடத்தை தாபித்ததன் பின்னர் அதன் அனைத்து வசதிகளையும் இந்த நாட்டின் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் புனர்வாழ்வுப் பிரிவுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட இயந்திரங்கள் மற்றும் சாதனங்களைப் பயன்படுத்தி விளையாட்டுத்துறையின் நவீன தொழில்நுட்பத்தை இந்த நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்காகப் பயன்படுத்திக்கொள்ளல்.
- நவீன தொழில்நுட்பத்தை தொடர்ந்தும் இந்த நாட்டின் விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்திக்கொள்வதற்காக சர்வதேச அறிவைப் பரிமாறிக்கொள்ளல் மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி.
  அதற்காக தற்போது இந்த நாட்டின் இரண்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் இலங்கை ஊட்டச்சத்து சங்கத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் சர்வதேச நிறுவனங்களை நாடுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.
- ஊட்டச்சத்து சம்பந்தமாக விளையாட்டு வீர வீராங்கனைகள் முகங்கொடுக்கும் சிக்கல்களை இனங்கண்டுகொள்வதற்கு ஆராய்ச்சிகளை நடாத்தி அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் தேவையான பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்.
- விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகத்தை வருமானம் உழைக்கும் நிறுவகமொன்றாகத் தரமுயர்த்தல்.
- விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகத்திற்கு தன்னார்வ சேவையாளர் குழுவொன்றை அமைத்தல்.

  விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகத்தில் பணியாற்றுவதற்காக தகைமை பெற்ற போதுமான எண்ணிக்கை ஆளணியொன்று இல்லாமையினால் குறித்த துறைகளில் தகைமை பெற்றோரின் சேவையை தன்னார்வ அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க, மருத்துவர்கள், தாதியர், பிஷியோதெரபிஸ்ட் மற்றும் ஏனைய துறைகளில் நிபுணத்துவ அறிவைக்கொண்ட நபர்கள் தன்னார்வ அடிப்படையில் அவர்களது சேவையைப் பெற்றுக்கொடுப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதுடன், ஏற்கனவே அவர்களுடைய சேவைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. அதற்காக சுமார் 247 பேர் விருப்பத்தை தெரிவித்துள்ளனர்.
- விளையாட்டு மற்றும் உடற் பயிற்சித் துறையில் உடற் பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான ஒழுங்குபடுத்தல் நிறுவகமொன்றை உருவாக்குதல்.

  தற்போது விளையாட்டு மற்றும் உடற் பயிற்சித் துறையில் நடவடிக்கை மேற்கொள்ளும் நிலையங்கள், தொழில்கள் மற்றும் தொழில் வல்லுனர்களை இனங்கண்டுகொள்வதற்காக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான அளவுகோல்களை தயாரித்தல், அந்த நிலையங்களை தரப்படுத்தல், தொழில் வல்லுனர்களின் அறிவு விருத்தி மற்றும் இற்றைப்படுத்தி அடையாள அட்டையொன்றுடன் பதிவு செய்துகொள்வதற்காக சட்ட வரையறைக்குள் ஒழுங்குபடுத்தல் நிறுவகமொன்றை தாபித்தல் ஊடாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள

முடியுமான தொழில் வல்லுனர்களை உருவாக்குதல் மற்றும் உடற் பயிற்சிக்காக பாதுகாப்பான சூழலை உருவாக்குதல்.

- வீர வீராங்கனைகளின் திறமைகளை விருத்தி செய்துகொள்வதற்குத் தேவையான ஊட்டச்சத்து நிலைமையை அதிகரித்தல்.

  ஆரோக்கியம்மிக்க சரியான ஊட்டச்சத்து மற்றும் ஊட்டச்சத்து சம்பந்தமான அறிவை பாடசாலை, மாகாண மற்றும் தேசிய மட்டத்திலான வீர வீராங்கனைகளுக்குப் பெற்றுக்கொடுத்தல் ஊடாக பலம் வாய்ந்த, நம்பிக்கையுடன் அதிக திறமைகளைக் கொண்ட சர்வதேச மட்டத்திலான பதக்கங்களை வெற்றிகொள்ள முடியுமான வீர வீராங்கனைகளை உருவாக்குதல் மற்றும் அவர்கள் தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்களைப் பயன்படுத்தாமல் விளையாட்டு விபத்துக்களை குறைந்த மட்டத்தில் பேணி வரக்கூடியவர்களாக மாற்றியமைத்தல்.

- விளையாட்டு மற்றும் உடற் பயிற்சி மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சிகளை நடாத்துதல்

  விளையாட்டு மற்றும் உடற் பயிற்சி மருத்துவ விஞ்ஞானம் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதனூடாக பாடசாலை, மாகாண மற்றும் தேசிய மட்டத்திலான வீர வீராங்கனைகளின் திறமைகளை மேம்படுத்தும் முறைகளை இனங்கண்டு கொள்வதற்காக விளையாட்டு மற்றும் உடற் பயிற்சி மருத்துவ விஞ்ஞானப் பாடநெறியைக் கொண்ட பல்கலைக்கழகங்கள், பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள், நிறுவகங்கள் மற்றும் நபர்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் விளையாட்டு மற்றும் உடற் பயிற்சி துறையில் தொழில்நுட்பக் கருவிகளை உருவாக்குவதற்காக புத்தாக்குனர்களை ஈடுபடுத்தல்.
- மானிட செயற்திறன் ஆய்வுகூடம் தாபிக்கப்பட்டவுடன் அந்த ஆய்வுகூடத்தின் வசதிகளைப் பயன்படுத்தி விளையாட்டுத்துறை மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதனூடாக இந்த நாட்டின் விளையாட்டுத் துறை மற்றும் வீர வீராங்கனைகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்துவதற்குப் பங்களிப்பை பெற்றுக்கொடுத்தல்.

……..... :
நிறுவனத் தலைவர்
பெயர் :
பதவி :
திகதி :

அத்தியாயம் 03 - ஆண்டின் மொத்த நிதிச் செயலாற்றுகை

அமைச்சின் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 04 - செயலாற்றுகை குறிகாட்டி

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டி (செயல் திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டுச் சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100% - 90%	75% - 89%	50% - 74%
ஒரு வருடத்தினுள் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வருகை தந்த வீர வீராங்கனைகளின் எண்ணிக்கை		√	
உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை		√	
அவசர சிகிச்சைப் பிரிவினால் வழங்கப்பட்ட சேவையின் அளவு	√		
புனர்வாழ்வுப் பிரிவினால் வழங்கப்பட்ட சேவைகளின் அளவு		√	

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடுக.

குறிக்கோள்	இலக்கு	அடைவுக் குறிகாட்டிகள்	இதுவரை அடையப் பெற்றுள்ள முன்னேற்றம்		
			0% - 49%	50% - 74%	75% - 100%
ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிப்படுத்தி அனைத்து வயதினரதும் நலனோம்புகையை மேம்படுத்தல்	விளையாட்டுக்களின் போதான விபத்துக்கள் அற்ற நிலைமையை உருவாக்குதல்	மருத்துவக் காப்பீடு மற்றும் மருத்துவ சேவைகளை வழங்கும் அளவு		√	
அனைவருக்கும் முழுமையான மற்றும் நிலையான பொருளாதார விருத்தி, பூரண பயன்மிக்க மற்றும் சிறந்த தொழில் வாய்ப்புக்களை விருத்தி செய்தல்	விளையாட்டு வீர வீராங்கனைகளின் திறமைகளை வளர்ப்பதற்கு மற்றும் உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்குத் தேவையான போசணை மட்டத்தை அதிகரித்தல்.	விளையாட்டு வீர வீராங்கனைகளின் போசணை மட்டம் அதிகரிப்பதன் பெறுபேறாக பெற்றுக்கொண்ட வெற்றிகளின் அளவு			√
முழுமையான, நியாயமான, தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் வாழ்நாள் பூராவும் கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தல்.	விளையாட்டு மற்றும் உடற் பயிற்சித் துறை தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான ஒழுங்குபடுத்தல் நிறுவனமொன்றை அமைத்தல்	முறையாக உருவாக்கப்பட்ட தொழில் வல்லுனர்களின் எண்ணிக்கை	2022 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டமாகும்.		

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் / நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக நிறுவகத்தின் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு இந்த நாட்டு விளையாட்டுத்துறையின் தேசிய மற்றும் சர்வதேச வெற்றிகளை அடைந்துகொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்தியாயம் 06 - மனித வளங்கள் பற்றிய விபரம்

6.1 ஆளணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ள ஆளணி	வெற்றிடம் / (மேலதிகம்) **
சிரேட்ட	09	06	02
மூன்றாம் நிலை	02	0	02
இரண்டாம் நிலை	22	17	05
ஆரம்ப நிலை	45	47	02

6.2 ** நிறுவனத்தின் செயலாற்றுகையின் நிமித்தம் மனித வளங்கள் பற்றாக்குறை அல்லது மேலதிகம் எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளதென்பதனை சுருக்கமாகக் குறிப்பிடவும்.

தற்போது வெற்றிடமாகியுள்ள பதவிகளுக்குரிய கடமைகளை நிறைவேற்றும்போது சிரமங்கள் ஏற்பட்ட போதிலும் சேவையில் ஈடுபட்டுள்ள ஆளணி அங்கத்தவர்கள் ஊடாக குறித்த சேவைகளைப் பேணி வருவதற்கும் மனித வளங்கள் பற்றாக்குறையை துரிதமாக நிறைவு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

6.3 மனித வள அபிவிருத்தி

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலப் பகுதி	மொத்த முதலீடு (ரூ.'000)		நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு)	வெளியீடு /பெற்றுக் கொண்ட அறிவு *
			உள் நாட்டு	வெளி நாட்டு		
1. விளையாட்டுத்துறை மருத்துவ விஞ்ஞான டிப்ளோமா பாடநெறி	01	02 வருடங்கள்		0.6 மி.ரூ.	இணையவழி ஊடாக	விளையாட்டுத்துறை மருத்துவம் மற்றும் ஊட்டச்சத்து அறிவை இற்றைப்படுத்தல்
2. விளையாட்டுத்துறை ஊட்டச்சத்து டிப்ளோமா பாடநெறி	01	02 வருடங்கள்		0.6 மி.ரூ.	இணையவழி ஊடாக	விளையாட்டுத்துறை மருத்துவம் மற்றும் ஊட்டச்சத்து அறிவை இற்றைப்படுத்தல்

2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் - 19 நிலைமையின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட பயிற்சிப் பாடநெறிகளில் பங்குபற்ற முடியாதபோதிலும் செலவொன்றை மேற்கொள்ளாமல் விளையாட்டுத்துறையில் ஈடுபடுபவர்களின் அறிவை இற்றைப்படுத்துவதற்காக பல்வேறு பாடநெறிகள் நடாத்தப்பட்டன.

தொட.இல.	நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் / கருத்திட்டம்	பங்குபற்றியோர் எண்ணிக்கை	ஒருங்கிணைப்பு நிறுவனம் / உத்தியோகத்தர்கள்
01	கோப்பிடல் பற்றிய பயிற்சித் திட்டம்	08 உத்தியோகத்தர்கள்	இராஜாங்க அமைச்சு ஊடாக
02	கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சி சிகிச்சை (பிஷியோதெரபி) பட்டத்தைப் பெற்றுள்ள மாணவர்களுக்கு எமது நிறுவகத்தின் உடற்பயிற்சி சிகிச்சை பிரிவினால் பயிற்சியளித்தல்	30 மாணவர்கள்	விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்
03	கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உடற்பயிற்சி சிகிச்சை பயிற்சியை வழங்குதல்	03 மாணவர்கள்	விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்
04	பயிற்றுவிப்பாளர்களுக்கான உயர் பாடநெறி (தடகள விளையாட்டு)2020/2021	விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகத்தின் உத்தியோகத்தர்கள்	தேசிய விளையாட்டுத்துறை விஞ்ஞான நிறுவகம்
05	விளையாட்டு ஊட்டச்சத்து செயலமர்வு - 38	விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு ஆசிரியர்கள், வீர வீராங்கனைகள் மற்றும் விளையாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ளோர்	விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்
06	கொவிட் - 19 பாதுகாப்பு உயிரியல் குமிழி (Biological bubble) சம்பந்தமான பயிற்சிப் பட்டறை	350	விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்
07	கொவிட் - 19 தடுப்பு	தடகள வீர வீராங்கனைகள்	விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்
08	உயர் திறமைகளை வெளிப்படுத்துவதற்காக வீர வீராங்கனைகளின் ஊட்டச்சத்து அறிவை இற்றைப்படுத்தல்	50	விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்
09	கொவிட் - 19 இற்குப் பின்னரான நிலைமை பற்றிய பயிற்சிப் பட்டறை	54	விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்
10	தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தம் சம்பந்தமாக அறிவூட்டல் செயலமர்வு	369	விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதனை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கைகள்
1	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
1.2	அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள்(வர்த்தக முற்பணக் கணக்குகள்)	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
1.6	ஏனையவை	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
2	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணல் (நி.பி.445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இற்கமைய நிலையான சொத்துக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்.	இணக்கமானது	-	
2.2	ஆளுக்கான வேதனாதிகள் ஆவணங்கள / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது	-	
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது	-	
2.5	அனைத்து மாதாந்த கணக்குப் பொழிப்புக்களை (CIGAS) தயாரித்து உரிய தினத்தில் திறைசேரிக்கு சமர்ப்பித்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
2.7	பொருட்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது	-	
2.8	இருப்புக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது	-	
2.9	இழப்புக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது	-	
2.10	பொறுப்புக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	

2.11	அடிக்கட்டை புத்தகங்கள் பதிவேட்டை (GA - N20) இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது	-	
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி..135)**			
3.1	நிறுவனத்தினுள் நிதிசார் அதிகாரங்கள் பகிரப்பட்டிருத்தல்	இணக்கமானது	-	
3.2	நிறுவனத்தினுள் நிதிசார் அதிகாரங்கள் பகிரப்பட்டிருத்தல் சம்பந்தமாக அறிவுறுத்தப்பட்டிருத்தல்	இணக்கமானது	-	
3.3	அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதனிலும் அதிகளவிலான அலுவலர்கள் ஊடாக அனுமதிக்கப்படும் வகையில் ஒப்படைக்கப்பட்டிருத்தல்	இணக்கமானது	-	
3.4	2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கமைய, அரசாங்க ஊதியங்கள் மென்பொருள் பெக்கேஜை பயன்படுத்தும்போது கணக்காளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்ளல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
4	**வருடாந்த திட்டத்தை தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்	இணக்கமானது	-	
4.2	வருடாந்த கொள்வனவு (பெறுகை) திட்டத்தை தயாரித்தல்	இணக்கமானது	-	
4.3	வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்து தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்றை உரிய திகதியன்று திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
5	**கணக்காய்வு ஐய வினாக்கள்**			
5.1	கணக்காய்வாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்ட திகதியன்று அனைத்துக் கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் அளித்தல்	இணக்கமானது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி.134 (2) DMA/1-2019 இற்கமைய, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்துரையாடியதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
6.2	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில் அளித்திருத்தல்	இணக்கமானது		

6.3	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவுக்கமைய, அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளை முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
6.4	நி.பி.134(3) இற்கமைய, அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	DMA 1-2019 சுற்றறிக்கைக்கமைய, குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களையாவது வருடத்தினுள் நடாத்தியிருத்தல்	இணக்கமானது	அமைச்சு ஊடாக	
8	**ஆதனங்கள் முகாமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க ஆதனங்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவிற்கமைய ஆதனங்கள் கொள்வனவு மற்றும் அகற்றுதல் சம்பந்தமான தகவல்களை கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
8.2	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 13 ஆம் பிரிவிற்கமைய அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்தலை ஒருங்கிணைப்பதற்காக தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமித்து அந்த அதிகாரி சம்பந்தமான தகவல்களை கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிவித்திருத்தல்	இணக்கமானது		
8.3	05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கமைய பொருட்கள் கணக்கெடுப்பை நடாத்தி அந்த அறிக்கையை உரிய திகதியன்று கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
8.4	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகம், குறைபாடுகள் மற்றும் ஏனைய பரிந்துரைகளை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப் பகுதியினுள் மேற்கொண்டிருத்தல்	இணக்கமானது		
8.5	நி.பி. 772 இற்கமைய கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றும் அலுவல் மேற்கொள்ளப்பட்டிருத்தல்	இணக்கமானது		

9	**வாகனங்கள் முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்காக நாளாந்த இயக்க குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை தயாரித்து உரிய திகதியன்று கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் அவற்றை அகற்றுதல்	இணக்கமானது		
9.3	வாகனங்கள் பதிவுப் புத்தகங்களை இற்றைப்படுததிப் பேணிவரல்	இணக்கமானது		
9.4	நி.பி. 103, 104, 109 மற்றும் 110 இற்கமைய, அனைத்து வாகன விபத்துக்கள் சம்பந்தமாகவும் அலுவல் மேற்கொள்ளுதல்	இணக்கமானது		
9.5	2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டை மீண்டும் பரீட்சித்தல்	இணக்கமானது		
9.6	குத்தகைக் காலம் முடிவுற்றதன் பின்னர் அந்த வாகனங்களின் பதிவு சான்றிதழை உரிமை மாற்றம் செய்திருத்தல்	இணக்கமானது		
10	**வங்கிக் கணக்குகள் முகாமைத்துவம்**			
10.1	உரிய திகதியன்று வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து அத்தாட்சிப்படுத்தி அவற்றை கணக்காய்வுக்காக சமர்ப்பித்திருத்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
10.2	மீளாய்வாண்டில் அல்லது முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளைத் தீர்த்திருத்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
10.3	வங்கி இணக்கக் கூற்றுக்களினூடாக வெளிப்படுத்தப்பட்டமற்றும் சீர்படுத்தப்பட வேண்டிய நிலுவைகள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களுக்கமைய அலுவல் மேற்கொண்டு அவற்றை ஒரு மாத காலத்திற்குள் தீர்த்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
11	**நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை அவற்றின் வரையறைக்குட்பட்ட வகையில் செலவு செய்திருத்தல்	இணக்கமானது		
11.2	நி.பி. 94 (1)இன் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் ஆண்டின் இறுதியில் மீதமடையும் நிதி ஏற்பாடுகளின் வரையறைக்குட்பட்ட வகையில் பொறுப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளல்	இணக்கமானது		

12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள்**			
12.1	வரையறைகளுடன் இயைந்திருத்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை சம்பந்தமாக உரிய காலத்தில் பகுப்பாய்வை மேற்கொண்டிருத்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
12.3	ஒரு வருடத்திற்கும் அதிகளவு காலமாக நிலுவையிலுள்ள கடன்களைத் தீர்த்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்கள் சம்பந்தமாக நி.பி.571 இன் பிரகாரம் அலுவல் மேற்கொண்டிருத்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
14	**பணி முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வாண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதி திறைசெரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
14.2	நி.பி.371 இன் படி வழங்கப்பட்ட தற்செயலான இடைக்கால கட்டுநிதி அந்த அலுவல் நிறைவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
14.3	நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மீறாத வகையில் தற்செயலான இடைக்கால கட்டுநிதியை வழங்குதல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
14.4	பணி முற்பணக் கணக்கின் மீதி, மாதாந்தம் திறைசேரிப் புத்தகங்களுடன் சீர்செய்யப்பட்டிருத்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
15	**வருமானக் கணக்கு**			
15.1	ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கமைய சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து மீளச் செலுத்தலை மேற்கொண்டிருத்தல்	இணக்கமற்றது	-	
15.2	சேகரிக்கப்பட்ட வருமானத்தை வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைத்திருத்தல்	இணக்கமற்றுத	-	
15.3	நி.பி. 176இன் படி நிலுவை வருமான அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமற்றது	அமைச்சு ஊடாக	
16	**மனித வளங்கள் முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் பதவியணியை பேணிவரல்	இணக்கமானது		
16.2	பதவியணியில் அனைத்து அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியலை எழுத்து மூலமாக வழங்கியிருத்தல்	இணக்கமானது		

16.3	20.09.2017 ஆம் திகதிய MSD சுற்றறிக்கை 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
17	**பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல்**			
17.1	தகவலுக்கான உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கமைய தகவல் அதிகாரி ஒருவரை நியமித்து தகவல்களை வழங்கும் ஆவணமொன்றை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
17.2	நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் இணையத்தளத்தினூடாக வழங்கப்பட்டுள்ளதுடன், இணையத்தளத்தினூடாக அல்லது மாற்று வழிகளூடாக நிறுவனம் சம்பந்தமாக பொது மக்களின் பாராட்டு / குற்றச்சாட்டுக்களை வெளியிடுவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்திருத்தல்	இணக்கமானது		
17.3	தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 08 மற்றும் 10 பிரிவுகளுக்கமைய வருடத்தில் இரண்டு தடவைகள் அல்லது ஒரு தடவை அறிக்கைகளை சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
18	**பிரசைகள் / சேவைபெறுநர் பட்டயத்தை செயற்படுத்தல்**			
18.1	இலக்கம் 05/2008 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்றறிக்கைகளுக்கமைய பிரசைகள்/ சேவை பெறுநர் பட்டயமொன்றை உருவாக்கி செயற்படுத்தியிருத்தல்	-		
18.2	அச்சுற்றறிக்கையின் 2.3 பந்திக்கமைய, பிரசைகள்/ சேவை பெறுநர் பட்டயமொன்றை உருவாக்கி செயற்படுத்தும் அலுவலை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீட்டுக்குட்படுத்துவதற்காக நிறுவனத்தினால் முறையொன்றை தயாரித்திருத்தல்	-		
19	**மனித வளங்கள் திட்டத்தை தயாரித்தல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய 02.̇.2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் இணைப்பு 02 படிவத்திற்கமைய மனித வளங்கள் திட்டமொன்றை தயாரித்திருத்தல்	இணக்கமானது		

19.2	பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் வருடத்தில் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சிக்கான வாய்ப்பை மேலுள்ள மனித வளங்கள் திட்டத்தில் உறுதிப்படுத்தியிருத்தல்	இணக்கமானது		
19.3	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கமைய மொத்தப் பதவியணிக்காக வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டிருத்தல்	-		
19.4	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்திக்கமைய மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல், திறன் அபிவிருத்தி திட்டங்களை மேம்படுத்தல், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் சம்பந்தமாக பொறுப்புக்களை ஒப்படைத்து சிரே‍ஷ்ட அதிகாரி ஒருவரை நியமித்திருத்தல்	இணக்கமானது		
20	**கணக்காய்வுப் பந்திகளுக்கு பதில் அளித்தல்**			
20.1	முன்னைய ஆண்டிற்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு பந்திகளின் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சீர்செய்திருத்தல்	இணக்கமானது		

முற்றும்

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகம்

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2021

அத்தியாயம் 01 - நிறுவனம் பற்றிய விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

விளையாட்டுக் கல்லூரி எனும் பெயரில் 1979 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவகம் 1996 ஆம் ஆண்டில் பாராளுமன்ற சட்டமொன்றினூடாக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகமாகத் தாபிக்கப்பட்டது. இலங்கையின் விளையாட்டுத்துறைக் கல்வியின் முன்னணி நிறுவகமாக விளையாட்டின் முன்னேற்றத்திற்காக முக்கிய பங்களிப்பை வழங்கி விளையாட்டுத்துறை சார்ந்த அறிவை சமூக மயப்படுத்தும் பணியை தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகம் நிறைவேற்றுகின்றது.

உள்நாட்டு மற்றும் சர்வதேச விளையாட்டு வெற்றிகளை அடைந்துகொள்வதற்காக அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களை விருத்தி செய்தல், இற்றைப்படுத்தலைப் போன்றே விளையாட்டுத்துறையின் பல்வேறு பிரிவுகளின் மனித வளங்களை அபிவிருத்தி செய்து இலங்கையின் அனைத்துப் பிரஜைகளுக்கும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையொன்றை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தின் குறுகிய கால மற்றும் நீண்ட கால மூலோபாயத் திட்டங்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய கொவிட் - 19 வைரஸ் தொற்று நோய்க்கு மத்தியிலும் நிறுவகத்தினால் நடாத்தப்படும் பிரதான பாடநெறிகளின் விரிவுரைகள் சிறப்பான வகையில் ZOOM தொழில்நுட்பத்தினூடாக நடாத்துவதற்கு தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தினால் முடியுமாகியது.

1.2. தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

தூர நோக்கு

"விளையாட்டுத்துறை கல்வியில் இலங்கையின் முன்னணி நிறுவகமாகத் திகழ்தல்"

செயற்பணி

விளையாட்டுத்துறை கொள்கை உருவாக்கத்திற்கு பங்களிப்புச் செலுத்தல், விளையாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ள நபர்களின் திறன்கள், சாத்தியங்கள், திறமைகள் மற்றும் அறிவை விருத்தி செய்வதற்காக விளையாட்டுத்துறைக் கல்வியைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதனூடாக இலங்கையின் விளையாட்டுத்துறைக் கல்வியை மேம்படுத்தல்.


நோக்கங்கள்

1. விளையாட்டுத்துறையின் நிகழ்காலத் தேவைகளை இனங்கண்டு விளையாட்டுத்துறைக் கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்வதற்கான பாடநெறிகளை உருவாக்குதல், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
2. விளையாட்டுத்துறை அபிவிருத்தியுடன் தொடர்புடைய ஆராய்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல்.
3. விளையாட்டுத்துறைக் கல்வியின் அபிவிருத்தித் தரப்படுத்தலுக்குத் தேவையான நிபுணத்துவத்தை காலத்தின் தேவைக்கமைய முறைப்படுத்தல் மற்றும் வழிநடாத்தல்.
4. நவீன விளையாட்டுத்துறை சார்ந்த அறிவை கிராமிய மட்டத்தில் பெற்றுக்கொடுப்பதனை நோக்காகக் கொண்டு குறுகிய காலப் பாடநெறிகள் மற்றும் பயிற்சித் திட்டங்களினூடாக விளையாட்டு தொடர்பான அறிவை கிராமிய மட்டத்திற்கு கொண்டுசெல்லல்.

1.3 பிரதான அலுவல்கள்

#	சேவைகள்	இலக்காகக் கொள்ளப்பட்ட குழு
1	விளையாட்டுத்துறை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும், தேசிய தொழில் தகைமைகளுக்கமையவும் (NVQ IV, NVQ V, NVQ VI) விளையாட்டுத்துறைப் பாடநெறிகளை நடாத்துதல். அத்துடன் விளையாட்டுத்துறை முகாமைத்துவம், விளையாட்டினால் ஏற்படும் காயங்கள் முகாமைத்துவம் உட்பட இத்துறையை உள்ளடக்கிய பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் விளையாட்டுத்துறை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.	பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு அலுவலர்கள், கல்வி அமைச்சின் உடற் கல்வி ஆசிரியர்கள், பாதுகாப்புப் பிரிவுகளின் உடற் பயிற்சி ஆலோசகர்கள், விளையாட்டு வீரர்கள், விளையாட்டுத்துறை ஊடகவியலாளர்கள்
2	விளையாட்டுத்துறை தகவல் மையமாக செயற்படல்.	விளையாட்டுத்துறையின் அனைத்துத் தரப்பினர்
3	விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்	விளையாட்டுத்துறையுடன் சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்கள்.
4	உடற்பயிற்சி நிகழச்சித் திட்டங்களை நடாத்துதல்.	உடற் பயிற்சி மற்றும் அது சம்பந்தமான அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு கருதும் அரச அலுவலர்கள் உட்பட்ட பொது மக்கள்
5	விளையாட்டுத்துறை அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகளை நடாத்துதல்.	பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் விளையாட்டு அலுவலர்கள்
6	விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர்களின் திறன்கள், மனப்பாங்குகளை விருத்தி செய்து அவர்களுக்கு பயிற்றுவிப்பாளர் பதிவுச் சான்றிதழை வழங்குதல்.	அனைத்து தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் அவற்றின் பயிற்றுவிப்பாளர்கள்

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 நிறுவகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள பிரிவுகள்

நிர்வாகப் பிரிவு

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தின் உள்ளக நிர்வாக அலுவல்கள் இந்தப் பிரிவினூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

பாடநெறிகள் பிரிவு

நிறுவகத்தினால் நடாத்தப்படும் பிரதான பாடநெறிகளின் ஒருங்கிணைப்பு அலுவல்கள் இந்தப் பிரிவினூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

பயிற்றுவிப்பாளர்களைப் பதிவு செய்யும் பிரிவு

இலங்கையின் அனைத்துப் பயிற்றுவிப்பாளர்களையும் பதிவு செய்தலுடன் தொடர்பான அலுவல்கள் இந்தப் பிரிவினூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

நூலகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளை வழங்கல் பிரிவு

இலங்கையின் முன்னணி விளையாட்டுத்துறை நூலகமாக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தின் நூலகத்தைக் குறிப்பிட முடியும். இந்த நூலகத்தினூடாக e-book சேவை, விளையாட்டுக்களுடன் தொடர்பான இறுவட்டுப் பிரதிகளை பெற்றுக்கொடுக்கும் சேவை, செய்திப் பத்திரிகைகள் மற்றும் நூல்களை வெளியில் வழங்கும் சேவை, விளையாட்டுக்கள் தொடர்பான வளவாளர்கள் பற்றிய தகவல்களை வழங்கும் சேவை, e- Library Friend சேவை மற்றும் e- News Papers சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கணனிப் பிரிவு

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகளுடன் தொடர்பான கணனி அறிவை பயிலுனர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக கணனிப் பிரிவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

1.6 அமைச்சு / திணைக்களம் /மாகாண சபைகளின் கீழுள்ள நிறுவனங்கள் - இல்லை

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள்(இருப்பின்) - இல்லை

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 விசேட வெற்றிகள்

‘‘நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு’’ கொள்கைப் பிரகடனத்தை யதார்த்தமாக்கும் வகையில் மாகாண மட்டத்தில் விளையாட்டு விஞ்ஞான நிறுவகங்களை தாபித்து விளையாட்டுப் பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இங்கு, மத்திய, ஊவா, தென் மற்றும் மேல் மாகாணங்களில் விளையாட்டு விஞ்ஞான நிறுவகங்கள் தாபிக்கப்பட்டதுடன் அந்த நிறுவகங்களில் ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகள் தற்போது சிறப்பான வகையில் நடாத்தப்பட்டு வருகின்றது.

இது தவிர தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தினால் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு அலுவலர்கள், கல்வி அமைச்சின் உடற் கல்வி ஆசிரியர்கள், பாதுகாப்புப் பிரிவுகளின் உடற் பயிற்சி ஆலோசகர்கள், தன்னார்வ விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களின் அறிவை இற்றைப்படுத்தும் மற்றும் மேம்படுத்தும் நோக்கில் விளையாட்டுத்துறைக் கல்விப் பாடநெறிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ள மொத்தப் பாடநெறிகள் மற்றும் பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை 28 ஆகும்.

2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகள் மற்றம் நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

	பாடநெறி / நிகழ்ச்சித் திட்டம்	இலக்காகக்கொள்ளப்பட்ட குழு	பங்குபற்றிய எண்ணிக்கை
1	கல்வி அமைச்சுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட புதிய விளையாட்டுப் பயிற்சியாளர்களுக்கு ‘‘நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு’’ கொள்கைப் பிரகடனத்திற்கமைய மாகாண மட்டத்தில் தாபிக்கப்பட்ட விளையாட்டு விஞ்ஞான நிறுவகங்களினால் நடாத்தப்படும் ‘‘விளையாட்டுத்துறை டிப்ளோமா பாடநெறி’’ (ZOOM தொழில்நுட்பத்தினூடாக பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது.)	கல்வி அமைச்சுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட புதிய விளையாட்டுப் பயிற்சியாளர்கள் மத்திய மாகாணம் - திகன - 172 பயிலுனர்கள் ஊவா மாகாணம் - கிராந்துருகோட்டே - 151 பயிலுனர்கள் தென் மாகாணம் - பத்தேகம - 154 பயிலுனர்கள் மேல் மாகாணம் - மகரகம - 161 பயிலுனர்கள் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகம் - 320 (சிங்கள மொழி -160, தமிழ் மொழி - 160)	958
2	பயிற்சியாளர்களுக்கான உயர் பாடநெறி (தடகள விளையாட்டு)- NVQ 6	விளையாட்டு உத்தியோகத்தர்கள், பயிற்சியாளர்கள்	24
3	விளையாட்டுத்துறை டிப்ளோமா பாடநெறி - NVQ 5	மாவட்ட மட்டத்தில் விளையாட்டு வீரர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டுப் பயிற்சியாளர்கள், பாடசாலைகளின் உடற் பயிற்சி ஆசிரியர்கள், பாதுகாப்புப் படைகளின் உடற் பயிற்சி ஆலோசகர்கள்	57

4	உடற் பயிற்சி ஆலோசனை பயிற்சிப் பாடநெறி - NVQ 4 (ZOOM தொழில்நுட்பத்தினூடாக மற்றும் செய்முறை பயிற்சி நடவடிக்கைகளுடன் பாடநெறி நடாத்தப்படும்.)	உடற் பயிற்சி ஆலோசகர்கள், உடற் பயிற்சி ஆசிரியர்கள், தன்னார்வ ஆலோசகர்கள்	177
5	பயிற்றுவிப்பாளர் திறன் விருத்தி பாடநெறி - உயிர் பாதுகாப்பு	உயிர் பாதுகாப்பு பயிற்றுவிப்பாளர்கள்	92
6	பதிவு செய்யப்பட்ட பயிற்றுவிப்பாளர்களின் விளையாட்டுத்துறை அறிவை இற்றைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் (கராத்தே, குத்துச் சண்டை, நீச்சல், பாரம் தூக்குதல், ஹொக்கி, கபடி, ஜூடோ, வலை பந்து, ரக்பி மற்றும் மெய்வல்லுனர் விளையாட்டுக்களுக்காக நடாத்தப்பட்டது) பாடநெறிகளின் எண்ணிக்கை - 10	கராத்தே, குத்துச் சண்டை, நீச்சல், பாரம் தூக்குதல், ஹொக்கி, கபடி, பயிற்றுவிப்பாளர்கள்	223
7	பாடசாலைப் பிள்ளைகளின் 13 வருட தொடர்ச்சியான கல்வியை உறுதிப்படுத்தும் பாடநெறி	13 வருட தொடர்ச்சியான விளையாட்டுத்துறைக் கல்வியைப் பயிலும் மாணவர்கள்	58
8	விளையாட்டு விஞ்ஞான சான்றிதழ் பாடநெறி (தடகள விளையாட்டு)	தடகள விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள்	26
9	விளையாட்டு விஞ்ஞான சான்றிதழ் பாடநெறி (குத்துச் சண்டை)	குத்துச் சண்டை பயிற்றுவிப்பாளர்கள்	47
10	விளையாட்டு விஞ்ஞான சான்றிதழ் பாடநெறி (தய்கொண்டோ)	தய்கொண்டோ பயிற்றுவிப்பாளர்கள்	33
11	ஊவா மாகாண விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தில் நடாத்தப்பட்ட மாவட்ட விளையாட்டு பயிற்சித் திட்டம்	விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள்	40
12	மாவட்ட விளையாட்டுப் பயிற்சித் திட்டம் - ஹம்பாந்தோட்டை	விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள்	80
13	மாவட்ட விளையாட்டுப் பயிற்சித் திட்டம் - குருநாகல்	விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள்	65
14	மாவட்ட விளையாட்டுப் பயிற்சித் திட்டம் - மாத்தளை	விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள்	60
15	மாவட்ட விளையாட்டுப் பயிற்சித் திட்டம் - புத்தளம்	விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள்	75
16	மாவட்ட விளையாட்டுப் பயிற்சித் திட்டம் - மாத்தறை	விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள்	70
17	மாவட்ட விளையாட்டுப் பயிற்சித் திட்டம் - நுவரெலியா	விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள்	50
18	பயிற்றுவிப்பாளர் திறன்கள் அபிவிருத்திப் பாடநெறி - கையிறு இழுத்தல்	கையிறு இழுத்தல் பயிற்றுவிப்பாளர்கள்	38
19	விளையாட்டுக்களின் போதான காயங்கள் முகாமைத்துவப் பாடநெறி	விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள்,	15

2.2 சவால்கள்

- 2021 ஆம் ஆண்டு பூராவும் நிலவிய Covid-19 தொற்று நோய் காரணமாக மாகாணங்கள் / மாவட்டங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாடுகள், இடைக்கிடை நாடு முடக்கப்பட்டமை, பணியாட்குழு அங்கத்தவர்களின் வருகை வரையறுக்கப்பட்டமை, பணியாட்குழு அங்கத்தவர்கள் கொவிட் தொற்றுக்குள்ளாகியமை காரணமாக திட்டமிடப்பட்ட பயிற்சித் திட்டங்கள் / கருத்திட்டங்களை நிறைவு செய்ய முடியாதிருந்தமை.
- சுகாதார வழிகாட்டல்களுக்கமைய ஆட்களை ஒன்று சேர்ப்பதில் நிலவிய சிரமம் காரணமாக அநேகமான விளையாட்டுப் போட்டிகள் பிற்போட வேண்டியேற்பட்டமை.
- நிலவும் சிரேட்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை ஊழியர் பற்றாக்குறை காரணமாக உரிய நேரத்தில் கடமைகளை நிறைவேற்றுவதில் சிரமம் ஏற்பட்டமை.

எதிர்கால இலக்குகள்

- தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தை பட்டம் வழங்கும் நிறுவகமொன்றாக மாற்றியமைத்தல்.
- 2024 ஒலிம்பிக் போட்டி வெற்றியை இலக்காகக்கொண்டு வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளர்களின் சேவையை ஒலிம்பிக் பதக்கமொன்றை பெற்றுக்கொள்ள முடியுமான விளையாட்டுக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- விளையாட்டுத்துறை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து விளையாட்டுக்களினதும் பயிற்றுவிப்பாளர்களை பதிவு செய்தல்.
- ஏனைய மாகாண மட்டத்தில் விளையாட்டு விஞ்ஞான நிறுவகங்களை ஆரம்பித்தல்.
- கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் விளையாட்டுப் பாடசாலைகளில் பணியாற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களின் அறிவை விசேட பயிற்சித் திட்டங்களை நடாத்துவதன் ஊடாக இற்றைப்படுத்தல்.
- பாரம்பரிய விளையாட்டுக்களை ஊக்குவிப்பதற்காக விசேட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

.....

நிறுவனத் தலைவர்
பெயர் :
பதவி :
திகதி :

அத்தியாயம் 03 - ஆண்டின் மொத்த நிதிச் செயலாற்றுகை

அமைச்சின் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 04 - செயலாற்றுகை குறிகாட்டி

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டி (செயல் திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டுச் சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100% - 90%	75% - 89%	50% - 74%
நடாத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறிகளின் எண்ணிக்கை		√	

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடுக.

இலக்கு/ குறிக்கோள்	இலக்கு	அடைவுக் குறிகாட்டிகள்	இதுவரை அடையப் பெற்றுள்ள முன்னேற்றம்		
			0% - 49%	50% - 74%	75% - 100%
04. முழுமையான, நியாயமான, தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் வாழ்நாள் பூராவும் கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தல்.	அனைவருக்கும் விளையாட்டுத்துறைக் கல்வியை இலகுவாகப் பெற்றுக் கொடுப்பதற்காக மாகாண மட்டத்தில் விளையாட்டு விஞ்ஞான நிறுவகங்களைத் தாபித்தல்.	2021 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட மாகாண மட்டத்தில் விளையாட்டு விஞ்ஞான நிறுவகங்கள் மற்றும் ஆரம்பிக்கப்படும் பாடநெறிகளின் எண்ணிக்கை		√	

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக.

நியாயமான மற்றும் தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மீது கவனம் செலுத்தப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்கை விளையாட்டுத்துறைக் கல்வி மீது செலுத்தி இந்த நாட்டு விளையாட்டுத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முறையான விளையாட்டுத்துறைக் கல்வியைப் பெற்றுக்கொடுப்பதற்கு தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகம் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றது. ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி, வரையறுக்கப்பட்ட மனித மற்றும் ஏனைய பௌதிக வளங்களுக்கு மத்தியிலும் இந்த பேண்தகு அபிவிருத்தி இலக்கை அடைந்துகொள்வதற்கான சவாலை வெற்றிகொள்வதற்கு நிறுவகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அத்தியாயம் 06 - மனித வளங்கள் பற்றிய விபரம்

6.1 ஆளணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ள ஆளணி	வெற்றிடம் / (மேலதிகம்) **
சிரேட்ட	**07**	**01**	**- 6**
மூன்றாம் நிலை	**11**	**04**	**- 7**
இரண்டாம் நிலை	**27**	**21**	**- 6**
ஆரம்ப நிலை	**07**	**02**	**- 5**

06.2 ** நிறுவனத்தின் செயலாற்றுகையின் நிமித்தம் மனித வளங்கள் பற்றாக்குறை அல்லது மேலதிகம் எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளதென்பதனை சுருக்கமாகக் குறிப்பிடவும்.

நிறுவகத்தின் கல்விசார் ஆளணியில் நிலவும் பற்றாக்குறையானது நிறுவகத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகள் மற்றும் பயிற்சி திட்டங்கள் மீது தாக்கம் செலுத்துவதுடன், அதனால் நிறுவகத்திற்கு அதிகளவில் வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

6.3 மனித வளங்கள் அபிவிருத்தி

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலப் பகுதி	மொத்த முதலீடு (ரூ.000)		நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு)	வெளியீடு /பெற்றுக் கொண்ட அறிவு *
			உள்நாட்டு	வெளி நாட்டு		
அரச பெறுகை செயற்பாடுகள்	02	10 நாட்கள்	40,000.00		உள்நாடு	முறையாக பெறுகை அலுவல்களை மேற்கொள்ளுதல் சம்பந்தமான அறிவைப் பெற்றுக் கொள்ளல்
Olympic Solidarity Sports Administrators Course	03	04 நாட்கள்	-		உள்நாடு	விளையாட்டுத்துறை நிருவாகம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளல்
Postgraduate Certificate in Applied Statistics	01	01 வருடம்	140,000.00		உள்நாடு	செயன்முறையில் புள்ளிவிபரவியல் அறிவைப் பயன்படுத்திக் கொள்ளல் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளல்
சமூக விஞ்ஞான பட்டப்பின் படிப்பு பாடநெறி	01	01 வருடம்	118,000.00		உள்நாடு	சமூக விஞ்ஞானம் பற்றிய மேலதிக அறிவைப் பெற்றுக் கொள்ளல்
நிறுவன உத்தியோகத்தர்களின் மனப்பாங்கை விருத்தி செய்யும் நோக்கில் நடாத்தப்பட்ட செயலமர்வு	32	01 நாள்	192,650.00		உள்நாடு	நிறுவனம் சார்ந்த எதிர்கால நடவடிக்கைகள் பற்றிய மீளாய்வு மற்றும் உத்தியோகத்தர்களின் மனப்பாங்கு விருத்தி

*** நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சித் திட்டங்கள் எவ்வாறு பங்களிப்புச் செலுத்துகின்றன என்பதனை சுருக்கமாக விளக்குக.**

பயிற்சித் திட்டங்களினூடாக ஆளணி அங்கத்தவர்கள் பெற்றுக்கொண்ட அறிவு நிறுவனத்தின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு முக்கியமாகும்.

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

(கணக்குகள் பற்றிய அலுவல்கள் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது)

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதனை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
1	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	-	-	
1.2	அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு	-	-	
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள்(வர்த்தக முற்பணக் கணக்குகள்)	-	-	
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	-	-	
1.5	விசேட முற்பணக் கணக்கு	-	-	
1.6	ஏனையவை	-	-	-
2	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணல் (நி.பி.445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இற்கமைய நிலையான சொத்துக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்.	இணக்கமானது		
2.2	ஆளுக்கான வேதனாதிகள் ஆவணங்கள / தனிப்பட்ட ஊதிய அட்டடைகளை இற்றைப்படுத்திப் பேணிவரல்	-		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்குப் பொழிப்புக்களை (CIGAS) தயாரித்து உரிய தினத்தில் திறைசேரிக்கு சமர்ப்பித்தல்	-		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	-		
2.7	பொருட்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.8	இருப்புக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	-		
2.9	இழப்புக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	-		
2.10	பொறுப்புக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	-		
2.11	அடிக்கட்டை புத்தகங்கள் பதிவேட்டை (GA - N20) இற்றைப்படுத்திப் பேணிவரல்	-		
3	**நிதிக் கட்டப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி..135)**			
3.1	நிறுவனத்தினுள் நிதிசார் அதிகாரங்கள் பகிரப்பட்டிருத்தல்	இணக்கமானது		

3.2	நிறுவனத்தினுள் நிதிசார் அதிகாரங்கள் பகிரப்பட்டிருத்தல் சம்பந்தமாக அறிவுறுத்தப்பட்டிருத்தல்	இணக்கமானது		
3.3	அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதனிலும் அதிகளவிலான அலுவலர்கள் ஊடாக அனுமதிக்கப்படும் வகையில் ஒப்படைக்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
3.4	2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கமைய, அரசாங்க ஊதியங்கள் மென்பொருள் பெக்கேஜை பயன்படுத்தும்போது கணக்காளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்ளல்	-		
4	**வருடாந்த திட்டத்தை தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்வனவு (பெறுகை) திட்டத்தை தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல்	-		
4.4	வருடாந்த மதிபீட்டைத் தயாரித்து தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	-		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்றை உரிய திகதியன்று திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்	-		
5	**கணக்காய்வு ஐய வினாக்கள்**			
5.1	கணக்காய்வாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்ட திகதியன்று அனைத்துக் கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் அளித்தல்	-		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி.134 (2) DMA/1-2019இற்கமைய, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்துரையாடியதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல்	-		
6.2	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில் அளித்திருத்தல்	இணக்கமானது		
6.3	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவுக்கமைய, அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளை முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	-		
6.4	நி.பி.134(3) இற்கமைய, அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	-		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	DMA 1-2019 சுற்றறிக்கைக்கமைய, குறைந்தது 04 கணக்காய்வு மற்றும்	இணக்கமானது		

	முகாமைத்துவக் குழுக் கூட்டங்களையாவது வருடத்தினுள் நடாத்தியிருத்தல்			
8	**ஆதனங்கள் முகாமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க ஆதனங்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவிற்கமைய ஆதனங்கள் கொள்வனவு மற்றும் அகற்றுதல் சம்பந்தமான தகவல்களை கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
8.2	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 13 ஆம் பிரிவிற்கமைய அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்தலை ஒருங்கிணைப்பதற்காக தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமித்து அந்த அதிகாரி சம்பந்தமான தகவல்களை கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிவித்திருத்தல்	-		
8.3	05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கமைய பொருட்கள் கணக்கெடுப்பை நடாத்தி அந்த அறிக்கையை உரிய திகதியன்று கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்			
8.4	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகம், குறைபாடுகள் மற்றும் ஏனைய பரிந்துரைகளை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப் பகுதியினுள் மேற்கொண்டிருத்தல்	இணக்கமானது		
8.5	நி.பி. 772 இற்கமைய கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றும் அலுவல் மேற்கொள்ளப்பட்டிருத்தல்	-		
9	**வாகனங்கள் முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்காக நாளாந்த இயக்க குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை தயாரித்து உரிய திகதியன்று கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் அவற்றை அகற்றுதல்	-		
9.3	வாகனங்கள் பதிவுப் புத்தகங்களை இற்றைப்படுததிப் பேணிவரல்	இணக்கமானது		
9.4	நி.பி. 103, 104, 109 மற்றும் 110 இற்கமைய, அனைத்து வாகன விபத்துக்கள் சம்பந்தமாகவும் அலுவல் மேற்கொள்ளுதல்	இணக்கமானது		
9.5	2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டை மீண்டும் பரீட்சித்தல்	இணக்கமானது		

9.6	குத்தகைக் காலம் முடிவுற்றதன் பின்னர் அந்த வாகனங்களின் பதிவு சான்றிதழை உரிமை மாற்றம் செய்திருத்தல்	-		
10	**வங்கிக் கணக்குகள் முகாமைத்துவம்**			
10.1	உரிய திகதியன்று வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து அத்தாட்சிப்படுத்தி அவற்றை கணக்காய்வுக்காக சமர்ப்பித்திருத்தல்	-		
10.2	மீளாய்வாண்டில் அல்லது முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளைத் தீர்த்திருத்தல்	-		
10.3	வங்கி இணக்கக் கூற்றுக்களினூடாக வெளிப்படுத்தப்பட்டமற்றும் சீர்படுத்தப்பட வேண்டிய நிலுவைகள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களுக்கமைய அலுவல் மேற்கொண்டு அவற்றை ஒரு மாத காலத்திற்குள் தீர்த்தல்	-		
11	**நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை அவற்றின் வரையறைக்குட்பட்ட வகையில் செலவு செய்திருத்தல்	இணக்கமானது		
11.2	நி.பி. 94 (1)இன் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் ஆண்டின் இறுதியில் மீதமடையும் நிதி ஏற்பாடுகளின் வரையறைக்குட்பட்ட வகையில் பொறுப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளல்	-		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள்**			
12.1	வரையறைகளுடன் இயைந்திருத்தல்	-		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை சம்பந்தமாக உரிய காலத்தில் பகுப்பாய்வை மேற்கொண்டிருத்தல்	-		
12.3	ஒரு வருடத்திற்கும் அதிகளவு காலமாக நிலுவையிலுள்ள கடன்களைத் தீர்த்தல்	-		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்கள் சம்பந்தமாக நி.பி.571 இன் பிரகாரம் அலுவல் மேற்கொண்டிருத்தல்	-		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை இற்றைப்படுத்திப் பேணிவரல்	-		
14	**பணி முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வாண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதி திறைசெரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல்	-		
14.2	நி.பி.371 இன் படி வழங்கப்பட்ட தற்செயலான இடைக்கால கட்டுநிதி அந்த அலுவல் நிறைவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல்	-		
14.3	நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மீறாத வகையில்	-		

	தற்செயலான இடைக்கால கட்டுநிதியை வழங்குதல்			
14.4	பணி முற்பணக் கணக்கின் மீதி, மாதாந்தம் திறைசேரிப் புத்தகங்களுடன் சீர்செய்யப்பட்டிருத்தல்	-		
15	**வருமானக் கணக்கு**			
15.1	ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கமைய சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து மீளச் செலுத்தலை மேற்கொண்டிருத்தல்	-		
15.2	சேகரிக்கப்பட்ட வருமானத்தை வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைத்திருத்தல்	-		
15.3	நி.பி. 176இன் படி நிலுவை வருமான அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	-		
16	**மனித வளங்கள் முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் பதவியணியை பேணிவரல்	இணக்கமானது		
16.2	பதவியணியில் அனைத்து அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியலை எழுத்து மூலமாக வழங்கியிருத்தல்	இணக்கமானது		
16.3	20.09.2017 ஆம் திகதிய MSD சுற்றறிக்கை 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
17	**பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல்**			
17.1	தகவலுக்கான உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கமைய தகவல் அதிகாரி ஒருவரை நியமித்து தகவல்களை வழங்கும் ஆவணமொன்றை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
17.2	நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் இணையத்தளத்தினூடாக வழங்கப்பட்டுள்ளதுடன், இணையத்தளத்தினூடாக அல்லது மாற்று வழிகள்டாக நிறுவனம் சம்பந்தமாக பொது மக்களின் பாராட்டு / குற்றச்சாட்டுக்களை வெளியிடுவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்திருத்தல்	இணக்கமானது		
17.3	தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 08 மற்றும் 10 பிரிவுகளுக்கமைய வருடத்தில் இரண்டு தடவைகள் அல்லது ஒரு தடவை அறிக்கைகளை சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
18	**பிரசைகள் / சேவைபெறுநர் பட்டயத்தை செயற்படுத்தல்**			
18.1	இலக்கம் 05/2008 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்றறிக்கைகளுக்கமைய பிரசைகள்/ சேவை பெறுநர் பட்டயமொன்றை உருவாக்கி செயற்படுத்தியிருத்தல்	இணக்கமானது		

18.2	அச்சுற்றறிக்கையின் 2.3 பந்திக்கமைய, பிரசைகள்/ சேவை பெறுநர் பட்டயமொன்றை உருவாக்கி செயற்படுத்தும் அலுவலை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீட்டுக்குட் படுத்துவதற்காக நிறுவனத்தினால் முறையொன்றை தயாரித்திருத்தல்	இணக்கமானது		
19	**மனித வளங்கள் திட்டத்தை தயாரித்தல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் இணைப்பு 02 படிவத்திற்கமைய மனித வளங்கள் திட்டமொன்றை தயாரித்திருத்தல்	இணக்கமானது		
19.2	பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் வருடத்தில் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சிக்கான வாய்ப்பை மேலுள்ள மனித வளங்கள் திட்டத்தில் உறுதிப்படுத்தியிருத்தல்	இணக்கமானது		
19.3	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கமைய மொத்தப் பதவியணிக்காக வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டிருத்தல்	-		
19.4	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்திக்கமைய மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல், திறன் அபிவிருத்தி திட்டங்களை மேம்படுத்தல், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் சம்பந்தமாக பொறுப்புக்களை ஒப்படைத்து சிரேஷ்ட அதிகாரி ஒருவரை நியமித்திருத்தல்	இணக்கமானது		
20	**கணக்காய்வுப் பந்திகளுக்கு பதில் அளித்தல் (பொறுப்புக்கள்)**			
20.1	முன்னைய ஆண்டிற்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு பந்திகளின் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சீர்செய்திருத்தல்	-		

முற்றும்.



இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவகம்

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2021

அத்தியாயம் 01 - நிறுவனம் பற்றிய விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

- விளையாட்டுக்களில் ஈடுபடும்போது ஊக்கப் பதார்த்தங்களை எடுத்துக்கொள்வதற்கு எதிரான சர்வதேச சாசனத்தை செயல்வலுப்பெறச் செய்வதற்கும், ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனமொன்றை இலங்கையில் அமைப்பதன் ஊடாக அந்த சாசனத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை ஏற்படுத்துவதற்கும், மேலே குறிப்பிடப்பட்ட இணக்கப்பாட்டு வரையறைக்குள் விளையாட்டுக்களில் ஈடுபடும்போது ஊக்கப் பதார்த்தங்களை எடுத்துக்கொள்வதனை தடுப்பதற்காக குறித்த உள்நாட்டு சட்டப் பொறிமுறையொன்றை குறித்துரைத்தல் சம்பந்தமான ஏற்பாடுகளை ஏற்படுத்துவதற்கும் 2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டம் 2013 செப்தெம்பர் 09 ஆம் திகதி வரையப்பட்டது.
- 2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் மூன்றாவது பகுதி ஊடாக இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவகத்தை அமைத்தல் சம்பந்தமான ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனம், சர்வதேச ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனம் மற்றும் பிராந்திய ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவகம் என்பன ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்கின்றன.

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

தூர நோக்கு :-
சரியான மற்றும் நியாயமான வெற்றியின் நிமித்தம் தடைசெய்யப்பட்ட பொருட்களிலிருந்து விடுபட்ட இலங்கையின் பலம்மிக்க விளையாட்டுத்துறை

செயற்பணி :-
உலக போதைப் பொருள் தடுப்புச் சட்டம் மற்றும் அதன் ஒழுங்குவிதிகளுக்கமைவான விதத்தில் 2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

நோக்கங்கள் :-
2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 11 ஆவது பிரிவின் பிரகாரம் :

முகவர் நிறுவனத்தின் குறிக்கோள்களாவன :-

(அ) விளையாட்டுக்களில் ஈடுபடும்போது ஊக்கப் பதார்த்தங்களை எடுத்துக்கொள்வதனை தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(ஆ) விளையாட்டுக்களுடன் தொடர்பாக ஊக்கப் பதார்த்தங்களை எடுத்துக்கொள்ளல் சம்பந்தமான துறைகள் மற்றும் ஏற்புடைய ஆராய்ச்சிகள் மற்றும் முகவர் நிறுவனத்தைப் போன்று சமமான அலுவல்களை மேற்கொள்ளும் ஏனைய சர்வதேச அமைப்புக்களிடையே பரஸ்பர பரிசோதனைகளை ஊக்குவித்தல்.

1.3 பிரதான அலுவல்கள்

இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவகத்தின் பிரதான அலுவல்களாக,

1. **தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்ளல்**

   விளையாட்டின்போது வீரர்களின் சிறுநீர் அல்லது இரத்த மாதிரிகளைப் பயன்படுத்தி தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது போட்டிகளிடையே மற்றும் போட்டிகளின் பின்னர் எனும் இரு முறைகளிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் மாதிரிகளை உலக ஊக்கப் பதார்த்தங்கள் தடுப்பு முகவர் நிறுவகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட வெளிநாட்டு ஆய்வுகூடங்களுக்கு அனுப்பி பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இங்கு தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதாக நிரூபிக்கப்பட்டால் ஏற்புடைய சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.


2. **அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல்.**

   விளையாட்டின்போது தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்களை தடுத்தல் இலங்கைக்கு புதியதொரு விடயமாகும். எனவே விளையாட்டு தொடர்பாக ஆர்வம் காட்டும் தரப்புக்களான வீர வீராங்கனைகள், பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை விளையாட்டு வீர வீராங்கனைகளின் பெற்றோர் உட்பட்ட விளையாட்டு தொடர்பாக ஆர்வம் காட்டும் அனைத்துத் தரப்புக்களுக்கும் அறிவுறுத்துதல்.

3. **தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.**

   இலங்கை போன்ற கீழைத்தேய நாடுகளில் இன்னும் சுதேச மருத்துவ முறைகள், ஆயுர்வேத மருத்துவ முறைகள், உள்நாட்டு உணவு பானங்கள் பயன்பாட்டை கண்டுகொள்ள முடியும். இங்கு இந்த மருந்துகள் மற்றும் உணவு பானங்களில் அந்த மூலக்கூறுகள் அடங்கியுள்ளதா என்பது தொடர்பாக கண்டறிந்து அது பற்றி பரிசோதனைகளை நடாத்தி ஆராய்ச்சிக் கட்டுரைகளை தயாரித்து சர்வதேசத்துடன் அந்த அறிவைப் பரிமாறி நடவடிக்கை மேற்கொள்ளல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 அலுவலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள் - இல்லை

1.6 அமைச்சு / திணைக்களம் /மாகாண சபைகளின் கீழுள்ள நிறுவனங்கள் - இல்லை

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் (இருப்பின்) - இல்லை

2.1 விசேட வெற்றிகள்

பரிசோதனைப் பிரிவு

சுத்தமான விளையாட்டைப் பேணி உண்மையான வீர வீராங்கனைகளை பாதுகாப்பதனை நோக்காகக் கொண்டு இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தின் ஊடாக 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் தொடர்பான பரிசோதனைகள் பற்றிய தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.


விளையாட்டுகளுக்கமைய தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் பற்றிய பரிசோதனைகள் - 2021

மனித தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் பற்றிய பரிசோதனை - சிறுநீர்

இல.	விளையாட்டு	தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் பரிசோதனைகளின் எண்ணிக்கை	தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்களைப் எடுத்துக்கொண்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள்
01	ரக்பி	04	-
02	தட களப் போட்டிகள்	73	01
03	சைக்கிளோட்டம்	13	-
04	பாரம் தூக்குதல்	39	-
05	கிரிக்கட்	21	-
06	பூப் பந்து (பெட்மின்டன்)	01	-
07	பளு தூக்குதல்	13	-
08	ஜூடோ	01	-
09	இலக்கிற்கு சுடுதல்	01	-
10	பரா அம்பெறிதல்	01	-
11	பரா படகோட்டுதல்	01	-
12	பரா தட களவியொட்டு	08	-
13	பரா டெனிஸ்	01	-
	மொத்தம்	**177**	**01**

விலங்கு தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் பரிசோதனை

இல.	விளையாட்டு	தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் பரிசோதனைகளின் எண்ணிக்கை	தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்களைப் எடுத்துக்கொண்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள்
1	குதிரையோட்டப் போட்டி	12	8



கல்விப் பிரிவு

விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் - 2021

எமது வாழ்க்கைக்கு விளையாட்டு இந்தளவுக்கு நெருக்கமாக இருப்பதற்கான காரணம், உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் போன்றே ஆன்மீக அறிவும் சிறப்பான ஆளுமையையும் கொண்ட மனிதனை உருவாக்குவதற்கு அதனூடாக கிடைக்கும் அரிய பங்களிப்பு ஆகும். 25 நூற்றாண்டுகளிலும் அதிக நீண்ட அபிமானம்மிக்க, பெருமைமிக்க வரலாற்றைக் கொண்டுள்ள சர்வதேச விளையாட்டுக்கள் தற்போது மிகவும் முன்னேறிய மற்றும் மிகவும் சிக்கலான நிலைமையை அடைந்துள்ளன. அவை மெது மெதுவாக நவீனமயப்படுத்தலுக்கும், வர்த்தகமயப்படுத்தலுக்கும் உட்படும்போது அவற்றின் முன்னணித் தொனிப்பொருளாக நீண்ட கால அடிப்படையில் "விளையாட்டுத் திறமைக்கான பங்கேற்பு" எனும் எண்ணக்கருவின் முக்கியத்துவமும் மெது மெதுவாக மறைந்து ”வெறுமனே வெற்றியை" நோக்கிப் பயணிக்கும் இலக்கு மற்றும் அபிலாஷையை தற்கால விளையாட்டுத்துறையில் கண்டுகொள்ள முடியும். தற்போதைய விளையாட்டுத்துறை இந்தளவுக்கு முன்னேற்றமடைந்து மற்றும் வளர்ச்சியடைந்துள்ளமைக்கான காரணம் போட்டியிட்டு வெற்றிபெறும் தாகம் நிலவுவதனாலாகும்.

விளையாட்டு வளர்ச்சியடைந்து, விருத்தியடைந்து அதன் போட்டித் தன்மையும் அதிகரித்து அதி நவீன மற்றும் முன்னேறிய தொழில்நுட்ப உத்திகள் மற்றும் கருவிகள் அதனுடன் இணையும்போது அவற்றை முறையாக செயற்படுத்தும், கையாளும் மற்றும் நிர்வகிக்கும் பொதுவான சட்ட ஒழுங்குவிதிகள் முறைமையொன்றுக்கான தேவைப்பாடு மற்றும் முக்கியத்துவம் அவசியமாகின்றது. இதன் பெறுபேறாக விளையாட்டின்போது தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்துவதனைக் கட்டுப்படுத்துவதற்கான சட்ட ஒழுங்குவிதிகள் உள்நாட்டு - வெளிநாட்டு விளையாட்டுத் துறையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்தலில் காணப்படும் மிகப் பயங்கரமான பெறுபேறு என்னவெனில், அதனூடாக அதி திறமை வாய்ந்த வீர வீராங்கனைகளின் விளையாட்டு வாழ்க்கை முன்கூட்டியே தடைபட்டு விடுதலும், அதனால் அவர்களால் நாட்டுக்குப் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்த சர்வதேச வெற்றிகள் இழக்கப்படுதலும், சர்வதேச விளையாட்டரங்கில் பிரசித்தப்படுத்தப்படும் இவ்வாறான சர்ச்சைக்குரிய நிகழ்வுகள் காரணமாக ஒட்டுமொத்த நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் அவமானம் மற்றும் அபகீர்த்தி ஏற்படுவதுமாகும். மறு புறமாக தற்போது விளையாட்டுக்களில் ஈடுபடுகின்ற நாட்டின் உயிர்நாடியாக விளங்கும் எதிர்கால சந்ததியின் உடல் மற்றும் உள ஆரோக்கியம் மற்றும் தகைமை சீரழிந்து எதிர்காலத்தில் நோய்வாய்ப்பட்ட சமூகமொன்று உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்தல் நீண்டகால ரீதியில் நிலவும் மேலுமொரு பிரச்சினையாகும். எனவே தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்களிலிருந்து தவிர்ந்திருத்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி இந்த நாட்டின் விளையாட்டில் ஈடுபடுபடும் சந்ததி மற்றும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு விழிப்புணர்வூட்டல் கல்விப் பிரிவின் அடிப்படை நோக்கமாகும்.

அதற்கமைய, 2021 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை மேற்கொள்ளப்பட்ட தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் சம்பந்தமாக விழிப்புணர்வூட்டல் செயலமர்வுகள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. விளையாட்டு வீர வீராங்கனைகள் மற்றும் விளையாட்டுத் துறையில் ஈடுபடுபவர்களுக்காக இந்த செயலமர்வுகள் நாடு பூராவும் நடாத்தப்பட்டன.

திகதி	இடம்	யாருக்காக நடாத்தப்பட்டது	பங்கேற்பு
2021-01-26	விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம் - டொரின்டன்	கராத்தே தேசிய அணி	10
2021-01-26	ஹவ்லொக் விளையாட்டு மைதானம் - டொரின்டன்	தேசிய வலைபந்து அணி	26
2021-01-27	ஹவ்லொக் விளையாட்டு மைதானம் - டொரின்டன்	தேசிய வலைபந்து அணி	26
2021-01-28	தேசிய விளையாட்டு மற்றும் கேட்போர்கூடம் - டொரின்டன்	பரா தட கள விளையாட்டு அணி	12
2021-01-29	பணிப்பாளர் சபை கூட்ட மண்டபம் - SLADA இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனம்	தேசிய கூடைப்பந்து அணி	12
2021-02-11	தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - ஹெய்யன்துடுவ	தேசிய கபடி அணி	15
2021-02-24	இலங்கை ரக்பி மற்றும் கால் பந்துக் கழகம் (CR & FC) - டொரின்டன்	ரக்பி (ஆண்கள்) அணி	33
2021-02-25	பிரதான கேட்போர்கூடம் - இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனம்	தேசிய பெட்மின்டன் குழாம்	22
2021-03-06	பிரதான கேட்போர்கூடம் - மகாவலி கருத்திட்ட அலுவலகம் (ரிதிமாலியத்த)	மகாவலி விளையாட்டு வலயத்தின் அனைத்து வீர வீராங்கனைகள்	61
2021-03-07	பிரதான கேட்போர்கூடம் - மகாவலி கருத்திட்ட அலுவலகம் (ரிதிமாலியத்த)	மகாவலி விளையாட்டு வலயத்தின் அனைத்து வீர வீராங்கனைகள்	31
2021-03-12	இலங்கை மன்றக் கல்லூரி - டொரின்டன்	உடற்பயிற்சி விரிவுரையாளர்கள்	57
2021-03-14	தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகம் - டொரின்டன்	தேசிய பெட்மின்டன் குழாம்	48
2021-03-16	இலங்கை ரக்பி மற்றும் கால் பந்துக் கழகம் (CR & FC) - டொரின்டன்	ரக்பி (பெண்கள்) அணி	16
2021-06-14 2021-06-16 2021-06-21 2021-06-25	இணையவழி விரிவுரை	வயம்ப பல்கலைக்கழகத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்துவியல் பாடநெறியைப் பயிலும் மாணவர்கள்	5
2021-07-29	பணிப்பாளர் சபை கூட்ட மண்டபம் - இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனம்	தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் கட்டுப்பாட்டு அலுவலர்களாக (DCO) பணியாற்றும் மருத்துவர்கள்	8
2021-07-31	பிரதான கேட்போர்கூடம் - தேசிய தட கள விளையாட்டு சம்மேளனம் - கொழும்பு	20 வயதின் கீழ் தட கள விளையாட்டு தேசிய குழாம்	15
2021-08-13	பிரதான கேட்போர்கூடம் - ஊவா மாகாண விளையாட்டு அகடமி, மகாவலி விளையாட்டு மைதானம், கிராந்துருகோட்டே.	உடற் பயிற்சி பயிற்றுவிப்பாளர்கள் (ஊவா மாகாண பாடசாலை ஆசிரியர்கள்)	20
2021-09-10 2021-09-11	இணையவழி விரிவுரை	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் விளையாட்டுத்துறை விஞ்ஞானம் பற்றிய பாடநெறியைப் பயிலும் மாணவர்கள்	371
2021-09-13	சினமன் லேக்சைட் ஹோட்டல் - கொழும்பு	இலங்கை கிரிக்கட் தேசிய குழாம் (ஆண்)	19
2021-09-18	இணையவழி விரிவுரை	லய்சியம் சர்வதேச பாடசாலையின் நாடளாவிய ரீதியிலான விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள்	120
2021-09-23	இணையவழி விரிவுரை	இலங்கை ஜிம்னாஸ்டிக் சங்கத்தின் வீர வீராங்கனைகள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள்	21
2021-09-28	சினமன் லேக்சைட் ஹோட்டல் - கொழும்பு	19 வயதின் கீழ் இலங்கை கிரிக்கட் தேசிய குழாம் வீரர்கள்	26

2021-10-26	இணையவழி விரிவுரை	தேசிய பீச் வொலிபோல் அணி	25
2021-10-29	விளையாட்டு ஹோட்டல் - சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபை	ரக்பி (பெண்கள்) தேசிய அணி	28
2021-11-05	விளையாட்டு ஹோட்டல் - சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபை	ரக்பி (ஆண்கள்) தேசிய அணி	20
2021-11-13	சினமன் லேக்சைட் ஹோட்டல் - கொழும்பு	இலங்கை கிரிக்கட் தேசிய குழாம் (பெண்கள்)	25
2021.11.22 - 2021.11.26	விளையாட்டு ஹோட்டல் - சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபை	57 ஆவது தடவையாக நடைபெற்ற இலங்கை இராணுவத்தின் படையணிகளுக்கிடையிலான தட கள விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய அனைத்து வீர வீராங்கனைகள்	400
2021-12-07	பிரதான கேட்போர்கூடம் - SLADA இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனம்	இலங்கை மல்யுத்த சம்மேளத்தின் அனைத்து வீர வீராங்கனைகள்	83
2021-12-09	பிரதான கேட்போர்கூடம் - இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனம்	இலங்கை பளு தூக்குதல் சம்மேளத்தின் வீர வீராங்கனைகள	15
2021-12-09	இணையவழி விரிவுரை	நாடளாவிய ரீதியிலான கபடி பயிற்றுவிப்பாளர்கள்	30

விழிப்புணர்வூட்டல் செயலமர்வின் இலக்குகள் மற்றும் முன்னேற்றம் - 2021

மாதம்	இலக்கு		உண்மை நிலை	
	செயலமர்வுகளின் எண்ணிக்கை	பங்கேற்பு	செயலமர்வுகளின் எண்ணிக்கை	பங்கேற்பு
ஜனவரி	2	96	5	86
பெப்ருவரி	4	150	3	70
மார்ச்	2	115	5	213
ஏப்ரல்	0	0	0	0
மே	3	40	0	0
யூன்	2	120	1	5
யூலை	3	26	2	23
ஆகஸ்ட்	6	140	1	20
செப்தெம்பர்	4	230	5	557
ஒக்தோபர்	5	275	2	53
நவம்பர்	3	75	2	45
திசெம்பர்	2	97	3	128
மொத்தம்	**36**	**1364**	**29**	**1072**

செயல்வலுப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் பிரிவு

நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகளின் முன்னேற்றம் - 2021

தூய்மையான விளையாட்டுத்துறையொன்றை நிலைநிறுத்துவதற்காக தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்களைப் பெறுதல் மற்றும் விநியோகத்தைக் கட்டுப்படுத்தல் அத்தியாவசியமாகும். அதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக பொலீஸ் உத்தியோகத்தர்கள், மருந்தகர்கள், மருந்தகங்களின் உரிமையாளர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு முறையான பிரகாரம் 3 ஆம் இலக்க விளையாட்டுக்களில் ஈடுபடும்போது ஊக்கப் பதார்த்தங்களை எடுத்துக்கொள்வதற்கு எதிரான சமவாயச் சட்டம் சம்பந்தமாக அறிவூட்டல் அத்தியாவசியமாகும். முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்று அதற்கான முறையான விசாரணையை மேற்கொள்ளும்போது பொலீஸாரின் உதவி அத்தியாவசியமாக இருத்தல் அதற்கு பிரதான காரணமாகும். விளையாட்டு வீரருக்கு பாதிப்பு, சிரமம் ஏற்படாதவாறு அந்த அலுவலை தரமான வகையில் நடாத்துதல் மற்றும் பொலீஸாரின் உதவியுடன் வினைத்திறன்மிக்க விசாரணை செயற்பாடு மற்றும் புலனாய்வுத் தகவல்கள் பிரிவொன்றை தாபித்தல் இதன் மேலுமொரு நோக்கமாகும்

தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் வீரர்களுக்கு செல்லும் பிரதான வழியாக மருந்தகங்களைக் குறிப்பிட முடியும். எனவே அவர்களுக்கு தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் சம்பந்தமாக முறையான அறிவைப் பெற்றுக்கொடுத்தல் காலத்தின் வேயாகும். அதற்காக மருந்தகர்கள் மற்றும் மருந்தக உரிமையாளர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றது.

இல.	திகதி	பயிற்சிப் பட்டறை
01	2021.10.14	பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் சம்பந்தமான பயிற்சித் திட்டங்களை நடாத்துதலின் அடிப்படையில் பொலீஸ் களப் படைத் தலைமையகத்தில் பொலீஸ் விளையாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பான பணிப்பாளர், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் திரு. R.M.P.N. ரத்னாயக்க அவர்களுடன் இணைந்து பொலீஸ் விளையாட்டுப் பிரிவின் 30 விளையாட்டு அணிகளுக்கு பயிற்சித் திட்டங்கள் (அணி ரீதியாக) நடாத்தப்பட்டன.
02	2021.11.03	மருந்தகர்கள் மற்றும் மருந்தக உரிமையாளர்கள் சங்கங்களுடன் இணைந்து ஆரோக்கியமான பிரஜைகளிலிருந்து தூய்மையான விளையாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் அனைத்து பதிவு செய்யப்பட்ட மருந்தகர்கள் மற்றும் மருந்தக உரிமையாளர்களை அறிவூட்டுவதற்கான நாடளாவிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப கட்ட பயிற்சிப் பட்டறை 2021.11.03 ஆம் திகதி இலங்கை ஊக்கப் பதார்த்தங்கள் தடுப்பு முகவர் நிறுவகத்தில் நடாத்தப்பட்டது. அதில் அகில இலங்கை மருந்தக உரிமையாளர் சங்கத்தின் மற்றும் இலங்கை மருந்துகள் விற்பனை சங்கத்தின் 06 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.
03	2021.11.22 - 2021.11.26	2021-11-22 ஆம் திகதி முதல் 2021-11-26 திகதி வரை (05 நாட்கள்) சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற 6 ஆவது இராணுவத்தின் அஞ்சலோட்டப் போட்டி மற்றும் 57 ஆவது இராணுவ தட களை விளையாட்டுப் போட்டியுடன் இணையான வகையில் செயல்வலுப்பெறச் செய்தல் மற்றும் அமுல்படுத்தல் பிரிவு (E&I) மற்றும் கல்வி மற்றும் விசாரணைப் பிரிவின் (E&T) தலைமையில் தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் மற்றும் தடை செய்தல் முறைகளைப் பயன்படுத்தல்கள் சம்பந்தமான விசேட முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் விழிப்புணர்வூட்டல் கூடம் (Outreach Booth) அமைக்கப்பட்டது. அதில் கலந்துகொண்ட விளையாட்டில் ஆர்வங்காட்டும் தரப்புக்களை (வீர வீராங்கனைகள் உள்ளிட்ட) அதிக எண்ணிக்கையானோருக்கு அறிவூட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
04	2021.12.14	வீரர்களின் தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் சம்பந்தமான புலனாய்வு மற்றும் விசாரணைகளுக்காக இலங்கைப் பொலீஸின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கும், 2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டுக்களில் ஈடுபடும்போது ஊக்கப் பதார்த்தங்களை எடுத்துக்கொள்வதற்கு எதிரான சமவாயச் சட்டம் சம்பந்தமாக பொலீஸ் உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நோக்கில் பொலீஸ் விளையாட்டுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் மற்றும் வீர வீராங்கனைகளுக்காக பம்பலப்பிட்டிய பொலீஸ் களப் படை தலைமையகத்தில் அறிவூட்டல் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.

2021.10.14 ஆம் திகதி பொலீஸ் களப் படை தலைமையகத்தில் பொலீஸ் விளையாட்டுப் பிரிவுக்குப் பொறுப்பான பணிப்பளர், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் திரு.ஆர்.எம்.பீ.என்.ரத்னாயக்க அவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்.





2021.11.03 ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட மருந்தகர்கள் மற்றும் மருந்தக உரிமையாளர்களுக்காக நடாத்தப்பட்ட அறிவூட்டும் நாடளாவிய நிகழ்ச்சித் திட்டம்





2021.12.14 ஆம் திகதி பொலீஸ் விளையாட்டுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் மற்றும் வீர வீராங்கனைகளுக்காக பம்பலப்பிட்டிய பொலீஸ் களப் படை தலைமையகத்தில் நடாத்தப்பட்ட அறிவூட்டல் செயலமர்வு





6 ஆவது இராணுவ அஞ்சலோட்டப் போட்டி மற்றும் 57 ஆவது இராணுவ தட கள விளையாட்டுப் போட்டியுடன் இணையான வகையில் தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் மற்றும் தடை செய்தல் முறைகளைப் பயன்படுத்தல்கள் சம்பந்தமான விசேட முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் விழிப்புணர்வூட்டல் கூடத்தை அமைத்தல்.





விசேட முறைப்பாடுகள் பிரிவை அமைத்தல்

2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டுக்களில் ஈடுபடும்போது ஊக்கப் பதார்த்தங்களை எடுத்துக்கொள்வதற்கு எதிரான சமவாயச் சட்டத்தின் அதிகாரத்தின் பிரகாரம் இலங்கை ஊக்கப் பதார்த்தங்கள் தடுப்பு முகவர் நிறுவகத்தின் செயல்வலுப்பெறச் செய்தல் மற்றும் அமுல்படுத்தல் பிரிவின் விசேட முறைப்பாடுகள் பிரிவு 2021 ஒக்தோபர் மாதம் அமைக்கப்பட்டது.

அதற்கமைய முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் முறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- இணையவழி ஊடாக
  அணைத்து விளையாட்டுக் கழகங்களுக்கும் வட்ஸ்அப் ஊடாக முறைப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன.
- பௌதிக ரீதியாக
  போட்டிகள் நடைபெறும்போது முறைப்பாட்டுப் பெட்டிகளைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.
- விசேட முறைப்பாடுகள் பிரிவின் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது வெளியிலிருந்து கிடைக்கும் அழைப்புக்களுடன் தொடர்புகொண்டு அந்த அழைப்புக்களுக்கு தரமான சேவையைப் பெற்றுக்கொடுப்பதற்காக 070-4220422 எனும் தொலைபேசி இலக்கத்தை இந்தப் பிரிவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

விசேட விசாரணைகள் பிரிவுக்கு முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் பற்றிய விபரம்

இல.	திகதி	முறைப்பாடு	தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை
01	2021.12.11	இரண்டு வீரர்கள் 2021.12.11 ஆம் திகதி போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தம் என சந்தேகிக்க முடியுமான ஊசிகளை உடலில் ஏற்றிக்கொண்டுள்ளனர் என்ற விடயம்	இந்த வீரர்கள் Out Of Competition Testing இற்காக அனுப்பப்பட்டுள்ளனர்.
02	2021.12.16	தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தத்தை பயன்படுத்திக் கொண்டதாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள இரண்டு தட கள விளையாட்டு வீரர்கள் அரசாங்க பாடசாலையொன்றில் விளையாட்டுப் பயிற்சியாளர்களாக நடவடிக்கை மேற்கொள்கின்றனர் என்ற விடயம்.	அடுத்த கட்ட விசாரணைகளுக்காக இந்த 02 வீரர்களையும் 2022.01.05 ஆம் திகதி வருமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.



2021 முன்னேற்றம்

ஆராய்ச்சிப் பிரிவு

ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியொன்றின் முழுமையான ஆய்வறிக்கை சர்வதேச ஜர்னலான "Journal of Exercise and Nutrition" எனும் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது. அந்த அறிக்கை இலங்கையின் தேசிய மட்ட விளையாட்டு வீர வீராங்கனைகளின் மேலதிக உணவுப் பயன்பாடு, அது

பற்றிய அறிவு மற்றும் மேலதிக உணவுப் பயன்பாட்டின் பழக்கம் சம்பந்தமான தரவுகளை உள்ளடக்கியுள்ளது.

இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு ஆய்வுகளான ''தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் சம்பந்தமாக விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தை மதிப்பீட்டுக்குட்படுத்தல் ஆய்வு'' மற்றும் ''தடை செய்யப்பட்ட ஊக்கப் பதார்த்தங்கள் எதிர்ப்பு சட்டங்களை மீறுதல் சம்பந்தமான ஆய்வு'' ஆகிய இரண்டு ஆய்வுகளும் நிறைவு செய்யப்பட்டன.

மேலும், ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களை விளையாட்டுத்துறை பிரஜைகள், விளையாட்டுடன் தொடர்புடைய பல்கலைக்கழகப் பிரஜைகள் மற்றும் விளையாட்டுக்களுடன் சம்பந்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளும் அரச நிறுவனங்கள் ஆகியவற்றுக்கிடையில் பகிர்வதற்கு பல்வேறு வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தின் புதிய ஆய்வுகூடம் 2021 ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி கௌரவ அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த ஆய்வுகூடம் நவீன தொழில்நுட்ப உபகரணங்களைக் கொண்டமைந்துள்ளது. விசேடமாக இங்கு காணப்படும் LC / MS / MS உபகரணத்தினூடாக ஆய்வுத் தரவுகளை துல்லியமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.





ஆய்வுகூடம் 2021 ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பப் பிரிவு

இலங்கை ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனம் எப்போதும் உலக ஊக்க மருந்து தடுப்பு முகவர் நிறுவனம் (WADAமற்றும் உலகின் ஏனைய நாடுகளுடன் தகவல் தொழில்நுட்பத்தை மேற்கொள்ளும் நிறுவனமாகும். அதற்குத் தேவையான அலுவல்களை மேற்கொள்வதற்கு அந்த நிறுவனத்தில் காணப்படும் தொழில்நுட்பத்துடன் எமது நிறுவனத்தை தொடர்புபடுத்துவதனூடாக தடை செய்யப்பட்ட ஊக்க மருந்துகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதலானது தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும்.

அதில் Anti-Doping Administrative System (ADAMS) என அறிமுகப்படுத்தப்படும் WADA இன் தகவல் முறைமைக்கு எமது நிறுவனத்தின் நிகழ்காலத் தகவல்களை பெற்றுக்கொடுத்தல், விளையாட்ட வீரர்களை பதிவு செய்தல், கணக்குகளைத் தயாரித்தல், whereabouts கணக்குகளை தயாரித்தல் மற்றும் அது சம்பந்தமான அலுவல்கள், விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் உதவி வழங்குதல் Anti-Doping E-Learning (ADeL) முறைமையை வீரர்களுக்கு அறிமுகஞ செய்தல், வீரர்களைப் பதிவு செய்தல் மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடநெறிகளை எமது நிறுவனத்தின் கல்விப் பிரிவுக்கு தயாரித்துக் கொடுத்தல் இந்தப் பிரிவினூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

அத்தோடு நிறுவனத்தில் அன்றாட சேவைகளை தொடர்ந்தும் மேற்கொள்வதற்குத் தேவையான தொழில்நுட்ப ரீதியிலான ஒத்துழைப்பை பெற்றுக்கொடுத்தலும் பிரதான நோக்கமொன்றாகும். எமது

சர்வதேச மட்டத்திலான வசதிகளை வழங்குதல் ஊடாக இலங்கையின் விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செலுத்தல் மற்றும் இலங்கை விளையாட்டு வீர வீராங்கனைகளின் திறமைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான வசதிகளைக்கொண்ட முன்னணி சர்வதேச விளையாட்டுத்தொகுதியாக மாற்றியமைத்தல்.


நோக்கங்கள்

- சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதியின் முகாமை, பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- விளையாட்டுத்துறை பொருளாதாரத்தின் மற்றும் விளையாட்டு சுற்றுலாத்துறை வர்த்தகத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதியின் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு செயற்பாடுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்தல்.
- நாட்டின் அபிவிருத்திக்காக சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதிக்கு வசதிகளை வழங்குதல்.
- சமூக ஒருமைப்பாடு மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பயன்படும் செயல்முறைகளாக விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு செயற்பாடுகளுக்குப் பயன்படுத்திக்கொள்வதனை உறுதிப்படுத்தல்.

1.3 பிரதான அலுவல்கள்

- தேசிய விளையாட்டு சங்கங்கள், பாடசாலை விளையாட்டு சங்கங்கள் மற்றும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு முகாமைத்துவ சபையின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட சலுகைக் கட்டணத்தின் கீழ் சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குதல்.
- தேசிய மற்றும் சர்வதேச தட கள விளையாட்டுப் போட்டிகளுக்காக விளையாட்டு வீர வீராங்கனைகளைப் பயிற்றுவிப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
- சர்வதேச மட்டத்திலான போட்டிகளை பகல் காலங்களில் போன்றே இரவு காலங்களிலும் நடாத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
- குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகள் மற்றும் கிராமிய மட்டத்தில் திறமை காட்டும் வீர வீராங்கனைகளுக்கு தேவையான உட்டகட்டமைப்பு வசதிகளை வழங்குதல் ஊடாக அவர்களது திறமைகளை மேம்படுத்தி முன்னேறுவதற்கு தேவையான வசதிகளை வழங்குதல்.
- தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான நீச்சல் போட்டிகளை நடாத்துவதற்குத் தேவையான நீச்சல் மற்றும் சுழியோடுதல் தடாகங்கள் வசதிகளை வழங்குதல்.
- பரீட்சைகள், கருத்தரங்குகள், மாநாடுகள், வைபவங்கள் மற்றும் பொழுதுபோக்கு என்பவற்றுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
- பயிற்சி செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபைக்குரிய மைதானங்கள் மற்றும் வெளித்தரப்பு நிறுனங்கள்

i) சுகததாச உள்ளக விளையாட்டரங்கு
   - உள்ளக விளைாட்டரங்கு
   - உப விளையாட்டரங்கு
   - நீச்சல் தடாகத் தொகுதி
   - உடற் கட்டமைப்பு நிலையம்
   - விளையாட்டுத்துறை ஹோட்டல்

ii) சுகததாச வெளியக விளையாட்டரங்கு
iii) போகம்பரை வெளியக விளையாட்டரங்கு
iv) பெலியத்தை நீச்சல் தடாகம்
v) நுவரெலியா குதிரையோட்டப் பந்தய மைதானம்
vi) ஆர் பிரேமதாச சர்வதேச கிரிக்கட்ட மைதானம்

உள்ளக விளையாட்டரங்கு

உள்ளக விளையாட்டரங்கு 5004 ஆசனங்களைக்கொண்ட குளிரூட்டப்பட்ட பார்வையாளர் அரங்கை கொண்டுள்ளதுடன், உள்ளக விளையாட்டரங்கின் அகலம் 35 மீட்டர் மற்றும் நீளம் 40 மீட்டர்களாகும். இந்த விளையாட்டரங்கில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான கூடைப்பந்து, பெட்மின்டன், வலை பந்து, ஜூடோ, ஜிம்னாஸ்டிக், வொலிபோல்,மேசைப் பந்து, குத்துச் சண்டை, கராத்தே, மல்யுத்தம் போன்ற உள்ளக விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர பல்வேறு வைபவங்கள், மாநாடுகள், இசை நிகழ்ச்சிகள், அரச வைபவங்கள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றையும் நடாத்துவதற்கான வசதிகளும் காணப்படுகின்றது.

உப விளையாட்டரங்கு

இந்த உப விளையாட்டரங்கு இரண்டு பெட்மின்டன் விளையாட்டுத் திடல்களையும் நான்கு ஸ்கொஸ் விளையாட்டரங்குகளையும் கெகாண்டுள்ளதுடன் விளையாட்டுப் பொட்டிகள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்கான வசதிகளும் காணப்படுகின்றது.

நீச்சல் தடாகத் தொகுதி

இலங்கையின் பாடசாலை மட்டத்தில் மற்றும் விளையாட்டுக் கழகங்களினால் திட்டமிடப்படும் நீச்சல் போட்டிகளுக்கான பயிற்சி நடவடிக்கைகளைப் போன்றே போட்டிகளை நடாத்துதல் மற்றும் அதிகார சபையினால் பாடசாலை மாணவர்களுக்காக சலுகை கட்டணத்திற்கு அங்கத்துவத்தை வழங்கி நீச்சல் பயிற்சிக் கல்லூரியொன்றும் நடாத்தப்படுகின்றது. இந்த நீச்சல் தடாகத் தொகுதி ஊடாக பாடசாலை மட்டத்திலான நீச்சல் போட்டிகளை நடாத்துதல் முதல் சர்வதேச மட்டத்திலான நீச்சல் போட்டிகளை நடாத்துதல் வரை தேவையான வசதிகள் வழங்கப்படுவதுடன், பகல் / இரவு போட்டிகளுக்கான அதி சக்தி வாய்ந்த மின்னொளிக் கம்பங்களைக் கொண்ட வசதிகளைக் கொண்ட இலங்கையின் ஒரே நீச்சல் தடாகத் தொகுதி எனவும் அறிமுகப்படுத்த முடியும்.

உடற் கட்டமைப்பு நிலையம்

இந்த விளையாட்டுத் தொகுதி ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் நடாத்தப்பட்டுவரும் இந்த உடற் கட்டமைப்பு நிலையம், 2013 ஆம் ஆண்டில் நவீனமயப்படுத்தப்பட்டு அதற்கு நவீன உடற் கட்டமைப்பு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

இந்த நிலையத்திற்கான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக விளையாட்டு வீர வீராங்கனைகளுக்குப் போன்றே ஏனையோருக்கும் அங்கத்துவத்தைப் பெற்று தேவையான பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

விளையாட்டுத்துறை ஹோட்டல்

இந்த அதிகார சபையின் சேவை வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக வரும் வீர வீராங்கனைகளுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக தாபிக்கப்பட்டுள்ள நவீனமயப்படுத்தப்பட்ட விளையாட்டுத்துறை ஹோட்டலின் நிருவாக நடவடிக்கைகள் சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுவதுடன், இங்கு தங்குமிட வசதிகளுக்காக 42 அறைகளைக் கொண்ட இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதில் ஒரே தடவையில் 150 பேருக்கு தங்குவதற்கு முடியும். இங்கு தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொள்ளுதல் தவிர வைபவங்கள், உபசார விழாக்கள், கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சுகததாச வெளியக விளையாட்டரங்கு

இலங்கை பாடசாலை விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு தட கள விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கு சர்வதேச மட்டத்திலான வசதிகளைக் கொண்டுள்ள ஒரே விளையாட்டரங்காகும். பகல் மற்றும் இரவு நேரங்களில் தட கள விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கால் பந்து / ரக்பி பயிற்சி மற்றும் போட்டிகளை ஒரே தடவையில் நடாத்துவதற்கு முடியுமான வகையில் இந்த விளையாட்டரங்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த விளையாட்டரங்கில் ஒரே தடவையில் சுமார் 20,000 ரசிகர்கள் போட்டிகளைப் பார்வையிடுவதற்கு முடியுமான வகையில் பார்வையாளர் அரங்குகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

வெளியக விளையாட்டரங்கில் 400 மீட்டர் மற்றும் 200 மீட்டர் என்ற ரீதியில் 02 செயற்கை ஓடுபாதைகள் காணப்படுகின்றன. இந்த ஓடு பாதைகள் ஐந்தாவது தடவையாகவும் இந்த ஆண்டில் புதுப்பிக்கப்பட்டன. இது தவிர மூன்று மாடிகளைக் கொண்ட ஊடகவியலாளர்களுக்கான கூடமொன்றும், அதி சக்தி வாய்ந்த மின்னொளிக் கட்டமைப்பொன்றின் ஊடாக இரவு நேரப் போட்டிகளை நடாத்துவதற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விளையாட்டரங்கில் தட கள விளையாட்டுக்கள், வொலிபோல், ரக்பி, கால் பந்து, கூடைப் பந்து போன்ற விளையாட்டுக்களுக்குப் போன்றே பல்வேறு வைபவங்களை நடாத்துவதற்குமான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

போகம்பரை வெளியக விளையாட்டரங்கு

இந்த விளையாட்டரங்கு கண்டி மாநகர சபையினால் நிர்வகிக்கப்பட்டதுடன், 2001 ஆம் ஆண்டு முதல் இந்த அதிகார சபைக்கு சட்ட ரீதியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டதன் பின்னர் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்காக விளையாட்டரங்கு முகாமையாளர் உட்பட்ட 70 இற்கும் அதிகமானோர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வெளியக விளையாட்டரங்கில் சுமார் 10,000 பார்வையாளர்களுக்கு போட்டிகளை கண்டு களிக்க முடியுமான விதத்தில் வசதிகள் உண்டு. தட கள விளையாட்டுக்கள், வொலிபோல், ரக்பி, கால் பந்து, கூடைப் பந்து போன்ற விளையாட்டுக்களுக்குப் போன்றே பாடசாலை விளையாட்டு விழாக்கள் மற்றும் ஏனைய வைபவங்களை நடாத்துவதற்குமான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விளையாட்டரங்கிற்காக புதிய உடற் கட்டமைப்பு நிலையத்தில் சுமார் 45 அங்கத்தவர்கள் மாதாந்தம் மற்றும் வருடாந்தம் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

நுவரெலியா குதிரையோட்டப் பந்தய மைதானம்

2011.09. 07ஆம் திகதி விளையாட்டுத்துறை அமைச்சினால் நுவரெலியா குதிரையோட்டப் பந்தய மைதானத்தின் முகாமைத்துவம் சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபைக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது. இதன் பரப்பளவு 34,564 ஹெக்டேயர்களாக இருப்பதுடன் குதிரைத் தொழுவங்கள், வாடகை மற்றும் குதிரை / கோவேறு கழுதைகள் சவாரி என்பன ஊடாக வருமானம் உழைக்கப்படுகின்றது.

பெலியத்தை நீச்சல் தடாகம்
இந்த நீச்சல் தடாகம் கீழ் குறிப்பிடப்படும் பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

- 08 ஓட்டப் பாதைகளைக் கொண்ட 50 மீட்டர் நீளமான நீச்சல் தடாகமாகும்.
- சுழியோடல் தடாகம்

பெலியத்தை தொழில்நுட்பக் கல்லூரியின் நீச்சல் தடாகங்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மாத்திரம் 2008.08.07 ஆம் திகதி முதல் சுகததாச அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டாலும், இந்த நீச்சல் தடாகங்கள் சுகததாச அதிகார சபைக்கு உரித்துடையவை அல்ல. சூழவுள்ள பிரதேசங்களில் வாழும் வயதுவந்தோர் மற்றும் மாணவ மாணவிகளுக்கு நீச்சல் நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல், சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானம்

இந்தக் கிரிக்கெட் மைதானம் எமது நாட்டிலுள்ள தேசிய மற்றும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடாத்துவதற்கான அனைத்து வசதிகளையும் கொண்ட விளையாட்டு மைதானமாகும். இந்த மைதானம் 2006.05.10 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய 2006.11.01 ஆம் திகதி முதல் முப்பது வருட காலத்திற்கு இலங்கை கிரிக்கட் நிறுவனத்திற்கு மாதமொன்றுக்கு 250,000.00 தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரை இந்த விளையாட்டு மைதானத்தினூடாக ரூ.3,000,000.00 வருமானம் உழைக்கப்பட்டுள்ளது.

சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபையின் பிரதான வருமானமாக நிலவிய இந்த மைதானம் நீண்ட காலத்திற்கு மாற்றங்களின்றிய மாதாந்த வாடகைக்கு குத்தகைக்கு விடப்பட்டமை, இந்த அதிகார சபையின் வருமானம் வீழ்ச்சியடைதல் மீது தாக்கம் செலுத்தியுள்ளது.

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1 விசேட வெற்றிகள்

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான விளையாட்டுத்துறை வசதிகளை வழங்குவதற்காக இந்த அதிகார சபையினால் திட்டமிடப்பட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை எதிர்வரும் ஐந்து வருட (2021 - 2025) திட்டத்தின் கீழ் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்த அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளின் முக்கிய நோக்கம், சேவை பெறுநர்களுக்கு வழங்கப்படும் தற்போதைய விளையாட்டு வசதிகளுக்காக விளையாட்டு மைதானங்களை நவீனமயப்படுத்தல், புதிதாக தயார் செய்தல், நவீன தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் கட்டிடங்களை பராமரித்தல் என்பனவாகும். அதற்கமைய இந்தத் திட்டங்களின் இறுதிக் கட்டத்தை நிறைவு செய்து அனைத்து வசதிகளும் மேம்படுத்தப்பட்ட விளையாட்டரங்குகள் / மைதானங்களை 2025 ஆம் ஆண்டில் மக்கள் பயன்பாட்டிற்கு விடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1. விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

- புதிய விளையாட்டு வசதிகளுக்கான உபகரணங்களை கொள்வனவு செய்தல்.
- சுகததாச வெளியக விளையாட்டரங்கின் மின்னொளியூட்டல் கம்பங்களைப் புதுப்பித்தல்.
- சுகததாச நீச்சல் தடாகத்தின் உந்தி நிலையத்தை பழுதுபார்த்தல்.
- இலத்திரனியல் நேர அளவீட்டு கட்டமைப்பை கொள்வனவு செய்தல்
- நீச்சல் தடாகத்திற்கு பார்வையாளர் கதிரைகளை பொருத்துதல்.
- 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதுப்பித்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்தல்.
- உள்ளக விளையாட்டரங்கின் தீயணைப்பு உபகரணங்கள் தொகுதியை புதுப்பித்தல் மற்றும் "D" வாகனங்கள் நிறுத்துமிடத்தில் புதிய தீயணைப்பு உபகரணங்கள் தொகுதியொன்றை தாபித்தல்.
- பிரதான பார்வையாளர் அரங்கு மற்றும் விளையாட்டு மைதானத்தைச் சுற்றியுள்ள பார்வையாளர் அரங்கை புதுப்பித்தல் (வெளியக)
- நில எழிலமைப்பு, பாதைகள் தொகுதியை புதுப்பித்தல் மற்றும் பாதைகளுக்கு ஒளியூட்டல். (உள்ளக, வெளியக, போகம்பரை)
- சூரிய சக்தி மின் உற்பத்தி கட்டமைப்பொன்றை தாபித்தல். (உள்ளக, வெளியக, போகம்பரை)
- போகம்பரை விளையாட்டு மைதானத்தின் நீர்த் தாங்கியை நிர்மாணித்தல்.
- போகம்பரை வியாட்டு மைதானத்தின் விளையாட்டு உபகரணங்கள் களஞ்சியசாலையை நிர்மாணித்தல்.
- ஸ்கொஷ் விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்தல்.
- மின்சாரம் தேக்கி வங்கியொன்றை நிர்மாணித்தல் (உள்ளக)
- உள்ளக விளையாட்டரங்கின் வசதிகளுக்கான கட்டிடமொன்றை நிர்மாணித்தல்.
- உள்ளக விளையாட்டரங்கின் புதிய ஒலி மற்றும் மின்னொளி கட்டமைப்பை தாபித்தல்.
- போகம்பரை மைதானத்தின் பிரதான பார்வையாளர் அரங்கத்தை சரியான முறையில் திசைப்படுத்தல்
- வெளியக, உள்ளக விளையாட்டரங்குகளின் மின்சாரக் கட்டமைப்பை (Electrical power system) மேம்படுத்தல்.
- போகம்பரை மைதானத்திற்கு செயற்கை ஓடு பாதையொன்றை அமைத்தல்.
- உள்ளக விளையாட்டரங்கின் MVAC கட்டமைப்பை இற்றைப்படுத்தல்.
- சிறிய உள்ளக விளையாட்டரங்கொன்றை(Mini Indoor) நிர்மாணித்தல்.

2. மனித மூலதன அபிவிருத்தி

மானிட அபிவிருத்தித் திட்டங்களின் மூலமாக பயிற்சிப் பாடநெறிகள் வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைகள், செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல், ஊழியர் ஊக்குவிப்புக்கள், வினைத்திறன் மேம்பாடு மற்றும் மனப்பாங்கு ரீதியிலான மாற்றங்களுடன் திருப்தியுடன் சேவையிலீடுபடுதல்.

3. விளையாட்டுத்துறைக் கல்வி மற்றும் பொது சுகாதார விருத்தி

பாடசாலை பிள்ளைகளுக்கு விளையாட்டுப் பயிற்சித் திட்டங்களை நடாத்துதல், விளையாட்டுத்துறை வசதிகள் சம்பந்தமாக அறிவூட்டல்கள் மற்றும் வெளியக உடற்பயிற்சித் திட்டங்களை நடாத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் மூலமாக ஆரோக்கியமான சந்ததியொன்றை தோற்றுவித்தல்.

முன்னேற்றம் - 2021

2021 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்படும் விளையாட்டுத்துறை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அதனுடன் தொடர்பான பௌதிக முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

	நிகழ்ச்சித் திட்டம் / கருத்திட்டம்	பௌதிக முன்னேற்றம்
01	வெளியக விளையாட்டரங்கின் உருக்கு எல்லை வேலியை நிர்மாணித்தல்	98%
02	வெளியக விளையாட்டரங்கின் உருக்கு வேலி, பிரதான நுழைவாயில் சார்ந்த நிர்மாணிப்புக்கள்	70 %
03	வெளியக விளையாட்டரங்கின் எல்லை வேலியை நிர்மாணித்தல்	55%
04	போகம்பரை விளையாட்டரங்கின் பிரதான நுழைவாயில் கதவை நிர்மாணித்தல்- கட்டம் 2	100%
05	விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்	20%
06	விளையாட்டரங்கின் புனரமைப்புப் பணிகள் (உணவக மற்றும் ஊடக கட்டிடங்கள் புனரமைப்பு)	20%

2.2 சவால்கள்

- 2021 ஏப்ரல் மாதம் முதல் Covid-19 தொற்று நோயின் மூன்றாவது அலை நாடு பூராவும் பரவியதுடன் விளையாட்டு நடவடிக்கைகளுக்காக சுகாதார அமைச்சினால் சுகாதார வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டமையின் காரணமாக விளையாட்டு நிகழ்ச்சிகளை நிறுத்த வேண்டியேற்பட்டமை.
- அத்தோடு 2021 ஆம் ஆண்டில் முறைமாற்று சேவை முறையில் ஆளணியை அலுவலகத்திற்கு அழைத்து வாரத்தில் குறைந்தது 03 தினங்கள் மாத்திரம் அலுவலக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏனையோரது பணிகளை வீட்டிலிருந்தவாறு நிறைவேற்றிக்கொள்ளப்பட்டது.
- பதவிநிலை அலுவலர் சேவையில் வெற்றிடங்கள் நிலவுகின்றமையினால் தீர்மானமெடுத்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டமை.
- அரசாங்கத்தினால் பொது மக்களுக்கு வழங்குவதற்காக திட்டமிடப்பட்ட தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டம் கொழும்பு நகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள அரசாங்க நிறுவனமொன்று என்ற வகையில் இந்த அதிகார சபையை (உள்ளக மற்றும் வெளியக விளையாட்டரங்குகள்) தெரிவு செய்திருந்தமையினால் யூன் மாதம் முதல் செப்தெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் தடுப்பூசி வழங்கும் திட்டத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கியமை.

2.3 எதிர்கால இலக்குகள்

- அரசாங்கத்துக்குச் சுமையல்லாத நிறுவனமொன்று என்ற வகையில் வர்த்தகத் திட்டமொன்றினூடாக வருமானம் உழைப்பதற்கான இடைக்கால அபிவிருத்தித் திட்டமொன்றை தயாரித்து விளையாட்டு வசதிகள் மற்றும் அதிகார சபையில் நிலவும் அனைத்து வருமான வழிகளுக்கும் (மூலங்களுக்கும்) போட்டி அடிப்படையிலான விலையிடல் உத்திகளை தயாரித்து அதனூடாக வருமானத்தை அதிகரித்துக்கொள்ளல் மற்றும் சுயமாக இயங்க முடியுமான நிறுவனமொன்றாக மாறுதல்.

- நவீன தொழில்நுட்பத்துடன் இயைந்து செயற்படல் ஊடாக வினைத்திறன் மிக்க மற்றும் தரமான சேவையொன்றை வழங்குதல். (உ - ம்: இலத்திரனியல் நேரத்தை அளவிடும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.)

.....

நிறுவனத் தலைவர்
பெயர் :
பதவி :
திகதி :

03 - ஆண்டிற்கான மொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 வருமானம், செலவுக் கூற்று (2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான)

பாதீடு (நடப்பு ஆண்டு)		2021.12.31	2020.12.31
59,129,300.00	தொழிற்பாட்டு வருமானம்	52,688,269	49,973,357
	தொழிற்பாடு அல்லாத வருமானம்	1,241,474	892,396
59,129,300.00		**53,929,742**	**50,865,753**
319,000,000.00	அரசாங்க திறைசேரி நிதி ஏற்பாடு	**264,647,000**	**257,820,000**
378,129,300.00	**மொத்த வருமானம்**	**318,576,742**	**308,685,753**
	செலவுகள்		
	தொழிற்பாட்டுச் செலவினம்		
181,711,000.00	ஊழியர் வேதனச் செலவு	183,453,841	186,553,786
-	முகாமைத்துவ சபையின் படிகள் மற்றும் செலவுகள்	363,000	247,500
3,000,000.00	பணிக்கொடை ஒதுக்கீடு	7,209,380	3,464,795
-	தேய்மானம்	118,449,630	117,974,703
123,481,000.00	ஏனைய செலவுகள்	89,430,944	81,222,295
308,192,000.00		**398,906,794**	**389,463,078**
69,937,300.00	**தொழிற்பாட்டு மேலதிகம் (குறைவு)**	**(80,330,052)**	**(80,777,325)**
(830,000.00)	நிதிசார் செலவுகள்	(124,250)	(90,225)
69,107,300.00	**வரிக்கு முன்னரான மேலதிகம் (குறைவு)**	**(80,454,302)**	**(80,867,550)**
	கூட்டுக (தொழிற்பாடு அல்லாத வருமானம்)		
-	நிலையான வைப்பு வட்டி வருமானம்	2,879,591	4,233,581
-	**வரிக்கு முன்னரான தேறிய மேலதிகம் (குறைவு)**	**(77,574,711)**	**(76,633,968)**
-	**வருமான வரி**	-	(330,219)
	ஆண்டின் மேலதிகம் (குறைவு)	**(77,574,711)**	**(76,964,187)**

ஐந்தொகைக் கணக்கு (2021.12.31 ஆம் திகதியன்றுள்ளவாறு)

நடைமுறைச் சொத்துக்கள்	2021.12.31 (ரூபா)	2020.12.31 (ரூபா)
காசு மற்றும் வங்கி மீதி	91,655,712	99,890,505
கடனாளிகள்	31,019,029	25,222,264
இருப்பு	8,616,717	10,578,505
ஆளணிக்கான 10 மாத சம்பளக் கடன் வழங்கல்	25,265,055	27,477,246
ஏனைய பெறப்பட வேண்டிய மீதிகள்	36,504,731	32,994,623
பணிக்கொடை நிதியம்	5,484,698	5,322,801
நிலையான வைப்பு	49,507,628	45,718,331
	248,053,570	**247,204,276**
நடைமுறையல்லாத சொத்துக்கள்		
காணிகள்	2,856,612,140	2,856,612,140
கட்டிடங்கள்	2,168,601,724	2,141,979,790
ஒளியூட்டல் கம்பங்கள்		
மின் குமிழ்கள்	29,223.82	112457.16
இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள்	41,230,169	52,311,425
கணனி	1,372,117	739,775
மோட்டார் வாகனங்கள்	4,909,305	5,584,203
விளையாட்டு உபகரணங்கள்	44,970,896	52,886,409
மரத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்	46,679,831	52,579,222
அலுவலக மற்றும் ஏனைய உபகரணங்கள்	6,883,215	8,018,621
திரை சீலை	174,674	-
மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள்	210,365,597	302,140,214
	5,381,828,891	**5,472,964,256**
மொத்த சொத்துக்கள்	**5,629,882,461**	**5,720,168,533**

மூலதனப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்		
நடைமுறைப் பொறுப்புக்கள்		
வர்த்தக கடனாளிகள்	2,378,287	2,445,002
பாதுகாப்பு வைப்பு	3,100,810	16,675,900
முன்னைய வருமானம்	250,000	250,000
வரி ஒதுக்கீடு	1,563,189	2,240,407
அட்டுறு செலவுகள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய செலவுகள்	12,542,532	18,014,528
செலுத்த வேண்டிய ஏனையவை	135,224,036	160,333,807
	155,058,854	**199,959,645**
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்		
பணிக்கொடை படிகள்	87,881,335	82,147,340
	87,881,335	**82,147,340**
மொத்தப் பொறுப்புக்கள்	**242,940,189**	**282,106,986**
தேறிய சொத்துக்கள்	**5,386,942,272**	**5,438,061,547**
தேறிய சொத்துக்கள் / மூலதனப் பங்குகள்		
அரசாங்க மானியம்	7,361,762,609	7,346,762,609
திரட்டிய நிதியம்	(1,906,580,277)	(1,841,071,525)
மீள் மதிப்பீட்டு மேலதிகம்	9,334,652	9,334,652
ஆண்டின் மேலதிகம் / குறைவு	(77,574,711)	(76,964,188)
மொத்த மூலதன பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்	**5,386,942,272**	**5,438,061,547**

3.4 காசுப் பாய்ச்சல் கூற்று (2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான)

	2021.12.31 (ரூபா)	2020.12.31 (ரூபா)
தொழிற்பாட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்கள்		
ஆண்டிற்கான மேலதிகம் / (குறைவு)	**(77,574,711)**	**(76,964,187)**
நிதியல்லாத சீர்படுத்தல்கள்		
தேய்மான சீர்படுத்தல்கள்	118,449,630	117,974,703
பணிக்கொடைக்கான ஒதுக்கீடு	7,209,380	3,464,795
(அதிகரிப்பு) / குறைவு இருப்பு	1,961,789	2,547,124
(அதிகரிப்பு) / குறைவு பெறப்பட வேண்டிய மீதி	(7,256,578)	70,320,391
(அதிகரிப்பு) / குறைவு செலுத்த வேண்டிய மீதி	(44,900,790)	(56,893,632)
(அதிகரிப்பு) / குறைவு பணிக்கொடை படிகள்	1,122,855	-
பணிக்கொடை படிகள் கொடுப்பனவு	(2,598,240)	(3,464,795)
தொழிற்பாட்டு செயற்பாடுகளிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	**(3,586,666)**	**56,984,397**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்கள்		
சொத்துக்கள், பொறிகள் மற்றும் இயந்திர சாதனங்கள் கொள்வனவு	(27,314,265)	(211,873,754)
நிலையான வைப்புக்களில் முதலீடு	(3,789,297)	(4,400,975)
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசு மீதி	**(31,103,562)**	**(216,274,729)**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
முன்னைய ஆண்டின் சீர்படுத்தல்	11,455,436	-
அரசாங்கத்தின் மூலதன மானியங்கள்	15,000,000	242,300,000
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசு மீதி	**26,455,436**	**242,300,000**

காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் தேறிய அதிகரிப்பு	**(8,234,792)**	**83,009,668**
ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை	**99,890,506**	**16,880,838**
ஆண்டிறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதி	**91,655,712**	**99,890,506**

பக்க இலக்கம் ...முதல் ... வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்கு பற்றிய தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் ... முதல் ... வரை உள்ளடங்கியுள்ள கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலே இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளதெனவும், அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....	.....
ரவீந்திர சமரவிக்ரம	**ஜீ.கே.எஸ்.எல்.ராஜதாச**	**டப்.எம்.பீ.எஸ்.பண்டார பியதாச**
செயலாளர்	தலைவர்	உதவிப் பணிப்பாளர் (நிதி)
கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு		

3.5 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

3.6 வருமானம் சேகரிப்பு செயலாற்றுகை

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	அளவு (ரூ.)	இறுதி வருமான மதிப்பீட்டின் % ஆக
2002.01.01	அரசாங்க இல்லங்கள் மற்றும் கட்டிட வாடகை	19,553,000	19,553,000	17,726,654	90.66
2002.02.01	கடனுக்கான வட்டி	-	-	975,238	-
2003.02.99	நானாவித வருமானம்	5,432,300	5,432,300	1,281,202	23.58
2004.01.00	மத்திய அரசாங்கம் (விதவைகள் மற்றும் அநாதைகள்)				
	விளையாட்டு மைதானக் கட்டணம்	21,780,000	21,780,000	25,056,380	115.04
	சேவைக் கட்டணம்	492,000	492,000	364,560	74.10
	வாகனங்கள் நிறுத்துமிடக் கட்டணம்	11,872,000	11,872,000	9,124,125	76.85

3.7 ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு பயன்பாட்டின் செயலாற்றுகை

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு		உண்மையான செலவினம்	பயன்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு, ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் % ஆக
	ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு		
மீண்டெழும்	440	309	264.65	85.65
மூலதனம்	889	466	55.59	11.93

3.8 நி.பி. 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இந்த திணைக்களத்திற்கு / மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு

தொடர் இல.	அமைச்சு / திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு		உண்மை செலவினம்	பயன்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு,வழங்கப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் % ஆக
			ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
-	-	-	-	-	-	-

3.9 நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கைப்படுத்தல் செயலாற்றுகை

சொத்துக்கள் குறியீடு	குறியீட்டின் விபரம்	2021.12.31ஆம் திகதியன்று பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கைக்கமைய மீதி	2021.12.31 திகதியன்று நிதி நிலைமை அறிக்கைக்கமைய மீதி	எதிர்காலத்தில் கணக்கீட்டுக்குரிய	முன்னேற்றத்தை % ஆக அறிக்கைப்படுத்தல்
9151	கட்டிடங்கள் மற்றும் அமைப்புக்கள்	2,109,936,272	2,109,936,272		100%
9152	இயந்திர சாதனங்கள்	52,311,425	52,311,425		100%
9153	காணிகள்	2,856,612,140	2,856,612,140		100%
9154	அருவச் சொத்துக்கள்	-	-		100%
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-		100%
9160	மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்	302,140,214	302,140,214		100%
9180	குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள்	32,043,518	32,043,518		100%
	கணனி	739,775	739,775		100%
	மோட்டார் வாகனம்	5,584,203	5,584,203		100%
	தளபாடங்கள், பொருத்துகை	52,579,222	52,579,222		100%
	உபகரணங்கள்	61,017,487	61,017,487		100%

04. செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டி

குறிப்பீட்டுச் சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	%90-%100	**%89-%75**	**%74-%50**
01. சுகததாச அதிகார சபையின் சேவை வழங்கும் நிலையங்களின் பயன்பாட்டின் சதவீதப் பெறுமதி (Occupancy Rate)			√
02. வாடிக்கையாளர் திருப்தி			√
03. இலாப சதவீதம்			√

**** குறிப்பு -** 2021 ஆம் ஆண்டில் மீண்டும் உலகளாவிய தொற்று நோயாக இருந்த கொவிட் 19 காரணமாக நீண்ட காலமாக மாகாணங்களுக்கிடையிலும் மாவட்டங்களுக்கிடையிலும் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையும், விளையாட்டு நடவடிக்கைகளுக்காக சுகாதார அமைச்சினால் விதிக்கப்பட்டிருந்த சுகாதார பாதுகாப்பு முறைகள் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டமையினால் விளையாட்டு மைதான வசதிகளைப் பெற்றுக்கொள்ளுதல் குறைந்த மட்டத்திலேயே நிலவியது. ஆரம்பத்தில் வெளியக விளையாட்டுக்கள் மாத்திரம் நடைபெற்றமையினால் அதிகார சபையின் வருமானம் பாரியளவில் வீழ்ச்சியடைவதற்கு காரணமாக இருந்தது. எனவே, அதிகார சபையின் குறிப்பீட்டுச் சுட்டிகளின் எதிர்பார்த்த வெளியீட்டை சதவீதமாக நோக்கும்போது உண்மையான வெளியிடு குறைந்த பெறுமதியிலேயே நிலவியது.

அத்தியாயம் - 05 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடுக.

இலக்கு /குறிக்கோள்	இலக்கு	அடைவுக் குறிகாட்டிகள்	இதுவரை அடையப் பெற்றுள்ள முன்னேற்றம்		
			0%-49%	50%-74%	75%-100%
ஆரோக்கியமான சந்ததியொன்றை தோற்றுவித்தல் மற்றும் அனைத்து வயதினரினதும் சிறப்பான இருப்பை விருத்தி செய்தல்.	வாடிக்கையாளர் திருப்தியை அதிகரித்தல்	வாடிக்கையாளர் திருப்தி		√	
	சுகததாச அதிகார சபையின் அனைத்து வசதிகளினதும் தரத்தை அதிகரித்தல்	சேவைகளை வழங்கும் நிலையங்களின் பயன்பாட்டின் சதவீதப் பெறுமதி		√	
	மொத்த வருமானத்தை அதிகரித்தல் மற்றும் செலவைக் குறைத்தல்	இலாப சதவீதம்		√	

நிறுவனத்திற்கான பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளன. அதற்காக நிறுவனத்தின் அலுவல்களினூடாக மறைமுகமான தாக்கம் ஏற்படுகின்றது. எனவே நிறுவனத்தினால் நிறைவேற்றப்படும் அலுவல்களுக்கமைய இலக்குகள், குறிகாட்டிகள் மற்றும் வெற்றிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக.

அத்தியாயம் - 06 மனித வளங்கள் பற்றிய விபரம்

6.1 ஆளணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ள ஆளணி	வெற்றிடம் /)மேலதிகம்(**
சிரேட்ட	10	05	05
மூன்றாம் நிலை	13	07	06
இரண்டாம் நிலை	77	58	19
ஆரம்ப நிலை	279	229	50

6.2 ** நிறுவனத்தின் செயலாற்றுகையின் நிமித்தம் மனித வளங்கள் பற்றாக்குறை அல்லது மேலதிகம் எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளதென்பதனை சுருக்கமாகக் குறிப்பிடவும்.

மேலே குறிப்பிடப்பட்ட ஆளணியை முகாமைப்படுத்தும்போது மனித வளங்கள் பற்றாக்குறைக்கு 2019 ஆம் ஆண்டிலிருந்து நிலவிய வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்களை ஆரம்பித்தபோதிலும் அந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றமையும், 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மீண்டும் பொதுத் தேர்தல் நடைபெற்றமையினால் நிதி அமைச்சினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனைத்து ஆட்சேர்ப்புக்களையும் இடைநிறுத்துதல் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கமையவும் ஆட்சேர்ப்பை மேற்கொள்ள முடியவில்லை.

ஆனாலும் 2020 ஆம் ஆண்டிறுதியில் ஆட்சேர்ப்புக்கு அனுமதி வழங்கப்பட்டு சுற்றறிக்கை வெளியிடப்பட்ட போதிலும் கொவிட் 19 காரணமாக அலுவலக நடவடிக்கைகளை வழமைபோல நடாத்துவதற்கு சிரமமாக இருந்தமையினால் வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பு செயற்பாடும் தாமதமாகியது. உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் 2021 ஆம் ஆண்டின் யூலை மாதம் முதல் ஆரம்ப தரப் பதவிகளில் நிலவிய வெற்றிடங்களுக்கு நானாவித அலுவல்கள் அபிவிருத்தி படையணியினால் 14 பயிற்சி பெற்ற ஊழியர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். தற்போது ஆட்சேர்ப்புக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளமையினால் ஏனைய பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள முடியாதுள்ளது.

6.3 மனித வளங்கள் அபிவிருத்தி

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	காலப் பகுதி	மொத்த முதலீடு)ரூ."000)		நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு) உள்நாட்டு/ வெளிநாட்டு(	வெளியீடு /பெற்றுக் கொண்ட அறிவு *
			உள்நாட்டு	வெளி நாட்டு		
Certificate Course in Conveyancing	01	2021.01.08 முதல் 10 நாட்கள்	13,500.00	-	உள்நாடு	
சேதங்கள், நட்டங்கள் மற்றும் நி.ஒ. 104 இன் கீழான விசாரணைகள்	02	2021.11.02	10,000.00	-	உள்நாடு	

அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்கு விதிகள்	02	2021.11.11 மற்றும் 12	20,000.00	-	உள்நாடு	
வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு	02	2021.11.12, 19 மற்றும் 26	30,000.00	-	உள்நாடு	
அரச ஊழியர்களின் சம்பளத்தை தயாரித்தல்	02	2021.11.29	10,000.00	-	உள்நாடு	
National Labour Law Symposium	01	2021.12.14	9,250.00	-	உள்நாடு	
வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை	17	2021.03.22 மற்றும் 2021.07.28	69,550.75	-	உள்நாடு	

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது(	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதனை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
1	**பின்வரும் நிதி அறிக்கைகள் /கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு	இணக்கமற்றது	பகுதி அரச நிறுவனம்	
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள்(வர்த்தக முற்பணக் கணக்குகள்)	ஏற்புடையதன்று		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	ஏற்புடையதன்று		
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	இணக்கமற்றது	பகுதி அரச நிறுவனம்	
1.6	ஏனையவை	-		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணல் (நி.பி.445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இற்கமைய நிலையான சொத்துக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்.	இணக்கமானது		
2.2	ஆளுக்கான வேதனாதிகள் ஆவணங்கள / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்குப் பொழிப்புக்களை) CIGAS) தயாரித்து உரிய தினத்தில் திறைசேரிக்கு சமர்ப்பித்தல்	இணக்கமற்றது	பிறிதொரு மென்பொருள் முறைமையொன்றைப் பயன்படுத்தல்	
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.7	பொருட்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.8	இருப்புக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.9	இழப்புக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.10	பொறுப்புக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
2.11	அடிக்கட்டை புத்தகங்கள் பதிவேட்டை) GA - N20) இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		

3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல்) நி.பி..135)**			
3.1	நிறுவனத்தினுள் நிதிசார் அதிகாரங்கள் பகிரப்பட்டிருத்தல்	இணக்கமானது		
3.2	நிறுவனத்தினுள் நிதிசார் அதிகாரங்கள் பகிரப்பட்டிருத்தல் சம்பந்தமாக அறிவுறுத்தப்பட்டிருத்தல்	இணக்கமானது		
3.3	அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதனிலும் அதிகளவிலான அலுவலர்கள் ஊடாக அனுமதிக்கப்படும் வகையில் ஒப்படைக்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
3.4	2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கமைய, அரசாங்க ஊதியங்கள் மென்பொருள் பெக்கேஜை பயன்படுத்தும்போது கணக்காளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்ளல்	இணக்கமானது		
4	**வருடாந்த திட்டத்தை தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்வனவு (பெறுகை) திட்டத்தை தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிபீட்டைத் தயாரித்து தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு) NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்றை உரிய திகதியன்று திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
5	**கணக்காய்வு ஐய வினாக்கள்**			
5.1	கணக்காய்வாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்ட திகதியன்று அனைத்துக் கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் அளித்தல்	இணக்கமானது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி.134 (2) DMA/1-2019இற்கமைய, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்துரையாடியதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயாரித்தல்	இணக்கமானது		
6.2	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில் அளித்திருத்தல்	இணக்கமானது		
6.3	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவுக்கமைய, அனைத்து உள்ளகக் கணக்காய்வு	இணக்கமானது		

	அறிக்கைகளினதும் பிரதிகளை முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருத்தல்			
6.4	நி.பி.134(3) இற்கமைய, அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	DMA 1-2019 சுற்றறிக்கைக்கமைய, குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களையாவது வருடத்தினுள் நடாத்தியிருத்தல்	இணக்கமானது		
8	**ஆதனங்கள் முகாமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க ஆதனங்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவிற்கமைய ஆதனங்கள் கொள்வனவு மற்றும் அகற்றுதல் சம்பந்தமான தகவல்களை கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
8.2	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 13 ஆம் பிரிவிற்கமைய அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்தலை ஒருங்கிணைப்பதற்காக தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமித்து அந்த அதிகாரி சம்பந்தமான தகவல்களை கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிவித்திருத்தல்	இணக்கமானது		
8.3	05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கமைய பொருட்கள் கணக்கெடுப்பை நடாத்தி அந்த அறிக்கையை உரிய திகதியன்று கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
8.4	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகம், குறைபாடுகள் மற்றும் ஏனைய பரிந்துரைகளை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப் பகுதியினுள் மேற்கொண்டிருத்தல்	இணக்கமானது		
8.5	நி.பி. 772 இற்கமைய கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றும் அலுவல் மேற்கொள்ளப்பட்டிருத்தல்	இணக்கமானது		
9	**வாகனங்கள் முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்காக நாளாந்த இயக்க குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை தயாரித்து உரிய திகதியன்று கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		

9.2	கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் அவற்றை அகற்றுதல்	இணக்கமானது		
9.3	வாகனங்கள் பதிவுப் புத்தகங்களை இற்றைப்படுததிப் பேணிவரல்	இணக்கமானது		
9.4	நி.பி. 103, 104, 109 மற்றும் 110 இற்கமைய, அனைத்து வாகன விபத்துக்கள் சம்பந்தமாகவும் அலுவல் மேற்கொள்ளுதல்	இணக்கமானது		
9.5	2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டை மீண்டும் பரீட்சித்தல்	இணக்கமானது		
9.6	குத்தகைக் காலம் முடிவுற்றதன் பின்னர் அந்த வாகனங்களின் பதிவு சான்றிதழை உரிமை மாற்றம் செய்திருத்தல்	இணக்கமானது		
10	**வங்கிக் கணக்குகள் முகாமைத்துவம்**			
10.1	உரிய திகதியன்று வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து அத்தாட்சிப்படுத்தி அவற்றை கணக்காய்வுக்காக சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வாண்டில் அல்லது முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளைத் தீர்த்திருத்தல்	ஏற்புடையதன்று		
10.3	வங்கி இணக்கக் கூற்றுக்களினூடாக வெளிப்படுத்தப்பட்டமற்றும் சீர்படுத்தப்பட வேண்டிய நிலுவைகள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களுக்கமைய அலுவல் மேற்கொண்டு அவற்றை ஒரு மாத காலத்திற்குள் தீர்த்தல்	இணக்கமானது		
11	**நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை அவற்றின் வரையறைக்குட்பட்ட வகையில் செலவு செய்திருத்தல்	இணக்கமானது		
11.2	நி.பி. 94 (1)இன் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் ஆண்டின் இறுதியில் மீதமடையும் நிதி ஏற்பாடுகளின் வரையறைக்குட்பட்ட வகையில் பொறுப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளல்	இணக்கமானது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள்**			
12.1	வரையறைகளுடன் இயைந்திருத்தல்	இணக்கமற்றது	பகுதி அரச நிறுவனம்	
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை சம்பந்தமாக உரிய காலத்தில் பகுப்பாய்வை மேற்கொண்டிருத்தல்	இணக்கமற்றது	பகுதி அரச நிறுவனம்	

12.3	ஒரு வருடத்திற்கும் அதிகளவு காலமாக நிலுவையிலுள்ள கடன்களைத் தீர்த்தல்	இணக்கமற்றது		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்கள் சம்பந்தமாக நி.பி.571 இன் பிரகாரம் அலுவல் மேற்கொண்டிருத்தல்	ஏற்புடையதன்று		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை இற்றைப்படுத்திப் பேணிவரல்	ஏற்புடையதன்று	பகுதி அரச நிறுவனம்	
14	**பணி முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வாண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதி திறைசெரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல்	ஏற்புடையதன்று	பகுதி அரச நிறுவனம்	
14.2	நி.பி.371 இன் படி வழங்கப்பட்ட தற்செயலான இடைக்கால கட்டுநிதி அந்த அலுவல் நிறைவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல்	இணக்கமானது		
14.3	நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மீறாத வகையில் தற்செயலான இடைக்கால கட்டுநிதியை வழங்குதல்	இணக்கமானது		
14.4	பணி முற்பணக் கணக்கின் மீதி, மாதாந்தம் திறைசேரிப் புத்தகங்களுடன் சீர்செய்யப்பட்டிருத்தல்	இணக்கமற்றது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கமைய சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து மீளச் செலுத்தலை மேற்கொண்டிருத்தல்	இணக்கமானது		
15.2	சேகரிக்கப்பட்ட வருமானத்தை வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைத்திருத்தல்	இணக்கமானது		
15.3	நி.பி. 176இன் படி நிலுவை வருமான அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
16	**மனித வளங்கள் முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் பதவியணியை பேணிவரல்	இணக்கமானது		
16.2	பதவியணியில் அனைத்து அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியலை எழுத்து மூலமாக வழங்கியிருத்தல்	இணக்கமானது		
16.3	20.09.2017 ஆம் திகதிய MSD சுற்றறிக்கை 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
17	**பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல்**			

17.1	தகவலுக்கான உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கமைய தகவல் அதிகாரி ஒருவரை நியமித்து தகவல்களை வழங்கும் ஆவணமொன்றை இற்றைப்படுத்திப் பேணிவரல்	இணக்கமானது		
17.2	நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் இணையத்தளத்தினூடாக வழங்கப்பட்டுள்ளதுடன், இணையத்தளத்தினூடாக அல்லது மாற்று வழிகளூடாக நிறுவனம் சம்பந்தமாக பொது மக்களின் பாராட்டு /குற்றச்சாட்டுக்களை வெளியிடுவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்திருத்தல்	இணக்கமானது		
17.3	தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 08 மற்றும் 10 பிரிவுகளுக்கமைய வருடத்தில் இரண்டு தடவைகள் அல்லது ஒரு தடவை அறிக்கைகளை சமர்ப்பித்திருத்தல்	இணக்கமானது		
18	**பிரசைகள் / சேவைபெறுநர் பட்டயத்தை செயற்படுத்தல்**			
18.1	இலக்கம் 05/2008 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்றறிக்கைகளுக்கமைய பிரசைகள் /சேவை பெறுநர் பட்டயமொன்றை உருவாக்கி செயற்படுத்தியிருத்தல்	இணக்கமற்றது		அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
18.2	அச்சுற்றறிக்கையின் 2.3 பந்திக்கமைய, பிரசைகள் /சேவை பெறுநர் பட்டயமொன்றை உருவாக்கி செயற்படுத்தும் அலுவலை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீட்டுக்குட்படுத்துவதற்காக நிறுவனத்தினால் முறையொன்றை தயாரித்திருத்தல்	இணக்கமற்றது		
19	**மனித வளங்கள் திட்டத்தை தயாரித்தல்**			
19.1	2018.01.24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் இணைப்பு 02 படிவத்திற்கமைய மனித வளங்கள் திட்டமொன்றை தயாரித்திருத்தல்	இணக்கமானது		
19.2	பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் வருடத்தில் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சிக்கான வாய்ப்பை மேலுள்ள மனித வளங்கள் திட்டத்தில் உறுதிப்படுத்தியிருத்தல்	இணக்கமானது		

19.3	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கமைய மொத்தப் பதவியணிக்காக வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டிருத்தல்	இணக்கமானது		பதவிநிலை அலுவலர்களுக்காக 2022 ஆம் ஆண்டில் செயலாற்றுகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.
19.4	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்திக்கமைய மனித வளங்கள் அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல், திறன் அபிவிருத்தி திட்டங்களை மேம்படுத்தல், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் சம்பந்தமாக பொறுப்புக்களை ஒப்படைத்து சிரேட்ட அதிகாரி ஒருவரை நியமித்திருத்தல்	இணக்கமானது		
20	**கணக்காய்வுப் பந்திகளுக்கு பதில் அளித்தல் (பொறுப்புக்கள்)**			
20.1	முன்னைய ஆண்டிற்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு பந்திகளின் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சீர்செய்திருத்தல்	இணக்கமானது		

முற்றும்